# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 474 பிலவ வருடம், மாசி மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை (09.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 05, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30




## கொழும்பு வருகிறார் மோடி; யாழ். செல்லவும் ஏற்பாடு

02 பக்கம்

## ஹாலிஎலயில் மாணவி படுகொலை

### மகளிர் தினத்தில் துயரம்



02 பக்கம்

# 3,000 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்



- வங்கிகள் கடன் கடிதங்களை விடுவிக்காததால் இந்த நிலைமை
- நிதி நிறுவனங்களின் தரகுப் பணம் அதிகரிப்பு
- அரசின் தவறான அறிவிப்புகளும் ஒரு காரணம்

•யோ.தர்மராஜ்

மத்திய வங்கியினால் டொலர் வழங்கப்படாதமையினால் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக அத்தியாவசிய உணவுப்பொருட்கள் இறக்குமதி வியாபாரிகள் சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று மாலை தெரிவித்தார்.

அத்தோடு, இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலரின்... 02 பக்கம்

# அனைத்துத் துறைகளிலும் வரவிருக்கும் பேராபத்து!


### உடனடி நடவடிக்கை அவசியமென 12 பிரதான தனியார்துறை கூட்டமைப்பு அரசிடம் வலியுறுத்து

•நமது விசேட செய்தியாளர்

நாட்டில் அந்நிய செலாவணி குறைவடைதல், டொலர்களுக்கான தட்டுப்பாடு, மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகத்தில் இடையூறு ஆகியவற்றால் நாட்டில் அனைத்துத் துறைகளிலும் மிக விரைவில் பெரும் ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாக 12 பிரதான தனியார்துறைகளை உள்ளடக்கிய கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாளை மோசமான விளைவை எதிர்கொள்வதைவிட இன்றே பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது சிறந்ததென அந்தக் கூட்டமைப்பு அரசுக்கு நிலைமையை விபரித்துள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனம், வணிக தொழிற்றுறை... 02 பக்கம்



# மொட்டுடன் தேர்தலா? இனி பேச்சுக்கே இடமில்லை

### அடித்துக் கூறுகிறார் மைத்ரி

•யோ.தர்மராஜ்

நாட்டில் எதிர்காலத்தில் இடம்பெறும் எந்தவொரு தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடக் கூடாது என்ற கட்சியினரின் நிலைப்பாட்டிலேயே தானும் இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடிகள் குறித்து ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



மஹிந்தவுக்கு அப்பம் தீத்தினார் மைத்ரி...
கோட்டாவுக்கு என்னவோ....?



அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் மற்றும் அனைத்து மக்களுக்குமான நீதி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்ட இக்கலந்துரையாடலில், எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் பங்கேற்றிருந்தார்.

# அத்தியாவசியமற்ற பொருள் இறக்குமதிக்கு கட்டுப்பாடு

### மத்திய வங்கியின் பரிந்துரைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

•யோ.தர்மராஜ்

மத்திய வங்கியினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைய, 600 வரையான பொருட்களை இறக்குமதி செய்ய கட்டுப்பாடு விதிப்பதற்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

02 பக்கம்



## பூநகரியை இரவுவேளைகளில் ஆராய்ச்சிசெய்யும் மர்ம நபர்கள்

### விபரம் வெளிப்படுத்தப்பட வேண்டுமென சிறீதரன் எம்.பி. சபையில் கோரிக்கை

•ம.சுசிகலா

கிளிநொச்சி, பூநகரி பகுதியில் நிலத்தையும் மண்ணையும் மர்ம நபர்கள் இரவில் ஆராய்ச்சி செய்வதாக சபையில் நேற்று குற்றஞ்சாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அவர்கள் பற்றிய... 02 பக்கம்



## 'ஞானா' அக்காவின் பேச்சைக் கேட்டு ஆட்சிசெய்யும் ஜனாதிபதி கோட்டா

### ரோஹிணி குமாரி எம்.பி. சபையில் சாடல்

"ஜனாதிபதியின் வீட்டுக்கு ஹிருணிகா சென்றிருக்கக் கூடாது. அநுராதபுரத்திலுள்ள 'ஞானா' அக்காவின் வீட்டுக்கு சென்றிருக்க வேண்டும். ஏனெனில் இப்போது ஜனாதிபதி அந்த அக்காவின்... 02 பக்கம்



### உஷ்


ஆளுங்கட்சியின் எம்.பிக்கள் திஸ்ஸ குட்டியாராச்சி, கீதா குமாரசிங்க, டயானா கமகே ஆகியோர் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

அதேபோல காஞ்சன விஜேசேகர, ஷெஹான் சேமசிங்க, ரொஷான் ரணசிங்க ஆகியோரை அமைச்சர்களாக நியமிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசொன்றுக்கு செல்வது குறித்தும் ஆளுங்கட்சி மேல்மட்டத்தில் ஆராயப்படுகிறது. ஆனால் இன்னமும் இறுதி முடிவில்லை. ரணிலுடன் சேரவேண்டாமென ஆளுங்கட்சிக்குள் குரல் எழுந்துள்ளதாம்.

## இரு மாதங்களில் 02 இலட்சம் உல்லாசப் பயணிகள் நாட்டுக்கு

### ரஷ்ய, உக்ரைன் நாட்டவர்களுக்கு விசேட ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாக சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் தெரிவிப்பு



•கே.சுபானி

இலங்கைக்கு ஜனவரி முதல் நேற்றுவரையான காலப்பகுதிக்குள் இரண்டு இலட்சத்து நான்காயிரத்து 345 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின்... 02 பக்கம்

## சு.க. - கோட்டா சந்திப்பு

### சர்வகட்சி மாநாட்டுக்கு இணக்கம்

•யோ.தர்மராஜ்

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு சர்வகட்சி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

02 பக்கம்

## இராஜாங்க அமைச்சர் ஜயந்த இராஜினாமா

### விமல் அணிக்கெதிராக மோசமான சூழ்ச்சிகள் இடம்பெறுவதாகவும் குற்றச்சாட்டு



•யோ.தர்மராஜ்

தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரும் களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான ஜயந்த சமரவீர... 02 பக்கம்

# பொதுப்பயன்பாடுகள், லிட்ரோ தலைவர்களை பதவி நீக்குக!

## அமைச்சர்கள், ஆளுங்கட்சி எம்.பிக்கள் கோரிக்கை

**யோ.தர்மராஜ்**

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் ஆகியவற்றின் தலைவர்களை உடனடியாக பதவி நீக்குமாறு அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி எம்.பிக்கள் அரச உயர்பீடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

அதன்படி, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மற்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் துஷார ஜயசிங்க ஆகியோரை உடனடியாக பதவியில் இருந்து நீக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி நெருக்கடி தொடர்பில் ஜனக ரத்நாயக்கவின் கருத்துகளால், மக்கள் மத்தியில் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், மக்கள் பிரதிநிதிகளான தாங்களும் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அமைச்சர்களும் எம்.பிக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். இதேவேளை, எரிவாயு நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய லிட்ரோ நிறுவனத்தின் தலைவரையும் பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

### ‘ஞானா’ அக்காவின்...

பேச்சைக் கேட்டுத்தான் ஆட்சி நடத்துகிறார்” - இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி கவிரத்ன. நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் எரிவாயு வெடித்து பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாது பெற்றோர் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

இன்று பால்மா, எரிவாயு பெற்றுக்கொள்ளவும் வரிசையில் காத்திருக்க வேண்டியதுடன், பணிக்குச் செல்ல போக்குவரத்து இன்றியும் மின்சாரம் இன்றியும் தவிக்கும் துர்ப்பாக்கிய நிலைமைக்கு பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினைகளை கூறவே ஹிருணிகா பிரேமசந்திர மிரஹானவிலுள்ள ஜனாதிபதியின் வீட்டுக்குச் சென்றார். ஆனால், அவரை கொலை செய்வதற்கு ஆட்களை அனுப்பியுள்ளதுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்துக்கும் முட்டை வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஆனால், 15ஆம் திகதி அனைத்து பெண்களையும் அழைத்து வந்து கொழும்பை முற்றுகையிட்டு, போராட்டம் நடத்துவோம். முடிந்தால் அதனை தடுத்து நிறுத்துங்கள் என ஜனாதிபதிக்கு சவால் விடுக்கின்றேன்.

இதேவேளை, ஹிருணிகா நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள். அன்று நீங்கள் மிரிஹானவுக்குச் செல்லாது அநுராதபுரத்திலுள்ள ‘ஞானா’ அக்காவின் வீட்டுக்கே சென்றிருக்க வேண்டும். மற்றவர்கள் கூறுவதை ஜனாதிபதி கேட்கமாட்டார். மாறாக, அந்த அக்கா கூறுவதையே கேட்கின்றார்.

ஆகவே, அடுத்த முறை உங்களிடம் வரும்போது, பால்மா இன்றி குழந்தைகள் தவிக்கின்றன, பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், உணவின்றி மக்கள் தவிக்கின்றனர் மற்றும் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது என்பதை ஜனாதிபதியிடம் கூறுமாறு ‘ஞானா’ அக்காவிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

### கொழும்பு வருகிறார் மோடி:...

பிம்ஸ்டெக் எனப்படும் வங்கக் கடல் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பில் நடக்கவுள்ள நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அதில் கலந்துகொள்ள இலங்கை வரவுள்ளார்.

இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு கடுமையாக சரிந்துள்ளது. இதனால், எரிபொருள், அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத அளவுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து விடுபட, இலங்கை அரசு, இந்தியா உள்ளிட்ட நாடுகளின் உதவியை கோரியுள்ளது. இந்த சூழ்நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இம்மாத இறுதியில் இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள மோடி, அங்கு இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்திய கலாசார நிலையத்தினை திறந்துவைக்கவுள்ளாரென தெரிவிக்கப்படுகின்ற அதேவேளை, தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களை மோடி கொழும்பில் சந்திப்பாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

### இராஜாங்க அமைச்சர்...

தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் (07) முதல் அமுலாகும் வகையில் குறித்த பதவிகளிலிருந்து இராஜினாமா செய்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச, ஜனாதிபதியினால் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நிலையிலேயே ஜயந்த சமரவீரவும் பதவி விலகியுள்ளார். இந்நிலையில், தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் அனைவரும் அரசாங்கத்தின் பதவிகளில் இருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதவி விலகியதையடுத்து நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கவும் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதற்கும் போராடிய சக்திகளுக்கு எதிராக எங்களுடைய அரசாங்கத்தில் மோசமான சூழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

நாட்டின் நெருக்கடிகளிலிருந்து மக்களை மீட்கும் பொறுப்புகளிலிருந்து பங்காளிக் கட்சிகளுக்கு விலக முடியாது என்ற நம்பிக்கை கொண்டு பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்காக 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து மாநாடு ஒன்றை நடத்தினோம். அதில் சொல்லப்பட்டதை கவனத்தில் கொள்ளாது, அதற்கு தலைமைத்தாங்கிய அமைச்சர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தனர். இதனை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இதேவேளை, மோசமான அழிவை நோக்கிய பயணத்தில் தேசிய சுதந்திர முன்னணி தொடர்ந்தும் இணைந்து பயணிக்க முடியாது என்பதை தெரிவித்து, களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிலிருந்து நேற்றுமுன்தினம் (07) முதல் விலகுவதாக அறிவித்துள்ளேன்.

எங்களுக்கு அமைச்சுப் பதவிகள் அவசியமில்லை. எனவே, அமைச்சுப் பதவிகளை மாத்திரமல்ல எங்களுடைய உயிரையும் விட்டுக்கொடுக்க தயாராக இருக்கின்றோம். அதன்படி, தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசாங்கத்தில் வகிக்கும் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்துள்ளோம். ஆனால், தேசிய பட்டியலிலிருந்து விலகமாட்டோம் - என்றார்.

### அத்தியாவசியமற்ற...

அதன்படி, 600 அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்யும் சிலவற்றுக்கு அனுமதிப் பத்திரத்தை பெற்று இறக்குமதி செய்வதற்கும் சிலவற்றின் மீதான வரியை அதிகரிப்பதற்கும் அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் வகையில் மத்திய வங்கியினால் அரசாங்கத்துக்கு சில யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, எரிபொருள் விலையை அதிகரித்தல், மின்கட்டணத்தை அதிகரித்தல், வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கல் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசியமற்ற 600 வரையான பொருட்களை இறக்குமதி செய்வதில் வரையறை போன்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த யோசனைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் (07) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன. இதன்போதே 600 வரையான பொருட்களை இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடுகளை விதிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசியமற்ற 600 வரையான பொருட்களை இறக்குமதி செய்யும்போது சிலவற்றுக்கு இறக்குமதிக்கான அனுமதியை பெற்றே இறக்குமதி செய்ய வேண்டும் என்பதோடு, சிலவற்றின் மீதான வரியை அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று (08) அல்லது இன்று (09) வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### அனைத்துத் துறைகளிலும்...

கூட்டமைப்பு, ஆடை உற்பத்தியாளர்கள், இளம் தொழில்முனைவோர் சம்மேளனம், சர்வதேச வர்த்தக சம்மேளனம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம், நிர்மாணத்துறை சம்மேளனம் உள்ளிட்ட பன்னிரண்டு அமைப்புகள் இது தொடர்பில் அரசாங்கத்தை எச்சரித்துள்ளன.

இதேவேளை, நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான நிலைமையிலிருந்து மீள்வதற்கு தேவையான உதவிகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவ்வமைப்புகள் தெரிவித்துள்ளன.

நிர்மாணத்துறைக்கு உரிய மூலப்பொருட்களை இறக்குமதிசெய்ய முடியாததன் காரணமாக அந்தத் துறையிலிருந்த 50 ஆயிரம் ஊழியர்கள் தொழிலை இழந்துள்ளதாக நிர்மாணத்துறை சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நிஸ்ஸங்க என். விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அந்நிய செலாவணி இருப்பு குறைவடைகின்றமை மற்றும் டொலர் நெருக்கடி காரணமாக பல்வேறு துறைகளில் பணியாற்றும் ஆறு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை பாரிய வீழ்ச்சியை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகவும் இந்தக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

### ஹாலி-எலவில்...

**(நா.தினுஷா, என்.மலர்வேந்தன், டீ.அசோக்குமார்)**

சர்வதேச மகளிர் தினமான நேற்று (08) ஹாலி-எலவில் பாடசாலைக்குச் சென்று மீண்டும் வீடு சென்றுக்கொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருவர் கோடரியால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஹாலி-எல உடுவர தோட்ட கீழ்ப் பிரிவைச் சேர்ந்த தர்மராஜ் லிபியா என்றழைக்கப்படும் 18 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாணவியைக் கொலைசெய்ததாக கருதப்படும் உடுவர, வத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர் அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பித்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில், சந்தேக நபரை கைதுசெய்வதற்கான தேடுதல் நடவடிக்கைகள் பொலிஸாரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்ல தெரிவித்துள்ளார். இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ள பாடசாலை மாணவி ஹாலி-எல பகுதி தமிழ் பாடசாலையொன்றில் கல்வி கற்றுவந்துள்ளார். பாடசாலை முடிந்தவுடன் பஸ்ஸில் பயணித்து, பின்னர் அதிலிருந்து இறங்கி உடுவர வலஸ்பெத்த வீதியினூடாக நேற்று வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, மாணவியை இளைஞரொருவர் வழிமறித்து கோடரியால் மாணவியின் தலையில் பலமுறை தாக்கியுள்ளார். அதனையடுத்து மாணவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த மாணவியை சந்தேகநபர் காதலித்து வந்துள்ளதுடன் தனது காதலை சொல்ல பலமுறை முயற்சித்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், கடந்த வருடம் மாணவியின் தாயாரையும் அவரின் சகோதரரையும் கோடரியால் தாக்கிய சம்பவம் தொடர்பில் மத்தியஸ்த சபையில் வழக்கொன்று இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மாணவியின் கொலை தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலம் பதுளை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் ஆலோசனைக்கமைய, ஹாலி-எல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ருவன் குணதிலக்கவின் தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### பூநகரியை இரவு...

விபரம் வெளியிடப்படவேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற புலமைச் சொத்து திருத்தச்சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொன்னாவெளி கிராமம் நீண்டகால பாரம்பரிய வரலாற்றைக்கொண்ட பழம்பெரும் கிரமமாகும். வன்னி என்று சொல்லப்படுவதற்கு அடிப்படையாக இருந்தது இந்த கிராமமாகும். இக்கிராம மக்கள் அத்தியாவசிய வசதிகள் எதுவுமின்றி, இடம்பெயர்ந்து பூநகரியின் பல பகுதிகளில் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்துக்கு அருகில் காணப்படும் கிராமங்களான வேரவில், வலைப்பாடு, பாலாவி, கிராங்கி ஆகிய பேரூர்களில் பூநகரி யின் எல்லையாக பெரிதளவு நிலப்பரப்பில் காணப்படுகிறது. குறித்த பிரதேசங்களில் 2012 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதிகளில் யாரென்றே தெரியாத சில நபர்கள் அவ்விடங்களிலே சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். என்ன ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று கேட்கையில் யாரும் பதிலெதுவும் சொல்லவில்லை. நான் அப்பகுதிக்கு சென்று பார்த்தபோது அவர்கள் மண்ணை, நிலத்தை ஆராய்ச்சி செய்வதாகவும் அதற்கான காரணம் எதுவும் தங்களுக்கு தெரியாதென பதிலளித்தனர். ஆனால் இவ்வாறு தொடர்ந்து நடந்த ஆராய்ச்சிகளில் பல குழாய்க்கிணறுகள் 300 அடி ஆழம் வரையில் தோண்டப்பட்டுள்ளன. அவ்வாறு 300 அடியில் தோண்டப்பட்ட குழாய்க் கிணறுகளிலிருந்து உப்புநீர் வெளியிலே தரைகளுக்கு பாய்ச்சப்பட்டன. மக்களுடைய எதிர்ப்பின் காரணமாக அந்த நடவடிக்கைகள் 2017ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் எமது கோரிக்கைக்கமைய நிறுத்திவைக்கப்பட்டன.

ஆனால், மீண்டும் இவ்வருடம் அப்பகுதிகளில் ஆராய்ச்சி என்ற பெயரில் ஒரு பெரிய குழு இறங்கியுள்ளது. மூன்று வாகனங்களில் இந்த வலைப்பாட்டு கிராமத்தின் எல்லைப் பகுதிகளிலும் வேரவில் கிராமத்தின் எல்லைப்பகுதிகளிலும் மிக இரகசியமாக நுட்பமான முறையில் அவர்களுடைய ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றனர். இதனால் அப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் பெரும் அச்சம் கொள்கின்றனர். அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் கடலோடும், தென்னைப் பயிர்ச்செய்கையோடும் விவசாயத்தோடும் இருக்கிறது. வேரவில் கிராமத்திலே பெரும் பகுதி விவசாயமே மேற்கொள்கின்றனர். கிராஞ்சி தென்னைப் பயிர்ச்செய்கைக்குரிய கிராமம். வலைப்பாடு கடற்றொழிலை மையமாகக்கொண்டது. எனவே இப்பகுதி மக்கள் இந்த ஆராய்ச்சிகளால் இவ்விடத்தை விட்டு செல்லவேண்டி வருமோ என பெரும் அச்சத்துடன் வாழ்கின்றனர். இது சம்பந்தமாக அவர்கள் எழுத்துமூலமாகவும் முறைப்பாடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள் ளனர்.

இதனை யார் செய்கிறார்கள், எதற்காக செய்கிறார்கள் என நாம் பிரதேச செயலாளரிடம் கேட்டால் எனக்கு தெரியாதென்கிறார். அரசாங்க அதிபரும் தனக்கு தெரியாதென கையைவிரிக்கிறார். ஆனால் வருபவர்கள் யார்? இந்த மக்களின் கேள்விக்கு என்ன பதில்? இதனை அரசாங்கம் பிரதேச செயலாளருக்கு ஏன் அறிவிக்கவில்லை? ஏன் இது அரசாங்க அதிபர் மட்டத்தில் பேசப்படவில்லை? அந்த மக்களுக்கு ஏன் இதைப்பற்றிய தெளிவு ஏற்படுத்தப்படவில்லை? மிக மோசமாக இந்த நிறுவனங்கள் நள்ளிரவில் கொள்ளைக்காரன்போல் வந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதால் மக்கள் அச்சப்படுகின்றனர். எனவே இந்த மக்கள் பயமின்றி வாழ வழிசமைக்கவேண்டும். அவர்களுக்கான நீதி அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சு தெளிவுபடுத்தப்படவேண்டுமென இச்சபையிலே நான் முன்வைக்கிறேன்.

இதுபோலவே மன்னார் மாவட்டத்திலும் பாரியளவிலான கனிய மணல் அகழ்வில் ஈடுபடுவதற்கான திட்டம் தீட்டப்படுவதாக பல பத்திரிகை செய்திகள் வாயிலாக அறியமுடிகிறது. முக்கியமாக மன்னார் தீவிலே 38 துளைகள் இடும் நடவடிக்கைகள் முழுமையாக நிறைவடைந்துள்ளதோடு, ஏனைய செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னேறி வருகின்றமை மகிழ்ச்சியளிப்பதாக அவுஸ்திரேலியாவின் தனியார் நிறுவனமான டைட்டேனியம் ஸ்டேண்டர்ஸ் 2022.01.11ஆம் திகதி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஆகவே அவுஸ்திரேலிய நிறுவனம் மன்னாரில் ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறதா? அது தொடர்பில் மன்னார் அரசாங்க அதிபரிடம் வினவினால் தெரியாதென்கிறார். அப்பகுதிக்கு பொறுப்பானவர்களுக்கு இது தொடர்பில் தெரியாது.

இந்நிலையில், அவுஸ்திரேலிய நிறுவனத்துக்கு இவ்வாறான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான உரிமம் எதனையும் தாம் வழங்கவில்லையெனவும் அந்நிறுவனத்தின் நடவடிக்கைகள் சட்ட ரீதியற்றவை எனவும் பகிரங்கமாக மத்திய புவிச்சரிதவியல் அளவை சுரங்கப்பணியகம் தெரிவிக்கிறது. மேலும் இது தொடர்பில் அவுஸ்திரேலிய நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லையெனவும் உள்ளூர் நிறுவனங்கள் ஐந்துக்கு அனுமதி வழங்கியதாக அந்நிறுவனம் தெரிவிக்கிறது. ஆகவே இது ஒரு பகல்கொள்ளை. ஆகவே இது தொடர்பான விளக்கத்தை சம்பந்தப்பட்ட அமைச்சு தெளிவுபடுத்தவேண்டும். இது தொடர்பான பின்புலம் ஜனாதிபதியிடம் இருப்பதாக சந்தேகிக்கிறோம் என்றார்.

### சு.க.- கோட்டா சந்திப்பு...

இதனையடுத்து, அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மைத்ரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள 15 விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. அதன்படி, நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சர்வகட்சி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

அதன்படி, இம் மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்படும். அத்தோடு, சர்வகட்சி மாநாடு மாத்திரமன்று, நிபுணர்களின் சந்திப்பொன்றையும் நடத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் - என்றார்.

### 3,000 கொள்கலன்கள்...

பெறுமதி 230 ரூபாவாக அதிகரித்துள்ளதால் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

டொலரின் பெறுமதி அதிகரிப்பினால் இறக்குமதி செய்யப்படும் கப்பலுக்கான ‘கடன் கடிதம்’ (எல்.சி) விடுவிக்கப்படாதமையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எங்களுக்குத் தேவையான டொலர் கிடைக்காதமையினால் மூவாயிரத்துக்கும் அதிகமான கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. இன்று டொலரின் பெறுமதி 230 ரூபாவாக அதிகரித்துள்ளபோதிலும் வங்கியினால் எங்களுக்கான டொலர்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இதேவேளை, வங்கியானது இறக்குமதிக்கான தரகுப் பணத்தை 7.5 வீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

இதன்காரணமாக இறக்குமதி செலவுகள் மேலும் அதிகரிக்கின்றன. குறிப்பாக, 230 ரூபாவுக்கு 7.5 வீதம் எனும் போது 17.25 ரூபாவாக காணப்படும். அவ்வாறாயின் டொலருக்கான 230 ரூபாவுடன் இறக்குமதித் தரகு வீதத்தையும் சேர்க்கும்போது எங்களுக்கு 247.25 ரூபா செலவாவதாக சுட்டிக்காட்டினார்.

பொருட்களுடன் கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடந்தாலும் கடனுக்கான கடிதம் (எல்.சி) விடுவிக்கப்படாதமை பொருட்களுக்கான நெருக்கடிகளும் ஏற்படுகின்றன. பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படுமா என்பதற்கு அப்பால் முடிந்தவரை அரசாங்கத்துடன் கலந்துரையாடி கொள்கலன்களை விடுவிப்பதற்ககே நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

நாட்டில் எவ்விதப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு என்பதற்கு அப்பால் தவறான அறிவிப்புகளினாலேயே தட்டுப்பாடு ஏற்படுகின்றது. எனவே, அரசாங்கம் டொலர்களை வழங்குமா என்பதை பார்த்துக்கொண்டிருக்காது, மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாதிருப்பதற்காக இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடி கடன்களை பெற்று, இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றதுடன், நாட்டில் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் செயற்படுகின்றதாகவும் அவர் தெரிவித்தார்.

வங்கிகளினால் கடனுக்கான கடிதம் விடுவிக்காத நிலையிலும் அங்குள்ள ஏற்றுமதியாளர்களுக்கும் எங்களுக்குமிடையிலான நம்பிக்கையின் அடிப்படையில் நாட்டுக்கு தேவையான பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

அதன்படி, கடந்த மாதம் ஆரம்பத்தில் இரண்டாயிரத்து 500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடந்தன. கடந்த வாரங்களில் மேலும் 500 - 1000இற்கும் மேற்பட்ட கொள்கலன்கள் துறைமுகத்துக்கு வருகை தந்திருப்பதுடன், சிலர் கடன்களை பெற்று கொள்கலன்களை விடுவிப்பதால் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியிருக்கின்றன.

அதேபோன்று, தற்போது டொலரின் பெறுமதி 230 ரூபாவாக அதிகரித்துள்ளதால் பொருட்களின் விலையும் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியமற்றப் பொருட்களை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவை எவ்வெந்த பொருட்கள் என்பது இதுவரை எங்களுக்கும் அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

### மொட்டுடன் தேர்தலா?...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுவில் முடிவெடுக்கும் சுயாதீனம் நாட்டிலுள்ள ஏனைய கட்சிகளில் இல்லை. எனவே, மத்திய செயற்குழுக் கூட்டத்தில் என்னால் முடிவுகளை எடுக்க முடியவில்லை எனக் கூறப்படுவது முற்றிலும் தவறானது.

நாட்டில் எரிபொருள், உணவு, எரிவாயு, விவசாயம் மற்றும் அந்நிய செலாவணி உள்ளிட்டு பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் அரசாங்கம் அல்லது கட்சித் தொடர்பாக என்னால் சிந்திக்க முடியாது. மாறாக, நாடு மற்றும் மக்கள் தொடர்பாகவே நான் கவனம் செலுத்துவேன்.

எனவே, அரசியல் அதிகாரம் மற்றும் அரசியல் கட்சி என்ற அடிப்படையில் பிரிவுகளை பற்றி பேசுவது பொருத்தமானதல்ல. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டால் அதனால் மக்களே பாதிக்கப்படுவர். எனவே, அரசியல் நெருக்கடி ஏற்பாடாதிருப்பதற்கு அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடியுடன் அரசியல் நெருக்கடி ஏற்பட்டால் நாடு சீர்குழைந்துவிடும். தற்போதுள்ள அரசியல் நெருக்கடி மேலும் உச்சம் தொட்டால் நினைத்துப்பார்க்க முடியாதளவான பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிவரும்.

இந்நிலையில், 11 பங்காளிக்கட்சிகளும் இணைந்து அரசாங்கத்துக்கு வழங்கிய யோசனையும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிகளையே காட்டியுள்ளோம். இந்த 11 கட்சிகளும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்துவதும் 02ஆம் திகதி மாநாடு நடத்தியதும் அதற்கு முன்னரே அரசாங்கத்துக்கு நன்றாகவே தெரியும். இவ்வாறான நிலையில் நான் ஜனாதிபதியாக இருந்தால் மாநாட்டுக்கு முன்னர் 11 பங்காளிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பேன். இந்நிலையில், நாங்கள் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி முடிவுகள் எடுக்கும் போது 11 பங்காளிக் கட்சிகளுடன் இணைந்தே இருப்போம்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோரை அழைத்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின்போது, அடுத்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாடுடையவர்கள் கையுயர்த்துமாறு கூறிய போது, ஒருவரேனும் கையுயர்த்தவில்லை.

ஆகவே, அடுத்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே நானும் இருக்கின்றேன் - என்றார்.

### இரு மாதங்களில்...

பணிப்பாளர் கிமாலி பெர்னாண்டோ ‘தமிழன்’ நாளிதழுக்கு தெரிவித்தார்.

மேலும், ரஷ்ய - உக்ரைன் நாடுகளுக்கிடையிலான போரால் அந்நாடுகளுக்கு திரும்ப முடியாமல் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் கிமாலி பெர்னாண்டோ மேலும் தெரிவிக்கையில்,

ரஷ்ய - உக்ரைன் சுற்றாலாப் பயணிகளுக்கான இரண்டு மாதகால விசா கால நீடிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய அவர்கள் இலங்கையில் தங்கியுள்ள இரண்டு மாதகாலப்பகுதிக்குள் தேவையான உணவு, தங்குமிடம் உள்ளிட்ட ஏற்பாடுகள் சுற்றுலா அமைச்சின் ஊடாக இலவசமாக செய்துகொடுக்கப்படவுள்ளன.

அத்தோடு பல ஹோட்டல்கள் அவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு தாமாகவே முன்வந்துள்ளன என்றார். உக்ரைன் - ரஷ்யாவுக்கிடையே கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி தொடங்கிய போர் இரு வாரங்களாக தொடர்கிறது.

உக்ரைன் - ரஷ்ய மோதலுக்கு முன்னர் சுற்றுலாப் பயணிகளாக வெளிநாடுகளுக்கு சென்ற ரஷ்ய - உக்ரைனியர்கள் தற்போது தங்களின் தாயகம் திரும்ப முடியாமல் பல்வேறு நாடுகளில் தவித்து வருகின்றனர்.

அந்த வகையில், 11 ஆயிரத்து 463 ரஷ்யர்களும், மூவாயிரத்து 993 உக்ரைனியர்களும் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்து தங்கியுள்ளனர். அவர்களுக்கு மீண்டும் தமது நாடுகளுக்கு திரும்ப முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அதனால், நிலவுகின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, குறித்த சுற்றுலாப் பயணிகளின் விசா காலப்பகுதியை கட்டண அறவீடுகளின்றி இரண்டு மாத காலத்துக்கு நீடிப்பதற்காக சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், இதற்காக அவர்களிடமிருந்து எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்

09.03.2022 புதன்கிழமை மாசி 25

ஜோதிடர் நற்பவி

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: ரோகிணி**
காலை 8.31 - 10.03.2022
காலை 11.30 வரை

**யோகம்: விஷ்கம்பம்**
அ.கா. 12.28 - 10.03.2022
அதிகாலை 1.17 வரை

**திதி: பூர்வ பட்ச ஸப்தமி**
அ.கா. 12.31 - 10.03.2022
அதிகாலை 2.56 வரை

**முற்கரணம்: கரஜம்**
அ.கா. 12.31 - பி.ப 1.41

**பிற்கரணம்: வணிஜம்**
பி.ப. 1.41 - 10.03.2022
அதிகாலை 2.56 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.20 - 7.49
மாலை 3.22 - 4.52

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
பிற்பகல் 12.21 - 1.51

**குளிகை காலம்**
காலை 10.51 - பி.ப. 12.21

**எமகண்ட காலம்**
காலை 7.50 - 9.21

**துர் முகூர்த்தம்**
காலை 11.57 - பி.ப. 12.45

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** வணிகத்தில் போட்டியாளர்களிடம் கவனம் தேவைப்படலாம். பணிகளில் பிரச்சினைகளுக்கு விரைந்து செயல்படும் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கலாம். மாணவர்கள் கல்வியில் விரும்பிய முடிவுகளுக்கு அதிக ஈடுபாடு தேவைப்படலாம். இல்லத்தில் நல்லிணக்கம் குறையலாம். இறைவணக்கம் நன்மை.

**ரிஷபம்:** திருமணத்திற்கு காத்திருப்போருக்கு நல்ல சாதகமான நிலை உண்டாகலாம். வேலை தேடுவோருக்கு நல்ல பணி கிடைக்கலாம். கட்டுமானப் பணிகள் நிறைவேறலாம். மனநிலை தெளிவு பெறும்.

**மிதுனம்:** நிதி பரிவர்த்தனைகளில் தவறு நிகழாவண்ணம் கவனம் தேவைப்படலாம். மேலதிக செலவுகளால் கவலை தோன்றலாம். வாழ்க்கைத்துணையுடன் அன்பை அதிகபடுத்துவது நல்லது. உறவுகளுடன் பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதிலும் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தேவை.

**கடகம்:** வணிக இலாபங்கள் அதிகரிக்கலாம். சந்தைப்படுத்தும் தொழில் விருப்பம் நிறைவேறலாம். சகோதரர்களின் ஆதரவு மேம்படும். பணிகளில் பதவி உயர்வு கிடைக்கலாம். அனுபவசாலிகளின் ஆலோசனைகளால் நன்மை கிடைக்கலாம்.

**சிம்மம்:** தொழிலில் வளர்ச்சி ஏற்படலாம். பணிகளில் உங்கள் உரிமைகள் அதிகரிப்பதோடு, சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கலாம். புதிய முதலீடுகள் செய்யப்படலாம். வாழ்வின் சில அழுத்தங்களில் இருந்து விடுபடும் சூழல் ஏற்படலாம்.

**கன்னி:** வணிகத்தில் துணிவான முயற்சி உண்டாகலாம். ஆன்மீக நிகழ்வுகளில் பங்கேற்கும் நிலை உருவாகலாம். அன்புக்குரியவர்களின் தொடர்பால் பெறும் சுப செய்திகள் மன உறுதியை அதிகரிக்கலாம். இல்லத்திலும் சுப நிகழ்வுகள் ஏற்படலாம்.

**துலாம்:** பிறரின் விடயங்களில் தலையீடு வேண்டாம். தேவையற்ற மனக்குழப்பங்கள் உண்டாகலாம். பணிகளில் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கலாம். வணிகத்தில் உறுதி தன்மை மற்றும் விற்பனை குறையலாம்.
**சந்திராஷ்டமம்: சுவாதி நட்சத்திரத்திற்கு**
**அ.கா 1.50 - 10.03.2022**
**அதிகாலை 4.44 வரை**

**விருச்சிகம்:** கூட்டுத் தொழில் சம்பந்தப்பட்ட வேலைகளில் இலாபங்கள் கிடைக்க பெறலாம்.வேலைகளில்உயர்பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கலாம். வீட்டின் வளங்களுக்கான பொருட்களின் கொள்வனவு ஏற்படலாம். நண்பர்களிடமிருந்து நல்ல செய்தி கிடைக்க பெறலாம்.

**தனுசு:** சில நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கலாம். பிறரின் பரிந்துரையில் செய்யும் புதிய முதலீடுகளை தவிர்ப்பது நல்லது. உங்கள் மீதான சில எதிர்ப்புகளால் வதந்திகள் பரப்பப்படலாம். சில முக்கிய முடிவுகளில் அவசரம் தவிர்ப்பதும் நன்மை. இறைதியானம் நன்மை.

**மகரம்:** பிள்ளைகளின் சாதனைகளால் மகிழ்ச்சி உண்டாகலாம். பங்குச்சந்தை நிதி ஒதுக்கீடுகளில் கவனம் தேவைப்படலாம். உங்களை தவறாக வழிநடத்தும் சிலரில் அதிக கவனம் தேவைப்படலாம். சிலரின் உதவியால் பணிகள் சிறப்புறும்.

**கும்பம்:** பரம்பரை சொத்துகள் தொடர்பில் பிரச்சினைகள் நீங்கலாம். புதிய நிதி திட்டங்களில் கவனம் தேவைப்படலாம். தம்பதியரிடையே கருத்து வேறுபாடுகள் மறந்து இருப்பது நன்மை. கடந்த கால பிரச்சினைகள் மீண்டும் ஏற்படலாம். இறைவணக்கம் தேவை.

**மீனம்:** நண்பர்களுடன் இருந்த பிரச்சினைகள் நீங்கலாம். ஊடகங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கௌரவம் கிடைக்க பெறலாம். சுப செய்திகள் கிடைக்கலாம். இல்லத்திலும் மகிழ்ச்சி நிலவும். பணிகளில் உற்சாகம் அதிகரிக்கலாம். காதலில் வரம்புகளை மதிப்பது நல்லது.

# பயங்கரவாதத் தடுப்பு திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம்

## உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபையில் அறிவித்தார் சபாநாயகர்



'பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்)' என்ற சட்டமூலம் தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் நாடாளுமன்றத்தில் நேற்று (08) அறிவிக்கப்பட்டது.

அதற்கமைய, 'பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்)' என்ற சட்டமூலத்தின் ஒருசில உறுப்புரைகளை நிறைவேற்றவேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியமென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்ட 'பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்)' எனும் தலைப்பிலான சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை நாடாளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

'பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்)' எனும் தலைப்பிலான சட்டமூலத்தின் அரசியலமைப்பு ரீதியான செல்லுபடியாகும் தன்மை பற்றிய உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் பின்வருமாறு:-

**சட்டமூலத்தின் வாசகம் 2**

சட்டமூலத்தின் 2ஆம் வாசகம் அரசியலமைப்பின் எந்தவொரு ஏற்பாட்டுடனும் முரணாகவில்லை என உயர் நீதிமன்றம் கருதுகிறது.

**சட்டமூலத்தின் வாசகம் 3**

அரசியலமைப்பின் பிரகாரம், சட்டமூலத்தின் 3ஆம் வாசகத்திற்கு ஆதரவாக அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையானது மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலிரண்டு பங்கிற்கு (வருகை தராதவர்கள் உட்பட) குறையாதிருந்தாலொழிய அதனை சட்டமாக இயற்ற முடியாதென உயர் நீதிமன்றம் கருதுகிறது.

எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி சட்டமூலத்தின் 3ஆவது வாசகத்தில் உள்ள ஏற்பாடுகள் திருத்தப்பட்டால், அது அரசியலமைப்பின் எந்தவொரு ஏற்பாட்டுடனும் முரணாக இருக்காது என உயர் நீதிமன்றம் கருதுகிறது.

**சட்டமூலத்தின் வாசகம் 4**

எவ்வாறாயினும், அது அவ்வாறு இருக்கையிலும், சட்டமூலத்தின் 4ஆம் வாசகத்தில் முன்மொழியப்பட்ட 10ஆம் பிரிவின் உள்ளடக்கத்தில் 141ஆவது உறுப்புரையை உட்புகுத்துமாறு சட்ட மா அதிபர் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவார் எனவும் மனுதாரர்களின் கரிசனைகளை நிவர்த்திசெய்வதற்காக அமைச்சர் அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்தின் குழுநிலையில் முன்மொழிவார் எனவும் கற்றறிந்த மேலதிக மன்றாடி அதிபதி நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

**சட்டமூலத்தின் வாசகம் 5**

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில், சட்டமூலத்தின் 5ஆம் வாசகம் அரசியலமைப்பின் எந்தவொரு ஏற்பாட்டுடனும் முரணாகவில்லை என உயர் நீதிமன்றம் கருதுகிறது.

**சட்டமூலத்தின் வாசகம் 6**

அரசியலமைப்பின் 80 (3)ஆவது உறுப்புரையின் பிரகாரம் எந்தவொரு காரணத்திற்காகவும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் பிரிவு 11இன் செல்லுபடி பற்றி உயர் நீதிமன்றம் விசாரித்தலோ, தீர்ப்பளித்தலோ அல்லது எவ்விதத்திலும் கேள்விக்கு உட்படுத்தலோ ஆகாது என அது கருதுகிறது.

**சட்டமூலத்தின் வாசகம் 10**

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி சட்டமூலத்தின் 10ஆவது வாசகம் திருத்தப்பட்டால், அது அரசியலமைப்பின் எந்தவொரு ஏற்பாட்டுடனும் முரணாக இருக்காது என உயர் நீதிமன்றம் கருதுகிறது.

**சட்டமூலத்தின் வாசகம் 11**

சட்டமூலத்தின் 11ஆவது வாசகம் அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணானது எனக் கருதுவதற்கு எந்த அடிப்படையும் கிடையாதென உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

**சட்டமூலத்தின் வாசகம் 12**

12வது வாசகத்திலுள்ள உத்தேச பிரிவு 26(2) அது உள்ள வடிவத்தில் அரசியலமைப்பின் 12(1)ஆவது உறுப்புரைக்கு முரணாக இருக்குமென உயர் நீதிமன்றம் கருதுகிறது.

123(1)(இ) உறுப்புரையின்படி, உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, சட்ட மூலத்தின் 12ஆவது வாசகத்திலுள்ள உத்தேச பிரிவு 26(2) இன் ஏற்பாடுகள் திருத்தப்பட்டால், அது அரசியலமைப்பின் எந்தவொரு ஏற்பாட்டுடனும் முரணாக இருக்காது என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை இன்றைய நடவடிக்கைகளுக்கான அதிகாரப்பூர்வ அறிக்கையில் அச்சிட உத்தரவிடுகின்றேன் - என்றார்.

# மூன்றிலிரண்டு பெரும்பான்மை எமக்கு அவசியமில்லை

## அமைச்சர் நாமல் தெரிவிப்பு



யோ.தர்மராஜ்

அரசாங்கத்திலுள்ள முரண்பாடுகளால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லாது போகும் எனக் கூறப்படுகின்றது. நாட்டை ஆட்சிசெய்வதற்கு எங்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியமில்லை. அரசியலமைப்பு திருத்தத்திற்கு மாத்திரமே மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை - என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சஜித் பிரேமதாச தரப்பு மற்றும் அநுரகுமார தரப்பும் பேசுவதால், அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரும்போது, இவர்களும் இணைந்து அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

பதவி விலக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில குறித்து நேற்று (08) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில பதவி நீக்கப்பட்டமை அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட தீர்மானமாகும். அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தையே விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அதனை அரசாங்கத்திற்குள்ளே தீர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு தீர்த்துக்கொள்வதற்கு இரு தரப்பிலும் இணக்கப்பாடு இல்லையேல் தீர்மானமொன்றை எடுத்தாக வேண்டும். நாம் ஒரு பதவிக்கு வந்தால் குறைபாடுகள் இருக்கும். எமக்கு ஏற்றவாறு அனைத்தும் நடக்காது. உலகின் யதார்த்தமும் இதுவே. இதனை புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல், நாங்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் - என்றார்.

# சுற்றுலாப் பயணிகளுக்கு முதலீடுசெய்ய வாய்ப்பு

**நீண்டகால விசா வழங்கவும் அரசு தீர்மானம்**

இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் உள்நாட்டில் முதலீடுசெய்யும் பட்சத்தில் அவர்களுக்கு நீண்டகால விசாவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நடைமுறையானது, வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதுடன், நிபுணர்கள், வல்லுனர்கள் இலங்கையில் முதலீடுகள்செய்ய வழிவகுக்கும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது ட்விட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் முடிவுகளை பெசில் எடுக்க அனுமதிக்க முடியாது

## விமல் எம்.பி. ஆவேசம்



யோ.தர்மராஜ்

நாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ அல்லது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ ஆட்சி செய்யவில்லை. மாறாக, மக்கள் ஆணையை திருடிக்கொண்ட நிதி அமைச்சரே ஆட்சி செய்கின்றார். ஆனால், அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் இந்த நாட்டின் முடிவுகளை எடுப்பதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

பதவி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து தன்னுடைய பிறந்த நாளையொட்டி இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் போராடி பெற்றுக்கொண்ட மக்கள் ஆணையிலிருந்து எங்களுக்கு விலக முடியாது. நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவினால் மக்கள் ஆணையை மீறி பொருளாதாரத்தை வேறொரு பக்கத்திற்குக் கொண்டுசென்றால் மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ள போராடிய எங்களால் அவருடைய செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிவரும்.

நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அமைச்சராக இருக்கும் அமைச்சரவையில் எப்போதும் நான் அமைச்சுப் பதவி பெற்றுக்கொள்வதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை.

இந்த நாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ அல்லது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ ஆட்சி செய்யவில்லை. மாறாக, மக்கள் ஆணையை கொள்ளையடித்துக்கொண்ட நிதி அமைச்சரே ஆட்சி செய்கின்றார். ஆனால், அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் இந்த நாட்டின் முடிவுகளை எடுப்பதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது.

அவலட்சணமான அமெரிக்கரால் இந்த நாட்டின் முடிவுகளை எடுப்பதற்கு மக்கள் இடமளிக்கக்கூடாது. அவரிடமுள்ள ஆட்சி அதிகாரத்தையும் மீள பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.



அஹச மீடியா நிறுவனம் நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று (08) மேல் மாகாண அழகியற் கலையரங்கத்தில் நடைபெற்றது. இதன்போது, ஜெயந்தி ஜெய்சங்கர், செஹாரா ஹலால்தீன், ஜிப்ரியா இப்ராஹிம், சுமங்கலி சிதம்பரம், ரிம்ஸா ஜவ்பர், ரீசா பவாஸ்தீன் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிமும் கலந்துகொண்டார்.


# வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| 13 - 6XXX | A171A-0007535 | CAR | MITSUBISHI LANCER |
| 14 - 8XXX | CSFE11AHY00316 | CAR | MITSUBISHI LANCER |
| KC - 5XXX | MAT6002676PR78353 | CAR | TATA INDIKA GLX |
| 54 - 0XXX | VRGE24505267 | VAN | NISSAN CARAVAN |
| HT - 3XXX | LXH43-0002464 | LORRY | TOYOTA HIACE |
| LF - 4XXX | MMBENKA408D069933 | MOTOR LORRY | MITSUBISHI L200 |
| WP-LG - 6XXX | LSCAD13Y08E015280 | MOTOR LORRY | CHANGAN SC1041D |
| RE - 8XXX | NH7364220 | TRACTOR - 4 WHEEL | NEW HOLLAND 4710 |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2022 மார்ச் 09, 10ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. மார்ச் 11ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2022 மார்ச் 11ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டெண்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டெண்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டெண்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

**டெண்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டெண்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டெண்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.**

முகாமையாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
**தொலைபேசி இல. 0112 000 000**

COMMERCIAL CREDIT






மகளிர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய லக்வனிதா முன்னணியினால் ஏற்பாடுசெய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (08) பத்தரமுல்லை சுற்றுவட்டாரத்தில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – பிரதீப் தம்பரகே)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 09ஆம் திகதி, புதன்கிழமை

# ஷேன் வோர்ன் எனும் வீரன்!

கடந்த வெள்ளிக்கிழமை (மார்ச் 4) தாய்லாந்திலுள்ள சுற்றுலாத் தீவான கோ சாமுயில் அவுஸ்திரேலியாவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர் ஷேன் வோர்ன் மாரடைப்பால் உயிரிழந்தார்.

உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களுக்கு அன்று மிகவும் சோகமான நாளாக அமைந்தது. அவுஸ்திரேலியாவின் மிகச் சிறந்த விக்கெட் கீப்பர்களில் ஒருவரான ரொட்னி மார்ஷ் (74) காலமானார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்த உலகின் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஷேன் வோர்னை அடுத்த 12 மணிநேரத்துக்குள் காலன் கபளீகரம் செய்துவிட்டான் என்பதுதான் மிகப் பெரிய சோகம்.

சாதனை மேல் சாதனை படைத்த ஷேன் வோர்னின் கிரிக்கெட் வாழ்க்கை சோதனையுடன்தான் தொடங்கியது. 7 முதல் தர ஆட்டங்களில் மட்டுமே பங்கேற்ற நிலையில், அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமானார். இந்தியாவுக்கு எதிராக 1992இல் சிட்னியில் நடைபெற்ற தொடரின் மூன்றாவது டெஸ்ட்டில் அறிமுகமான அவர் 150 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட்டை மாத்திரமே எடுத்தார்.

அடிலெய்டில் நடைபெற்ற 4ஆவது டெஸ்ட்டில் விக்கெட் எடுக்காததால் நீக்கப்பட்டார். ஆனால், மீண்டும் அணியில் இடம்பிடித்த அவருக்கு அந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் திருப்புமுனையாக அமைந்தது. 52 ரன்களுக்கு 7 விக்கெட் சாய்த்து ஆட்டநாயகன் ஆனார். அதிலிருந்து அவருக்கு ஏறுமுகம்தான்.

ஏஷஸ் தொடரில் முதன்முறையாக 1993இல் களம் கண்டார். ஓல்ட் டிரஃபோர்டில் நடைபெற்ற டெஸ்ட்டில் தான் வீசிய முதல் பந்திலேயே ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகின் கவனத்தையும் ஈர்த்தார். இங்கிலாந்தின் மைக் கேட்டிங் அவரது பந்துவீச்சை எதிர்கொண்டார். லெக் ஸ்டம்புக்கு வெளியே விழுந்த பந்து, மைக் கேட்டிங் கண்ணிமைப்பதற்குள் அற்புதமாக சுழன்று ஓவ் ஸ்டம்பைப் பதம் பார்த்தது. கேட்டிங் ஆச்சரியத்தில் உறைந்தார். அந்தப் பந்து "போல் ஒவ் த செஞ்சரி" என்று புகழ்பெற்றது.

அதன் பின்னர், உலகின் தலைசிறந்த வீரர்கள் பலரையும் இதுபோன்று அவர் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார். 1999இல் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலியா வெல்வதற்கு வோர்னும் ஒரு காரணம். தென் ஆபிரிக்காவுக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா 213 ஓட்டங்கள் மாத்திரமே எடுத்தபோதிலும், வோர்ன் 29 ரன்கள் மட்டுமே கொடுத்து 4 விக்கெட் சாய்க்க போட்டி "ரை" ஆனது. ரன் ரேட் விகிதத்தால் அவுஸ்திரேலியா இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டியில் வோர்ன் 4 விக்கெட் சாய்க்க, பாகிஸ்தான் 132 ரன்களுக்கு சுருண்டது. அவுஸ்திரேலியா எளிதாக வென்றது. இரு போட்டிகளிலும் ஷேன் வோர்ன்தான் ஆட்டநாயகன்.

1877 முதல் நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டிகளில் இருவர் மட்டும்தான் 1000 விக்கெட்டுகளுக்கு மேல் சாய்த்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர் ஷேன் வோன் (1001 விக்கெட்); மற்றவர் நம் நாட்டின் முரளிதரன் (1347 விக்கெட்). இதிலிருந்தே அவரது சிறப்பை அறிய முடியும். டெஸ்ட் போட்டிகளில் முரளிதரன் 800 விக்கெட்டுகளையும், ஷேன் வோர்ன் 708 விக்கெட்டுகளையும் வீழ்த்தி முதலிரண்டு இடங்களில் உள்ளனர். இவர்களது சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் 2007 முதல், இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் தொடரில் வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படும் கிண்ணத்துக்கு "வோர்ன் - முரளிதரன் ட்ரொஃப்பி" என்று பெயரிடப்பட்டுள்ளது.

கிரிக்கெட்டின் பைபிள் என்று கருதப்படும் "விஸ்டன்" இதழ் வெளியிட்ட கடந்த நூற்றாண்டின் சிறந்த 5 வீரர்கள் பட்டியலில் இடம்பெற்றவர்களுள் ஷேன் வோர்ன் ஒருவர்தான் பந்துவீச்சாளர் என்பது குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலியாவின் சர் டொன் பிரட்மன், மேற்கிந்தியத் தீவுகளின் சர் கேர்பீல்ட் சோபர்ஸ் (சகலதுறை வீரர்), சர் விவியன் ரிச்சர்ட்ஸ், இங்கிலாந்தின் சர் ஜாக் ஹோப்ஸ் ஆகியோர் விஸ்டன் பட்டியலில் இடம்பெற்ற மற்ற வீரர்கள் ஆவர். 1997 மற்றும் 2004ஆம் ஆண்டுகளில் விஸ்டனின் அந்த ஆண்டின் சிறந்த வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். ஷேன் வோர்னை "ஹோல் ஒவ் ஃபேம்" பட்டியலில் சேர்த்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) கௌரவித்துள்ளது

2008இல் நடைபெற்ற முதல் ஐ.பி.எல். போட்டியில் சாம்பியனான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தலைவராக இருந்தார். 2013இல் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து முழுமையாக விலகிய ஷேன் வோர்ன், வர்ணனையாளராகப் பணியாற்றினார். ஒரு போட்டிக்கு முன்பாக ஆடுகளம் குறித்து சூதாட்ட முகவருக்குத் தகவலளித்து பணம் பெற்றதாக ஷேன் வோர்னுக்கும், மார்க் வோஹ்வுக்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அபராதம் விதித்தது. ஊக்க மருந்து எடுத்துக் கொண்டது உறுதியானதால் 2003 உலகக் கிண்ணப் போட்டியில் அவரால் பங்கேற்க முடியாமல் போனது போன்ற சர்ச்சைகளுக்கு ஆளானார்.

தனது மாயாஜால சுழல் பந்து வீச்சால் கிரிக்கெட் உலகை வசீகரித்த ஷேன் வோர்ன் அகால மரணமடைந்தாலும், கிரிக்கெட் விளையாடப்படும் வரை ரசிகர்களின் நினைவில் அவர் இருப்பார் என்பதில் ஐயமில்லை.

ஒருகாலத்தில் முரளியின் பந்துவீச்சை சர்ச்சைக்குள்ளாக்கியவர் ஷேன் வோர்ன். ஆனால், சக விளையாட்டு வீரரை இழந்த துயரத்தில், ஷேன் வோர்ன் என்ற சிறந்த ஒரு கிரிக்கெட் வீரரை உலகம் தற்போது இழந்து விட்டதாக இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அனுதாபம் தெரிவித்திருந்தமை விளையாட்டின் அந்த மாண்பை உலகிற்கே எடுத்துக்கூறியது. தாமும் ஷேன் வோர்னும் கிரிக்கெட் போட்டியின்போது மோதிக் கொண்டாலும் சிறந்த நண்பர்களாக இருந்ததாக முரளி குறிப்பிட்டார்.

அதேபோல் உலக கிரிக்கெட் ரசிகர்களும், பிரபல கிரிக்கெட் வீரர்களும் வெளியிட்ட அனுதாபங்கள், முன்னணி கிரிக்கெட் வீரர் ரிக்கி பொண்டிங் அழுகையை அடக்கமுடியாமல் கண்கலங்கிய விதம் என்பன ஷேன் வோர்ன் என்ற திறமையான வீரனை உலகத்திற்கு பறைசாற்றியது என்பதில் இருவேறு கருத்தில்லை.

# நடமாடும் குட்டி தொழிற்சாலை!



பதப்படுத்திய உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் யுனிலிவர், ஒரு புதிய உற்பத்தி முறையை உருவாக்கியிருக்கிறது. அதன் ஆகப் பெரிய தொழிற்சாலைகளுக்கு மாற்றாக, 'நேனோ பெக்டரி' என்ற பெயரில் சிறிய தொழிற்சாலைகளை அது உருவாக்கியுள்ளது.

இந்த நேனோ ஆலைகள், 40 அடி கப்பல் சரக்குப் பெட்டிகளுக்குள் அடங்கிவிடுகின்றன. இந்த ஆலைக்கு மின் இணைப்பு மற்றும் நீர் இணைப்பை தந்துவிட்டால் எந்த இடத்திலும் யுனிலிவரின் தரத்திற்கு பதப்படுத்தப்பட்ட உணவு ரகங்களை பெட்டிகளில், பைகளில் அடைத்து தந்துவிடுகிறது இந்த மினி ஆலை.

கப்பல்களில் மட்டுமல்ல, லொறிகளிலும் இந்த ஆலையை ஏற்றிச் செல்லலாம். எனவே, இதனை நடமாடும் ஆலையாகவும் யுனிலிவர் பார்க்கிறது. எங்கு தேவை அதிகம் இருக்கிறதோ அங்கேயே போய் நிறுத்தி சில காலம் உற்பத்தி செய்து கொடுக்கும். பிறகு, கிராக்கி குறைந்ததும் அந்த இடத்தைவிட்டு நேனோ ஆலை நடையைக் கட்டிவிடும். இந்த ஆலையில் எந்த பதப்படுத்தப்பட்ட உணவைத் தயாரித்தாலும் அதனைக் கையாள மூன்று பேர் போதும். இதன்மூலம் போக்குவரத்து செலவு உட்பட பல செலவுகள் குறையும் என்பதால், இலாபமும் அதிகமாகக் கிடைக்கும் என யுனிலிவர் கணக்கிடுகிறது. இதன் சோதனைகள் வெற்றி பெற்றால், ஆங்காங்கே யுனிலிவர் குட்டித் தொழிற்சாலைகள் தென்படத் தொடங்கும்.

## தவக்கால சிந்தனை



**நான் பசியாய் இருந்தேன். நீங்கள் எனக்கு உணவு கொடுத்தீர்கள். நான் தாகமாய் இருந்தேன். என் தாகத்தைத் தணித்தீர்கள்.**

இங்கே நாம் பிறர் மட்டில் காட்டுகின்ற அன்பு கடவுளுக்கு நாம் காட்டுகின்ற அன்பின் மறுவடிவமே என்று எடுத்துரைக்கிறார். உலகத்தில் பசியாலும் தாகத்தாலும் வாடுகின்ற மனிதர்கள் பலருண்டு; அந்நியராக நடத்தப்படுவோர் உண்டு; இருக்க இடமும், உடுக்க ஆடையும் இல்லாதோர் உண்டு; நோயினால் வாடுவோர் உண்டு; சிறைப்பட்டுத் துன்புறுவோர் உண்டு. இவர்களைப் பார்க்கும்போது இயேசுவே இவ்வாறு பசி, பிணி, நோய் போன்ற துன்பங்களை அனுபவிக்கிறார் என உணரவும், மனிதருக்குச் செய்வதையே அவருக்கே செய்கிறோம் என அறியவும் இயேசு நம்மை அழைக்கிறார்.

இயேசு சாவை வென்று நம் ஆண்டவராக ஏற்கனவே மகிமைப்படுத்தப்பட்டுள்ளார். அதேநேரத்தில் இயேசு இவ்வுலகில் மனிதராக நம்மிடையே நடமாடுகிறார். குறிப்பாக, ஏழை எளியவர்கள், ஒடுக்கப்பட்டோர் போன்ற மிகச் சிறியோர் வடிவத்தில் அவர் நம்மிடையே உள்ளார். மனிதகுலம் முழுவதும் மனிதராக நம்மிடையே வந்த கிறிஸ்துவில் ஒன்றித்திருப்பதால், நாம் ஒருவர் ஒருவருக்குச் செய்வதை (நன்மையோ, தீமையோ) கிறிஸ்துவுக்கே செய்கிறோம்.

# சுறாவால் மிச்சமாகும் விமான எரிபொருள்!




மின்சாரம் அல்லது ஹைட்ரஜனால் இயங்கும் விமானங்கள் வந்தால்தான், மாசில்லாத வான் பயணம் சாத்தியமாகும். அதுவரை, மாசுபாட்டைக் குறைக்கும் வழிகளைத்தான் நாடியாக வேண்டும். லுப்தான்சாவும், பி.ஏ.எஸ்.எப்பும் இணைந்து செய்துள்ள எளிய சோதனை, நல்ல பலனைத் தந்துள்ளது. வழக்கமான விமானத்தின் மேற்பரப்பில், ஏரோஷார்க் என்ற ஒரு படலத்தை ஒட்டினர் ஆராய்ச்சியாளர்கள்.

இதன் பலனாக, விமானத்தின் எரிபொருள் பயன்பாடு குறைந்தது. இதனால், விமானம் வெளியேற்றும் மாசுபாடும் குறைந்தது. இந்த வான்வெளிக் கண்டுபிடிப்பிற்கு உந்துதலாக இருந்தது, கடல்வாழ் உயிரினமான சுறாதான். கடலுயிர்களில் பெரியதான சுறா, வேகமாக நீந்துவதற்கு, அதன் உருவம் ஒரு தடையாக இருக்கக்கூடாதென, இயற்கை படைத்த விந்தைதான் அதன் தோலாகும். பார்க்க மிக சமதளம் போன்று தோன்றினாலும், சுறா தோல் முழுதும் மிக மிக நுண்ணிய செதில் போன்ற நீட்சிகளைக் கொண்டிருக்கும். இந்த நீட்சிகள், சுறா நீந்துவதற்குத் தடையாகத்தானே இருக்க வேண்டும்? இல்லை. ஒவ்வொரு நீட்சியும் நீரைக் கிழிக்கப் பயன்படுவதால், அத்தனை பெரிய உடல் கொண்ட சுறாவால், மிக வேகமாக நீந்த முடிகிறது.

நீரியங்கியலில் எது பயன்படுகிறதோ, அது காற்றியங்கியலிலும் பயன்படும். எனவே, லுப்தான்சாவின் ஆராய்ச்சியாளர்கள், சுறா தோல் போன்ற நுண் செதில் நீட்சிகளைக் கொண்ட ஸ்டிக்கர் போன்ற படலத்தை உருவாக்கினர். அதற்கு பொருத்தமாக ஏரோஷார்க் என்ற பெயரையும் சூட்டினர்.

இந்தப் படலத்தை எந்த விமானத்தின் மீதும் ஒட்டலாம். அது, எதிர்க் காற்றுத் தடையைக் கிழித்துச் செல்ல உதவும். இதனால் லுப்தான்சா, தன்னிடமுள்ள 10 போயிங்-777 விமானங்களில், ஏரோஷார்க் படலத்தை ஒட்டியது. இதனால், ஆண்டுக்கு 3.7 ஆயிரம் தொன் ஜெட் எரிபொருளை மிச்சப்படுத்த முடியும். மேலும், 11.7 ஆயிரம் தொன் கார்பனீரொட்சைட் மாசினை காற்றில் கலக்காமல் தடுக்க முடியும்.

ஏரோஷார்க்கின் பயனை ஸ்விஸ் எயார் விமான நிறுவனமும் தனது எல்லா போயிங்-777 விமானங்களிலும் ஒட்டி ஓட்டுகிறது. ஏரோஷார்க் ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, பயணிகள் விமானத்தைவிட, சரக்கு விமானத்தில் இந்தப் படலத்தை ஒட்டினால் பலன் கூடுதலாக இருக்கும். ஏன் தெரியுமா? சரக்கு விமானங்களில் ஜன்னல்களே இருக்காது. எனவே, அந்தப் பகுதியிலும் ஏரோஷார்க்கை ஒட்டினால், கூடுதல் எரிபொருள் மிச்சமாகும்.

# குப்பையிலிருந்து மறுபிறவி எடுக்கும் கணினி



மின்னணுக் குப்பையை மறுசுழற்சி செய்யும் முயற்சியில் இது புரட்சிகரமானது. லண்டனிலுள்ள பென்டாபார்ம் என்ற புதிய நிறுவனம், எளிதில் மக்கும் கணினியொன்றை உருவாக்கியுள்ளது. 'எபகஸ்' என்ற இந்தக் கணினி, மின்னணுக் கழிவுகளை மறுசுழற்சி செய்து உருவாக்கப்பட்டது. ஒரு தட்டச்சுப் பலகை வடிவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த கணினியை, சில ஆண்டுகள் பயன்படுத்திவிட்டு, குப்பையில் போட்டால், மெல்ல மக்கிவிடும்.

உலகெங்கும் கடந்த 2019இல் 5.3 கோடி மெட்ரிக் தொன் அளவுக்கு மின்னணுக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தக் குப்பையின் அளவு 21 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால்தான், மறு சுழற்சி முறையில் பெறப்பட்ட, எளிதில் மக்கும் தன்மையுடைய பொலிமரால் இந்தக் கணினியை வடிவமைத்துள்ளது பென்டாபார்ம்.

விசைப்பலகை வடிவிலிருக்கும் இந்தக் கணினியில், 4 ஜி.பி, ரேம் நினைவகம், 512 ஹார்ட் டிஸ்க், ஓர் ஒலிபெருக்கி, இன்டெல் குவாட்கோர் சில்லு, புளூடூத் வசதி, லினக்ஸ் உபுண்ட் மென்பொருள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனை விண்டோஸ்-10 மென்பொருளை வாங்கிப் போட்டும் பயன்படுத்தலாம். வீடு மற்றும் பாடசாலைகளிலுள்ள திரைகளுடன் இணைத்துத்தான் இதனைப் பயன்படுத்த வேண்டும். உலகெங்கும் பாடசாலைகளில் கணினிக் கல்வி பரவ, கணினியின் விலை ஒரு தடையாக உள்ளது. அந்த குறையைப் போக்கவே மலிவு விலை 'எபகஸ்' உருவாக்கப்பட்டுள்ளது. தவிர அது பசுமைக் கொள்கைக்கும் ஏற்றபடி இருப்பது மேலும் சிறப்பு. 'எபகஸ்' ஆல் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பங்கினை, இந்தோனேசியாவின் கிராமப் பகுதிகளில் கணினிகளை வழங்கப் பயன்படுத்தப்போவதாக பென்டாபார்மின் நிறுவனர்கள் தெரிவித்துள்ளனர்.

# பூமிக்கடியில் தீராத வெப்ப ஆற்றல்



பூமிக்கடியில் அள்ள அள்ளத் தீராதது பெற்றோலியம், நிலக்கரி போன்றவை என்று நினைத்த காலம் போய்விட்டது. அவை புதுப்பிக்கத்தக்க எரிபொருட்கள் அல்ல என்பது நிறுவப்பட்ட உண்மை.

ஆனால், தோண்டத் தோண்டத் தீராத ஒரு ஆற்றல் பூமிக்கடியில் புதைந்து இருக்கிறது என்றால் நம்புவீர்களா? அமெரிக்காவிலுள்ள எம்.ஐ.டி. தொழில்நுட்ப நிலையத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தனியாக தொடங்கியுள்ள, குவேய்ஸ் நிறுவனம் அதனை நம்பித்தான் இருக்கிறது.

பூமிக்கடியில் இன்னும் ஆறாமல் தகித்தபடி இருக்கும் தீக்குழம்புதான் அந்த தீராத ஆற்றல். இதில், 0.1 சதவீதத்தை பயன்படுத்தினால், அடுத்து வரும் 2 கோடி ஆண்டுகளுக்கு, பூமியின் மின்னாற்றல் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

ஏற்கனவே, நிலக்கரி சுரங்க தொழில்களுக்காக, நிலத்தடியில் நீண்ட சுரங்கங்களைத் தோண்டியுள்ளனர். இவற்றில், புவி வெப்பத்தைப் பயன்படுத்தி, நீராவியால் இயங்கும் மின்னுற்பத்தி நிலையங்களைத் தொடங்கலாம் என, குவேய்ஸ் நிறுவன ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர். இதன் முதல் திட்டம், 2028இல் தொடங்கும். பின்னர், குவேய்ஸ் தனது தொழில்நுட்பத்தை மேம்படுத்தி, உலகிலுள்ள 8,500 நிலக்கரி அனல் மின் நிலையங்களை அணுகும்.

ஏனெனில், அவையனைத்தும், 2050க்குள் செயற்பாட்டை நிறுத்த திட்டமிட்டுள்ளன. பூமிக்கடியில், 3 முதல் 20 கி.மீ வரை தோண்டினால் கிடைக்கும் வெப்பம், இலவசமாக கிடைக்கும் ஆற்றலாகும். அதனை, அனல் மின்சாரமாக ஆக்கும் திட்டம் அபாரமானதுதான். அதாவது, செயலுக்கு வந்தால்.

## இன்றைய நாளில்...

- 1796 – நெப்போலியன் பொனபார்ட் தனது முதலாவது மனைவி யோசபினைத் திருமணம் புரிந்தார்.
- 1815 – மின்கலத்தால் இயக்கப்படும் மணிக்கூடு பற்றி முதன்முதலாக ஆங்கிலேயப் பொறியியலாளர் பிரான்சிஸ் ரொனால்ட்ஸ் எழுதினார்.
- 1945 – இரண்டாம் உலகப் போர்: அமெரிக்க பி-29 போர் விமானங்கள் டோக்கியோவில் குண்டுகளை வீசியதில் ஏற்பட்ட தீச்சூறாவளியினால் 100,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1959 – பார்பி பொம்மை நியூயோர்க் நகரில் அமெரிக்க அனைத்துலக விளையாட்டுப் பொருட்கள் கண்காட்சியில் முதன்முதலாகக் காட்சிக்கு வைக்கப்பட்டது.
- 1960 – பெல்டிங் இபார்ட் ஸ்க்ரிப்னர் என்பவர் தான் கண்டுபிடித்த இடைக்கடத்தி ஒன்றை நோயாளி ஒருவருக்குப் பொருத்தினார். இந்த இடைக்கடத்தியானது, அந்நோயாளி முறையாக இரத்த தூய்மிப்புப் பெற அனுமதிக்கிறது.
- 1961 – சோவியத்தின் ஸ்புட்னிக்-9 விண்கலம், இவான் இவானொவிச் என்ற மனிதப்போலியை வெற்றிகரமாக விண்வெளிக்குக் கொண்டு சென்றது. இதன்மூலம் சோவியத் ஒன்றியம் மனித விண்வெளிப் பறப்புக்குத் தயாரென அறிவித்தது.
- 1986 – சேலஞ்சர் விண்ணோடத்தின் அழிந்த சிதைவுகளை ஐக்கிய அமெரிக்காவின் ஆழ்கடலோடிகள் கண்டுபிடித்தனர். இறந்த ஏழு விண்வெளி வீரர்களினதும் உடல்களும் உள்ளே இருந்தன.
- 1997 – சீன, மங்கோலிய, கிழக்கு சைபீரிய வானியலாளர்கள் பகல் நேரத்தில் ஏல்-பாப் வால்வெள்ளியைக் கண்ணுற்றனர்.
- 2006 – சனியின் துணைக்கோளான என்செலாடஸில் திரவநிலையில் நீர் கண்டுபிடிக்கப்பட்டது.
- 2011 – டிஸ்கவரி விண்ணோடம் தனது 39 ஆவதும், கடைசியுமான பயணத்தை முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பியது.

## நக்கல் நமசிவாயம்

வீடுகளில அடுப்பு எரியுதோ, இல்லையோ மக்களின்ர வயிறு நல்லா எரியுது பாருங்கோ..!



# அமைச்சரவைத் தீர்மானங்கள்




**01. பொருளாதார பேரவையை நிறுவுதல்**

பெருநிலைப் பொருளாதாரக் கொள்கை, கொவிட் - 19 பெருந்தொற்று நிலைமையின் பின்னர் தேசிய பொருளாதாரத்தின் செயற்பாடு, பொருளாதார மீள்கட்டமைத்தல், அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை மற்றும் நிதிக் கொள்கைகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் உள்ளிட்ட உள்ளூர் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக மிகவும் ஆழமாகக் கலந்துரையாடி ஒட்டுமொத்த பொருளாதார முகாமைத்துவத்தை மேற்கொள்வதன் மூலம் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் நோக்கில் பொருளாதார பேரவை வாராந்தம் கூடுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

குறித்த பேரவையின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய ஏற்புடைய அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இயைபுடைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும், தேவைக்கேற்ப பொருளாதாரப் பேரவைக் கூட்டத்துக்கு போதுமான துறைசார் அறிவுகொண்ட கல்வியியலாளர்களை அழைக்கவும், ஜனாதிபதியினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் படிமுறைகள் தொடர்பாக அமைச்சரவையின் உடன்பாட்டை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. அதற்கமைய, பொருளாதார பேரவையின் கட்டமைப்பு கீழ்வருமாறு அமையும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ (தலைவர்), பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன , நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ , விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே, பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், திறைசேரி செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தம்மிக்க நாணயக்கார

**02. இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான முத்துராஜவெல கைத்தொழில் வலயத்தில் அமைந்துள்ள காணியின் ஒருபகுதியை குத்தகை அடிப்படையில் வழங்கல்**

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான முத்துராஜவெலயில் அமைந்துள்ள 400 ஏக்கர் காணியானது, கடல்மண் நிரப்பப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. குறித்த காணியில் பல காணித்துண்டுகள் தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல கருத்திட்டங்களுக்காக அரச மற்றும் தனியார் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குளிரூட்டல் களஞ்சிய வசதிகளுக்காக குறித்த காணியில் ஒரு துண்டை பெற்றுத்தருமாறு இமேர்ஜன்ட் கோல்ட் (தனியார்) நிறுவனம் கோரியுள்ளதுடன், குறித்த நிறுவனம் அக்காணித்துண்டைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை முதலீட்டுச்சபை சட்டத்தின் 17 ஆவது உறுப்புரையின்கீழ் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளமையை, இலங்கை முதலீட்டுச் சபை அறிவித்துள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்துக்குப் பொருத்தமென அடையாளங் காணப்பட்டுள்ள 04 ஏக்கர் 02 றூட் காணித்துண்டை 30 வருட காலத்துக்கு நீண்டகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் அக்கம்பனிக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. குற்றவியல் விடயங்களுக்கான பரஸ்பர சட்ட ரீதியான ஒத்துழைப்புக்கான பிம்ஸ்டெக் உடன்படிக்கை (BIMSTEC Convention)**

குற்றவியல் விடயங்களுக்கான பரஸ்பர சட்டரீதியான ஒத்துழைப்புக்கான பிம்ஸ்டெக் உடன்படிக்கையில் (BIMSTEC Convention) கையொப்பமிடுவதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள பல்துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகளுக்கான வங்காள விரிகுடா நாடுகள் சார்ந்த தொடக்க முயற்சிகள் (BIMSTEC) மாநாட்டில் நீதி அமைச்சால் ஒவ்வொரு பிம்ஸ்டெக் (BIMSTEC) உறுப்பு நாடுகளுடன் குறித்த உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக தனது அமைச்சின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வெளிவிவகார அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளது.

**04. பல்துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகளுக்கான வங்காள விரிகுடா நாடுகள் சார்ந்த தொடக்க முயற்சிகள் (BIMSTEC) அமைப்பின் தொழில்நுட்ப பரிமாற்ற வசதிகளை நிறுவுதல் தொடர்பான பிம்ஸ்டெக் ஒத்துழைப்பு உடன்படிக்கை**

தொழில்நுட்ப பரிமாற்ற வசதிகளை நிறுவுதல் தொடர்பான பிம்ஸ்டெக் ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக இதற்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, 2022 மார்ச் மாதம் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள பல்துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகளுக்கான வங்காள விரிகுடா நாடுகள் சார்ந்த தொடக்க முயற்சிகள் (BIMSTEC) மாநாட்டில் திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆய்வுகள் மற்றும் புதிய உற்பத்திகளுக்கான இராஜாங்க அமைச்சால் ஒவ்வொரு பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளுடன் குறித்த உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையை வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த விடயங்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளது.

**05. ராகம குருதியியல் மற்றும் புனர்வாழ்வு மருத்துவமனைக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் ஏனைய நடமாடும் உபகரண உதவிகள்**

எமது நாட்டில் வருடாந்தம் கிட்டத்தட்ட 1500 பேர் வரை முதுகெலும்புசார் காயங்களால் உடல் உபாதைகளுக்கு ஆளாகின்றமை பதிவாகின்றது. புனர்வாழ்வு சிகிச்சை சேவைகள் தேவைப்படும் குறித்த நோயாளர்களுக்கு அச்சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான தேசிய நிலையமாக ராகம குருதியியல் மற்றும் புனர்வாழ்வு மருத்துவமனை காணப்படுகின்றது.

குறித்த மருத்துவமனையில் நோயாளர்களுக்கு வருடாந்தம் 200 சக்கர நாற்காலிகள், 350 நடமாடும் ஊன்றுகோல்கள் மற்றும் 100 உடலணை அங்கிகள் தேவைப்படுகின்றன. குறித்த மருத்துவனையின் ஊழியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் 564 சக்கர நாற்காலிகள், 370 நடமாடும் ஊன்றுகோல்கள் மற்றும் 410 உடலணை அங்கிகளை வழங்குவதற்காக 43.70 மில்லியன் ரூபா மானியம் வழங்குவதற்கு உலக மனிதாபிமான உதவிகள் நிறுவனமான ஐக்கிய அமெரிக்காவின் Latter – Day Saint Charities (LDSC) நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக அந்நிறுவனத்துடன் உடன்பாட்டு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. தெரணியகல பொலிஸ் பிரிவில் நூரியவில் புதிய பொலிஸ் நிலையமொன்றை அமைப்பதற்கான காணியைப் பெறல்**

கேகாலை மாவட்டத்தில், தெரணியகல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 110, தொடாவத்த கிராம அலுவலர் பிரிவில், நூரிய பொலிஸ் நிலையத்தை அமைப்பதற்காக அடையாளங் காணப்பட்டுள்ளது.

அங்கு புதிய பொலிஸ் நிலையத்தை அமைப்பதன் மூலம் அப்பிரதேசத்தின் பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க பொலிஸ் சேவையை வழங்குவதற்கும், பிரதேசத்தில் இடம்பெறும் குற்றங்கள் மற்றும் மோசடி செயற்பாடுகளை தடுப்பதன் மூலம் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக விவசாய அமைச்சின் கீழ் காணப்படும் ஜனதா தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான நூரியவத்த காணியில் 02 ஏக்கர்களை பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் எஸ்.பி.எம்.சீ– லோட்டஸ் /பாமா கருத்திட்டத்திற்கான சுயாதீன ஆலோசகர் ஒருவரை சேவையில் அமர்த்துதல்**

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் எஸ்.பி.எம்.சீ – லோட்டஸ் /பாமா கருத்திட்டம் ஹொரணை, மில்லாவ பகுதியில் நிறுவுவதற்காக 2021 மார்ச் மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆலோசகர் ஒருவர் / ஆலோசனை நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறி பொறிமுறையை பின்பற்றுவதற்கு 2021 ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதற்கமைய, சர்வதேசப் போட்டித்தன்மையின் அடிப்படையில் விலைமுறி கோரப்பட்டுள்ளதுடன், விபரக் குறிப்புகள் அடங்கிய பதிலளிப்புடன் கூடிய மதிப்பீட்டின் அடிப்படையில் குறைந்த விலைமுறியாக அமைந்த இந்தியாவின் மெரீடியன் இன்ஜினியர்ஸ் அன்ட் கன்சல்டன்சி சேர்விசஸ் நிறுவனத்துக்கு குறித்த பெறுகையை வழங்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கமைய, குறித்த நிறுவனத்துக்கு முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தின் ஆலோசகராக நியமிப்பதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. அஞ்சல் அலுவலக பிணை நிதியக் கட்டளைச்சட்டம்**

1931 இலக்கம் 01 உடைய அஞ்சல் அலுவலக பிணை நிதியக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அஞ்சல் அலுவலக பிணை நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. அஞ்சல் திணைக்களத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் குறித்த நிதியத்தின் மூலம் மிகவும் பயனுள்ள சேவைகளை வழங்குவதற்கு இயலுமான வகையில் அஞ்சல் அலுவலக பிணை நிதியக் கட்டளைச்சட்டத்தை திருத்தியமைப்பதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பினும், அதற்குரிய சட்டமூலம் தயாரிக்கும் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தியடையவில்லை. அதனால், சமகாலத்துக்குப் பொருத்தமான வகையில் இயைபுடைய ஏற்பாடுகளை உட்சேர்த்து குறித்த சட்டமூலத்தை சட்ட வரைஞர் மூலம் தயாரிப்பதற்காக வெகுசன ஊடக அமைச்சு சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. குடியியல் சட்டக்கோவைக்கான திருத்தம் (101 ஆம் அத்தியாயம்) – (XLII ஆம் அத்தியாயத்தை முடிவுறுத்தல்)**

அமைச்சரவை அங்கீகாரத்துடன் சட்ட விரிவாக்கல் மறுசீரமைப்புக்காக தாபிக்கப்பட்டுள்ள அலகின் ஒரு உபகுழுவாக திருமண விவகாரங்கள் தொடர்பான சட்டமூலங்களைத் தயாரிக்கும் உபகுழு உருவாக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம், விவாகரத்து, திருமண அறுநிலை மற்றும் திருமண முடிவுறுத்தல் போன்ற காரணங்கள், திருமண விவகார வழக்குகளில் நடைபடிமுறைகள் மற்றும் பிள்ளைகளின் பொறுப்பு வழங்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக அடிப்படை ஏற்பாடுகள் அடங்கிய சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

திருமண விவகார வழக்குகள் தொடர்பான நடைபடிமுறைகள் குடியியல் வழக்குக் கோவை XLII ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், முன்மொழியப்பட்டுள்ள திருமண விவகாரங்கள் தொடர்பான சட்டம் அமுலில் இருப்பதால் குறித்த அத்தியாயம் தேவையற்றதாகும். அதற்கமைய, குடியியல் வழக்குக் கோவையின் XLII ஆம் அத்தியாயத்தை முடிவுறுத்துவதற்கும், அதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. காணாமல்போன ஆட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகளை விசாரணை நடத்துதல்**

2016ஆம் ஆண்டு 14ஆம் இலக்க சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. குறித்த அலுவலகத்தால் மாத்தறை, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அப்பிராந்திய அலுவலகங்களுக்கு காணாமல் போனமை தொடர்பான 14,988 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய முறையான விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் காணாமல்போன ஆட்களின் உறவினர்களுக்கு அறிக்கைகளை வழங்கல் உள்ளிட்ட அதிக பணிகளை காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்து முடிவுறுத்துவதற்காக 25 விசாரணைக் குழுக்களை நியமித்து துரித வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்**

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் சந்தை விலையை நிலையாகப் பேணுவதன் மூலம் நுகர்வோருக்கு சலுகைகளை வழங்குவதற்காக உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2007ஆம் ஆண்டு 48ஆம் இலக்க விசேட வர்த்தகப் பண்டங்கள் தொடர்பான 04 கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதேபோல், தேசிய துணைப்பிரிப்பு ஒருங்கிணைந்த சுங்க தொடர் இலக்கத்தை உருவாக்குவதற்காகவும் மற்றும் ஒருசில தெரிவு செய்யப்பட்ட பண்டங்களின் அடிப்படையில் சுங்க இறக்குமதி வரியை திருத்தம் செய்வதற்காக 1962ஆம் ஆண்டு 19ஆம் இலக்க வருமானப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளையொன்று நிதி அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கட்டளைகள் மற்றும் ஆணைகளின் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. ஜப்பானின் கருத்திட்டம் அல்லாத பிரதான உதவிகள் முன்மொழிவு முறையின் கீழ் தேசிய தாவரத் தொற்றுக்காப்பு சேவைகளுக்குத் தேவையான உபகரணங்களை விநியோகித்தல்**

விவசாயத்துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய வியாபாரத்துறையின் அபிவிருத்திக்காக நோய்களற்ற மற்றும் கிருமித் தொற்றில்லா ஆராக்கியமான தாவரங்கள் மற்றும் தாவர வளர்ப்பு உற்பத்திகளை சர்வதேச ரீதியாக விற்பனை செய்தல் அவசியமாகும். அவ்வாறான வர்த்தக நடவடிக்கைகளுக்கு வசதிப்படுத்துவதற்காக தேசிய தாவரத் தொற்றுக்காப்பு சேவை நிறுவப்பட்டுள்ளது.

2022/2023 நிதியாண்டுக்கான சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் கருத்திட்டம் அல்லாத பிரதான உதவிகள் முன்மொழிவு முறையின் ஊடாக 500 மில்லியன் ஜப்பான் யென் (கிட்டத்தட்ட 880 மில்லியன் ரூபா) உபகரண ரீதியான உதவி வழங்கலை தேசிய தாவரத் தொற்றுக்காப்பு சேவையின் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு வழங்குவதற்காக ஜப்பான் அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த உதவி வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்கு ஜப்பான் அரசாங்கத்துடன் பரிமாற்றல் பத்திரத்தில் கையொப்பமிடுவதற்கு நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. வெளிநாட்டு பணவரவுகளை அதிகரிப்பதற்காக ஊக்குவிப்புகளை வழங்கல்**

இலங்கைக்கு அந்நிய செலாவணி கிடைக்கின்ற முக்கிய துறையாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மூலம் வருடாந்தம் 7-8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எமது நாட்டுக்குப் பணவரவாகக் கிடைக்கின்றது. அவ்வாறு புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் சம்பாதிக்கும் அந்நிய செலாவணியை எதிர்வரும் புதுவருட காலத்தில் எமது நாட்டுக்குப் பணம் அனுப்புதலை ஊக்குவித்தல், புலம்பெயர் தொழிலாளர்களை பாராட்டுதல் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் தங்கி வாழ்பவர்களுக்கு அதிக பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக புலம்பெயர் தொழிலாளர்கள் எமது நாட்டுக்கு அனுப்புகின்ற அமெரிக்க டொலர் ஒன்றுக்காக தற்போது செலுத்தப்பட்டு வரும் 10 ரூபா ஊக்குவிப்புத் தொகையை 38 ரூபா வரை அதிகரிப்பதற்காக தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. ஏற்றுமதி முன்னேற்றத்தின் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு முன்மொழிவை நடைமுறைப்படுத்தல்**

ஏற்றுமதியாளர்கள் முகங்கொடுத்துள்ள அதிக பணவீக்கம், மோசமான அந்நிய செலாவணிப் பற்றாக்குறை, உற்பத்தி மூலப்பொருட்களின் இறக்குமதி வரையறைகள் மற்றும் அதிக நடவடிக்கைச் செலவுகள் போன்ற சிரமங்களைக் குறைத்துக் கொள்வதற்கும், சென்ற வருடத்தில் பெற்றுக்கொண்ட ஏற்றுமதி செயலாற்றுகையைத் தாண்டிய முன்னேற்றத்தை இவ்வருடத்தில் பெற்றுக்கொள்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த முன்மொழியப்பட்டுள்ள ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறையை நடைமுறைப் படுத்துவதன் மூலம் 2021ஆம் ஆண்டு ஏற்றுமதி வருமானத்தை 5,500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலதிக வருமானமாக 2022ஆம் ஆண்டில் ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, கடந்த வருடத்தின் இயைபுடைய காலாண்டுடன் ஒப்பிடுகையில், குறைந்தது 10 வீதமான முன்னேற்றத்தைக் கண்டுள்ள நிறுவனங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறையின்கீழ் கடந்த வருடம் முதற் காலாண்டில் ஈட்டிய ஏற்றுமதி வருமானத்தை விடவும் மேலதிகமாக ஈட்டுகின்ற ஒவ்வொரு அமெரிக்க டொலருக்கும் 30ரூபா வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவை செலுத்துவதற்கு வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பாரதூர சிக்கல்கள் தீர்க்கப்படாத வரை தரவு பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றப்படக் கூடாது

### ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் வலியுறுத்து

தனிப்பட்ட தரவு பாதுகாப்பு மசோதா மீதான இரண்டாவது வாசிப்பு இன்று (09) இடம்பெறவுள்ளது. செய்முறைப்படுத்துனர் அல்லது கட்டுப்பாட்டாளர்களிடமுள்ள தரவுகளை அடையாளம் கண்டு வலுப்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட தரவின் செயலாக்கத்தை ஒழுங்குபடுத்துதல் என்பன இந்த மசோதாவின் நோக்கமாகும். எவ்வாறாயினும், இம்மசோதாவானது தற்போது இருக்கும் வடிவிலேயே சட்டமாக்கப்பட்டால், சில உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீதான தாக்கங்கள் உட்பட மேலும் முக்கிய மூன்று பகுதிகள் குறித்து ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் தனது ஆழமான கரிசனையினை வெளிப்படுத்துகிறது.

குறிப்பாக தகவல்கள் மக்களால் பயன்படுத்துவதற்கும் அவர்களுக்கு எதிராக பயன்படுத்துவதற்கும் ஒரு கருவியாக மாறிவரும் இன்றைய சூழலில் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு, சட்ட கட்டமைப்பை உருவாக்குதல் என்பன மனித உரிமைகளை பாதுகாப்பதில் ஓர் முக்கிய அடைவாகும். இருப்பினும், இந்த மசோதா தொடர்பில்




TISL நிறுவனத்தின் முக்கிய மூன்று முன்மொழிவுகள் காணப்படுகின்றன.

இம்மசோதாவானது, தரவு செய்முறைப்படுத்தலில் "ஊடகவியலாளர்களின் நோக்கத்துக்காக" மற்றும்/அல்லது ஊடக சுதந்திரத்தினை பயன்படுத்துதல், கருத்துச் சுதந்திரம் போன்ற விடயங்களை அங்கீகரிக்கவில்லை. அதாவது, ஒலிபரப்பு ஊடகம் உள்ளிட்ட ஊடகங்கள், தங்களது ஊடக நடவடிக்கைகளுக்காக பிறரின் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதில் இம்மசோதாவானது, தரவுக் கட்டுப்பாட்டாளராகவும் செய்முறைப்படுத்துனராகவும் மாறுவதனால், ஊடக அறிக்கையிடலின் போது தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துவதிலிருந்து கட்டுப்படுத்தப்படுகிறது. ஆகவே ஊடக அறிக்கையிடலின் நோக்கங்களுக்காக தகவல்களை அணுகுவதையும் வெளியிடுவதையும் தேவையற்ற வகையில் கட்டுப்படுத்தாமல் இருப்பதை உறுதிசெய்யும் அடிப்படையில் சட்டரீதியான நிபந்தனையாக 'ஊடகவியலாளர்களின் நோக்கத்துக்காக" எனும் பகுதி அடையாளம் காணப்பட வேண்டும்.

தரவு பாதுகாப்பு அதிகார சபையானது பரந்த அதிகாரங்களை கொண்டதும் சுயாதீனமற்றதும் ஆகும். இந்த மசோதாவானது தரவு பாதுகாப்பு அதிகார சபையினை ஓர் அரச கட்டுப்பாட்டு அமைப்பாகவே சித்தரிக்கிறது. மேலும், தரவு பாதுகாப்பு அதிகார சபையானது சுயாதீனமற்ற மற்றும் நீதித் துறைசாரா அமைப்பாக இருந்த போதிலும் தரவுகளை பெறுவதற்கான மூலகங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள மற்றும் அதிகார சபையின் உத்தரவுகளுக்கு இணங்கத் தவறும் தரவு கட்டுப்பாட்டாளர்களுக்கும் தரவு செய்முறைப்படுத்துனர்களுக்கும் 10 மில்லியன் ரூபா வரை தண்டனை விதிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே குறித்த சட்டத்தின் நோக்கங்களுக்காக ஓர் சுயாதீன தரவு பாதுகாப்பு அதிகார சபை அமையப்பெற வேண்டும்.

மசோதாவின் தற்போதைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஏதேனும் முரண்பாடுகளின்போது தகவல் அறியும் உரிமைச் சட்டம் உட்பட வேறு எழுதப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலாக குறித்த மசோதாவின் ஏற்பாடுகள் மேலோங்கி காணப்படும். குறிப்பாக நடைமுறையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை வலுவிழக்க வழிவகுக்கும். ஆகவே, தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பிலான முரண்பாடுகளை தவிர்க்க ஓர் திட்டவட்டமான விதிவிலக்கைச் சேர்க்க வேண்டும்.

2019 ஆம் ஆண்டு வரையப்பட்ட தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டமைப்பின் வரைபானது தற்போதைய சட்டமூலத்தை மேம்படுத்தக்கூடிய இரண்டு முக்கிய விடயங்களை கொண்டுள்ளது. தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்போடு பொதுநலன் சமநிலைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் கட்டமைப்பின் முன்னுரையானது குறிப்பாக இலங்கையின் அரசியலமைப்பானது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை ஓர் முக்கியமான உரிமையாக குறிப்பிடுகிறது. சிறந்த பொது நலனுக்காக தற்போது நடைமுறையிலுள்ள உரிமைகள் மற்றும் ஏற்பாடுகளுடன் தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டத்தை இணக்கமாக உருவாக்குவது மிகவும் முக்கியமானது என்பதனால் TISL நிறுவனமானது அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக்குழு என்பவற்றிடம் குறித்த கரிசனைகள் முறையாக அடையாளப்படுத்தப்பட்டு தீர்க்கப்படும் வரை இச்சட்டத்தை இயற்ற அவசர தீர்மானங்களை எடுக்கக் கூடாது.

இவ்விடயம் தொடர்பாக TISL நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நதிஷானி பெரேரா குறிப்பிடுகையில், "தற்போதைய வடிவில் குறித்த மசோதாவானது இயற்றப்படுமானால் தரவு பாதுகாப்பு சட்டமூலம் ஆனது இன்னும் துஷ்பிரயோகம் அல்லது தவறாக பயன்படுத்தக்கூடிய ஓர் சட்ட மூலமாக மாறக்கூடும்.

இந்த மசோதாவானது ஊடகங்கள் மற்றும் முறைக்கேடுகளை வெளிப்படுத்தும் நபர்கள் (Whistleblowers) மத்தியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்த பயன்படுத்தப்படலாம், மேலும் இது இலங்கையின் ஜனநாயகத்துக்கு பேரிடியாகவும் அமையும்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

# தலவாக்கலை லோகி தோட்ட பிள்ளையார் ஆலயத்தை பொதுமக்களிடம் கையளிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்

## வியாபார நிலையங்களை மூடி வர்த்தகர்களும் போராட்டத்துக்கு ஆதரவு


வீடியோவைக் காண...

## பழைமையான ஆலமரத்தை வெட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதால் சர்ச்சை











(க.கிஷாந்தன், பி.கேதீஸ்)

தலவாக்கலையில் கடந்த சில வாரங்களாக பேசுபொருளாக மாறியுள்ள தலவாக்கலை லோகி தோட்ட மல்லிகைப்பு சந்தியில் அமைந்துள்ள மிகவும் பிரசித்திபெற்ற வழிப்பிள்ளையார் ஆலயத்தினை பொதுமக்களின் வணக்கஸ்தலமாக பெற்றுத்தருமாறுகோரி நேற்று (08) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தலவாக்கலை நகரிலுள்ள அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டு மேற்படி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 200 வருடங்கள் பழைமை வாய்ந்த குறித்த ஆலயத்தில் இருந்த ஆலமரம் வெட்டப்பட்டதன் காரணமாக மரத்தின் கிளைகள் வீதியில் முறிந்து விழுந்து மோட்டார்சைக்கிளில் பயணித்த ஆசிரியர் ஒருவரும் இதன்போது மரணமடைந்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அதிகாரிகளை அழைத்து விசாரணைகளை நடத்தி தீர்வுகள் பெற்றுக்கொடுக்க வேண்டும் என தெரிவித்திருந்தபோதிலும், அது குறித்து எந்த நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படாத நிலையே இதுவரை காணப்படுகின்றது.

தனிநபர் ஒருவர் மீண்டும் குறித்த ஆலயத்தினை அபகரித்து அவ்விடத்தில் விடுதி ஒன்றினைஅமைக்க முற்படுவதாகவும் இதனால் இப்பிரதேசத்திலுள்ள மிகவும் பழைமைவாய்ந்த இவ்வாலயம் அழியக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். மேலும், இச்சம்பவத்தினால் மரணித்த ஆசிரியர் குடும்பத்துக்கு இதுவரை எவ்வித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை எனவும் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த போராட்டத்தின்போது பதாகைகளை ஏந்தியும், கைகளில் கறுப்புப்பட்டிகளை அணிந்தும் தமது எதிர்ப்பினை ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளிப்படுத்தினர். மேலும் பழைமையான ஆலமரத்தை வெட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதால் தொடர்ந்தும் சர்ச்சைகள் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மலையக அரசியல் தலைவர்களுக்கு மகஜர் ஒன்றும் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறித்த ஆர்ப்பாட்டத்தில் மதகுருமார்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# எரிவாயு தட்டுப்பாட்டால் உக்குவளை பிரதேச மக்கள் பெரும் அங்கலாய்ப்பு

(உக்குவளை நிருபர்)

உக்குவளை பிரதேசத்தில் அமைந்துள்ள எரிவாயு விற்பனை நிலையங்களில் எரிவாயு இல்லை என அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ள நிலையில், எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாத உணவக உரிமையாளர்கள் தங்களது கடைகளை மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், எரிபொருள் நிலையங்களில் டீசலுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் வாகனப் போக்குவரத்து மற்றும் பஸ் சேவைகளும் குறைவடைந்துள்ளன. இந்நிலையில், தற்போது மின்விநியோகமும் அடிக்கடி தடைப்படுவதால் விளக்குகளை எரிக்கத் தேவையான மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் எவ்வாறு தமது அன்றாட வாழ்க்கையினை கொண்டு செல்வது குறித்து கவலை வெளியிட்டு வருகின்றனர்.

மேலும், மருந்தகங்களில் பெரசிடமோல், பெனடீன் மற்றும் பெனடோல் ஆகிய மருந்து வகைகளுக்கும் நீண்டகாலமாகத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலைமைகளால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலைமை குறித்து துறைசார்ந்த அமைச்சர்கள், அதிகாரிகள் சொல்லும் கருத்துகள் குறித்தும் மக்களுக்கு நம்பிக்கை குறையும் நிலைமையுமே தற்போது காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலைமை இந்நாட்டில் முன்னொருபோதும் ஏற்பட்டதில்லை என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

# காட்டெருமைக்கு மயக்க ஊசி செலுத்தி சிகிச்சை



(கம்பளை யோகா)

கம்பளை மொறகொல்ல பிரதேசத்தில் சுருக்கு வலையில் அகப்பட்டு காலில் காயங்களுடன் இரண்டு மாதங்களுக்கு மேலாக வேதனையுடன் சுற்றித்திரிந்த காட்டு குலு (காட்டெருமை) ஒன்றினை பேராதனை பல்கலைக்கழக கால்நடை வைத்தியசாலையைச் சேர்ந்த கால்நடை வைத்தியக்குழுவொன்று நேற்று முன்தினம் மீட்டு சிகிச்சை அளித்துள்ளது.

குறித்த காட்டெருமை சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோதமான முறையில் காட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த சுருக்கு வலையில் சிக்கி பின்னங்காலில் பாரிய காயத்துடன் உணவு உண்ண கூட முடியாத நிலையில் வேதனையுடன் மொறகொல்ல, மாவத்துற, அலுத்கம போன்ற கிராமங்களில் சுற்றித்திரிந்துள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதேசவாசிகள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்தும் பலன் கிடைக்காத நிலையில், மேற்படி சம்பவம் குறித்து கம்பளை பிரதேச ஊடக வியலாளர்களின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, அவர்களூடாக கம்பளை கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கு அறிவித்ததன் பின்னரே பேராதனை பல்கலைக்கழக கால்நடை வைத்தியக்குழு குறித்த காட்டெருமைக்கு மயக்க ஊசி செலுத்தி சிகிச்சையளித்துள்ளது.

# உருளைக்கிழங்கு செய்கைக்கு நிவாரணம் வழங்கி ஊக்குவிக்க வேண்டும்

## அரவிந்தகுமார் எம்.பி. வேண்டுகோள்



(பதுளை நிருபர்)

பதுளை மாவட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கைக்கு சிறப்பானதோர் காலநிலை பிரதேசமாக கிளன்அல்பின், செல்வக்கந்தை பெருந்தோட்டங்கள் இனங் காணப்பட்டுள்ளன. அத்துடன், அத்தோட்டங்களின் தொழிலாளர்கள் உருளைக்கிழங்கு செய்கைக்கு ஆர்வமாகவும் இருந்து வருகின்றனர். எனவே, அவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கி ஊக்குவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதமொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத் துக்கமைய, விவசாயத்துறையிலும் திறமைசாலிகள், ஆர்வமுள்ளவர்கள் ஆகியோரை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. அதற்கமைய, பெருந்தோட்டங்களில் உருளைக்கிழங்கு செய்கையை மேற்கொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி அவர்களையும் ஊக்குவிக்க நடவடிக் கைகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன். ஆகவே, இப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருப் பவர்களை ஊக்குவிக்கும் முகமாக விதை உருளைக்கிழங்கு மற்றும் நிவாரண உதவிகளை வழங்கும்படியும் உங்களின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன் - என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# மாத்தளை மகளிருக்கான கலந்துரையாடல் நிகழ்வு







(மாத்தளை நிருபர்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட மகளிர் அமைப்புக்கான விசேட கலந்துரையாடல் மாத்தளை ஹோட்டல் பாடசாலை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹண குமார திசாநாயக்க, நாலக்க கோட்டேகொட, அலவ்வ பிரதேச சபை தவிசாளர் திருமதி ஹேவா, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொருளாளர் நிசாந்த டயஸ் ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

# நல்லதண்ணி வீதியில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளால் துர்மணம்

## அகற்ற நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை



(செ.தி.பெருமாள்)

சிவனொளிபாதமலை யாத்திரை காலம் ஆரம்பித்து மூன்று மாதங்களுக்குமேல் ஆகியுள்ள நிலையில் ஹட்டன் - சிவனொளிபாதமலைக்கு செல்லும் வீதியிலும் தியகல, நோட்டன், சிவனொளிபாதமலைக்கு செல்லும் பிரதான வீதியிலும் பெருமளவில் கழிவுகள் தேங்கிக்கிடப்பதால் அப்பகுதி முழுவதும் துர்மணம் வீசுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

நல்லதண்ணி நெடுஞ்சாலையிலுள்ள கரையோரப் பகுதிகளிலும் யாத்திரிகர்கள் வீசிச் சென்ற குப்பைகளினால் துர்மணம் வீசுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், இப்பகுதியிலுள்ள நீர்த்தேக்கங்களுக்கு நீரை வழங்கும் ஓடைகள் மற்றும் ஆறுகள் மாசடைந்து வரும்நிலையில் உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.






மஸ்கெலியா பிரவுன்லோ மகளிர் கழகத்தினரின் ஏற்பாட்டில் பிரவுன்லோ கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மகளிர் தின நிகழ்வுகளை படங்களில் காணலாம். மேலும் இம்மகளிர் கழகத்தினை மிக நீண்ட வருடங்களுக்குப் பின்னர் வட்டார பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக் பதிவுசெய்து கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: மஸ்கெலியா நிருபர்)

# கவிதை நூல் வெளியீட்டு விழா

(நடராஜா மலர்வேந்தன்)

பதுளை, நமுனுகுல பிங்கராவ தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர் சாமிநாதன் யுகநாதனின் 'மனதுக்குள் ஒரு மனு' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

பள்ளகெட்டுவ கலபிட்டகந்த தமிழ் இடைநிலை பாடசாலையில் முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெறவுள்ள கவிதை நூல் வெளியீட்டு விழாவில் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். ஊவா தமிழ் இலக்கியப் பேரவை இந்நூல் வெளியீட்டு விழாவினை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மத்திய வங்கியின் பணம் அனுப்பும் செயற்பாட்டிற்கு ஆதரவளிக்கும் Lanka Remit உடன் கூட்டிணைகிறது HNB



இலங்கையின் முன்னணி தனியார்துறை வங்கியான HNB PLC, இலங்கை மத்திய வங்கியால் (CBSL) வெளிநாட்டிலிருந்து உள்நோக்கி பணம் அனுப்புவதற்கான முறையான வழிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட Lanka Remit மொபைல் செயலியின் (App) பங்காளியாக கையொப்பமிட்டுள்ளது.

National Remittance Mobile Application, வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு பாதுகாப்பான, வசதியான மற்றும் செலவு குறைந்த முறைகளை வழங்கும் முறையான பணம் அனுப்பும் செயற்பாடுகளுக்கு நேரடி அணுகலை வழங்குகிறது. நிதி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்த செயலி (App) இளைஞர் மற்றும் விளையாட்டு, அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

வெளிநாட்டில் பணிபுரியும் ஒவ்வொரு இலங்கையர்களுக்கும் நாங்கள் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். CBSL மற்றும் அரசாங்கம் இந்த நபர்களின் மகத்தான பங்களிப்பை அங்கீகரித்துள்ளதுடன், அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட 'Lanka Remit' செயலியின் ஊடாக உயர் மாற்று விகிதங்கள் மற்றும் பிற மதிப்பு கூட்டப்பட்ட சேவைகள் போன்ற நன்மைகள் மூலம் அவர்களை அங்கீகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பணம் அனுப்பும் துறையில் 40 வருட விரிவான வரலாற்றைக்கொண்ட ஒரு தனியார்துறை வங்கி என்ற வகையில், இலங்கைக்கு பணம் அனுப்புவதை முறைப்படுத்துவதிலும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன்களை உறுதிசெய்வதிலும் முன்னணியில் இருப்பதில் நாங்கள் சிறந்த நிலையில் இருக்கிறோம். புதிய செயலியின் ஒரு பகுதியாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இது முறையான பணம் அனுப்பும் வழிகளை வலுப்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தும் என்று நம்புகிறோம் என HNBஇன் பிரதி பொது முகாமையாளர் சில்லறை மற்றும் SME வங்கிச் சேவைகள், சஞ்ஜேய் விஜேமான்ன கூறினார்.

மிக சமீபத்தில், HNB 10 அதிர்ஷ்ட வெற்றியாளர்களுக்கு தலா 1,00,000 ரூபா வீதம் வாராந்திர குலுக்கல் முறையில் வழங்குவதற்காக பணம் அனுப்பும் சீட்டிழுப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது, இந்தத் திட்டம் 2022 முழுவதும் தொடரும். வங்கியின் பணம் அனுப்பும் சேவையானது, ஒவ்வொரு மக்கள்தொகை கொண்ட கண்டத்திலும் உள்ள வங்கியின் உலகளாவிய பங்காளிகளின் வலைப்பின்னல் மூலம் நிதியை பரிமாற்றுவதற்கான வசதியையும் பாதுகாப்பையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. HNB இன் உலகளாவிய வலையமைப்பு, உலகம் முழுவதுமுள்ள பல புகழ்பெற்ற பரிவர்த்தனை இல்லங்கள் மற்றும் வங்கிகளுடன் 130இற்கும் மேற்பட்டவர்களுடன் கைகோர்த்துக் கொண்டுள்ளது. இலங்கை ரூபாவைத் தவிர, பணம் அனுப்புபவர்கள் 13 நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் நிதிகளை வைப்பீடு செய்யலாம்.

அதன் உலகளாவிய வலையமைப்பை நிறைவு செய்யும் வகையில், வங்கியானது இலங்கையிலிருந்து வெளிநாட்டவர்களுக்கு அவர்களின் நிதித் தேவைகளை பூர்த்திசெய்வதில் ஆதரவளிக்க மூலோபாய இடங்களில் பிரதிநிதிகளை நியமித்துள்ளது.

HNB பெறுநர்களுக்கு வெளிநாட்டுப் பணம் அனுப்புவதை வசதியாக அணுகுவதற்கு பல பணப் பரிமாற்ற தேர்வுகளை வழங்குகிறது. நாடு முழுவதும் அமைந்துள்ள வாடிக்கையாளர் நிலையங்களில் பணத்தைப் பெறுவதற்கும், ATMகள் மூலம் பணம் எடுப்பதற்கும் வங்கி வசதிசெய்து, அதன் சொந்த ATMகள் மூலம் 780இற்கும் மேற்பட்ட ATMகள் மூலம் கார்ட் இல்லாத பணம் மீளப்பெறும் வசதியைப் பயன்படுத்தி பணமாக்குகிறது. HNB பணம் அனுப்பும் செயற்பாட்டின் மூலம் பணத்தை உடனடியாக வேறு ஏதேனும் உள்ளூர் வங்கிக் கணக்கில் வரவு வைக்கிறது. தடையற்ற வங்கிச் சேவையை உறுதிசெய்வதற்காக, ஆண்டு முழுவதும் 24X7 என்ற அடிப்படையில் பணம் அனுப்பும் பரிவர்த்தனைகளை வங்கி செயற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாடுமுழுவதிலும் 256 வாடிக்கையாளர் நிலையங்களைக்கொண்டுள்ள HNB இலங்கையின் மிகப் பெரிய, தொழில்நுட்ப ரீதியாக புத்தாக்கமான வங்கிகளில் ஒன்றாகும். வங்கிச் சிறப்புக்கான அதன் நற்பெயரை ஒருங்கிணைத்து, சர்வதேச நிதி விருது வழங்கும் நிகழ்வு 2021இல் வங்கிப் பிரிவில் சிறந்த சில்லறை வங்கி மற்றும் சிறந்த SME வங்கி விருதுகளை HNB பெற்றது. இங்கிலாந்தை தளமாகக்கொண்ட புகழ்பெற்ற பேங்கர் இதழால் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக தொகுக்கப்பட்ட உலகின் சிறந்த 1,000 வங்கிகளின் பட்டியலில் வங்கியும் இடம் பெற்றுள்ளது. குளோபல் பைனான்ஸ் விருதுகள் 2020இல் HNB இலங்கையின் சிறந்த துணைக் காப்பாளர் (Best Sub-Custodian) வங்கியாகவும் அறிவிக்கப்பட்டது. Fitch Ratings (Lanka) Ltd இன் தேசிய மதிப்பீட்டை AA-(lka) HNB பெற்றுள்ளது.

# பிரான்ஸில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த பிராந்திய ரீதியில் நிலையான நிதி தொடர்பான கலந்துரையாடல் குழுவில் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி பங்கேற்றார்



மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு அண்மையில் பிரான்ஸில் இடம்பெற்ற Française de Développement (AFD) மற்றும் EXIM Bank of India இனால் துணை - ஒழுங்குசெய்யப்பட்டிருந்த "SUFIP 2022: இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் நிலையான நிதி" நிகழ்வில் பங்குபற்றினார்.

இந்நிகழ்வானது ஐரோப்பிய இந்தோ - பசுபிக் மன்றத்தின் ஐரோப்பிய மற்றும் இந்தோ பசுபிக் மேம்பாட்டு வங்கிகளை ஒன்றிணைத்து, தொடக்க, நிறைவு அமர்வுகள் மற்றும் பரந்த கருப்பொருள் பகுதிகளின் அடிப்படையில் நான்கு குழுக்களைக்கொண்டிருந்தது. ரஞ்சித் கொடிதுவக்கு ''பெருந்தொற்றுக்கு பிந்திய இந்தோ – பசுபிக் பகுதியில் சமூக பின்னடைவுக்கு நிதியளித்தல்: பொது சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் விவசாயம் என்பவற்றை மேம்படுத்தல்" தொடர்பான கலந்துரையாடலை நிகழ்த்திடும் நான்காவது குழுவில் இடம்பெற்றிருந்தார். ஏனைய மூன்று குழுக்களும் ''இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் நிலைத்திருக்கும் நிகழ்ச்சி நிரல்: இணைப்புகள் மற்றும் தரமான உட்கட்டமைப்பு", ''காலநிலை ஒப்பந்தங்கள் முதல் காலநிலை நடடிவக்கைகள் வரை: காபனீரொட்சைட்டினைக் குறைத்துக் கொள்தல், மீள்தன்மை மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம்" மற்றும் ''சக்தி மாற்றத்தினை துரிதப்படுத்தல் : அர்ப்பணிப்பினை யதார்த்தமாக மாற்றுதல்" போன்ற முக்கியமான தலைப்புகளில் கலந்துரையாடினர்..

இந்தோ-பசுபிக் பிராந்தியமானது பெருந்தொற்றுக்கு பிந்திய காலத்தில் உலகளாவிய வளர்ச்சிக்கும் மீட்சிக்கும் முக்கியமான ஓர் என்ஜின் ஆக செயற்பட்டது. இப்பிராந்தியத்திலுள்ள நாடுகள் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்த விதத்தில் செயற்பட்டாலும் விசேடமாக பெருந்தொற்றுக்கு பிந்திய பொருளாதார மறுமலர்ச்சியின்போது முக்கிய பங்கு வகித்தது. இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் வசிப்போரது பொருளாதார அபிலாஷைகளுக்கு முன்னுரிமையளிக்கும் புதிய பரவலாக்கப்பட்ட, வலுவான மற்றும் உள்ளடக்கப்பட்ட பொருளாதார கண்ணோட்டங்கள் கட்டமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் பகிர்ந்துகொண்டன.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் நிலையான நவீனமயமாக்கல் பற்றிய புரிதல் மற்றும் ஒத்துழைப்பிற்கான வழிமுறைகளை பட்டியலிட, பொது நிதி நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் பல்வேறு பங்குதாரர்களை இந்நிகழ்வு ஒன்றிணைத்தது. காலநிலை மற்றும் சக்தி மாற்றம், டிஜிட்டல் இணைப்பு, சுகாதாரம், உயிர்பல்வகைத்தன்மை மற்றும் நீலப் பொருளாதாரம் உள்ளிட்ட முக்கியமான விடயங்களில் முக்கிய நடவடிக்கைகளுக்கான தங்களது அர்ப்பணிப்பினை முன்னிலைப்படுத்திட பல நிறுவனங்களுக்கு இது வாய்ப்பளித்தது.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு இந்நிகழ்வு தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

"நிலையான நிதி தொடர்பான கலந்துரையாடலுக்காக பெரும் புத்திஜீவிகளும் அனுபவசாலிகளும் கலந்துகொண்ட பெருமைமிகு பிராந்திய ரீதியிலான மண்டபத்தில் இலங்கையையும் மக்கள் வங்கியையும் பிரதிநிதித்துவப்படுத்தியதில் நான் பெருமையடைகின்றேன். இந்தோ – ஆசிய பிராந்தியம் பெருந்தொற்றுக்குப் பின்னர் தற்போது பல தடைகளுக்கு முகங்கொடுத்து வருவதால் அவ்வாறு அழுத்தம் கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அதன் நாடுகளும் அதன் முக்கிய நிறுவனங்களும் ஒருவருக்கொருவர் மிகவும் நெருக்கமாக பணியாற்றுவது முக்கியமாகும். காலநிலை, நிதி, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் முன்னேற்றத்தை எவ்வாறு ஊக்குவிப்பது என்பதனை தீர்மானிக்க, அபிவிருத்தி நிதியை ஊடகப்படுத்திடும் நிறுவனங்களை ஒன்றிணைத்ததால் இந்நிகழ்வு நிச்சயமாக சரியான நேரத்தில் அமைந்திருந்தது என்றே கூற வேண்டும்" என்றார்.

# மாதவிடாய் ஏழ்மையை ஒழிக்கும் பயணத்தின் முதல் ஆண்டைக் கொண்டாடுகிறது Fems AYA

Fems Aya திட்டமானது, Hemas Consumer Brands இனது பெண்களுக்கான சுகாதாரப் பராமரிப்பு வர்த்தகநாமமான Femsஇன் தேசிய அளவிலான முன்முயற்சியாகும். மாதவிடாய் சுகாதாரம் மற்றும் குறைந்த விலையிலான உயர்தர ஆரோக்கிய துவாய்களுக்கான சமமான அணுகலை வழங்குவதன் மூலம், மக்களிடையேயும் சமூகங்களிடையேயும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி வரும் இத்திட்டமானது அதன் முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

Merrill J.Fernando Foundation, Arka Initiative, Sarvodaya Women's Movement, Sarvodaya-Fusion ஆகிய ஒரே எண்ணம் கொண்ட கூட்டாளர்களுடன் இணைந்து Fems அதன் குறிக்கோளுடனான முயற்சியான'Fems AYA'' திட்டத்தை சர்வதேச மகளிர் தினமான 2021, மார்ச் 08ஆம் திகதி அறிமுகப்படுத்தியது. ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு, தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வு ஊடகவியலாளர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.




கடந்த வருடம் முழுவதுமாக மட்டுமன்றி கொவிட் தொற்று காலப்பகுதி முழுவதும் கிராமப்புற பிரதேசங்களிலுள்ள உள்ளூர் சமூகங்கள் முதல் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் இளம் யுவதிகள் வரை 2,500 பெண்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்பூட்டல்களை Fems தொடர்ந்தும் முன்னெடுத்து வந்துள்ளது. இத்திட்டத்தின் பங்காளிகளின் ஆதரவுடன் ஒன்லைன் மற்றும் நேரடியான பயிற்சித் திட்டங்கள் இதன்போது நடத்தப்பட்டன

முன்னேறிக்கொண்டிருக்கும் ஒரு பெரு நிறுவன முன்னோடி எனும் வகையில் Hemas Consumer Brands நிறுவனம், 6,700இற்கும் மேற்பட்ட அதன் ஆண், பெண் ஆகிய இருபால் ஊழியர்களுக்கும் Fems AYA ஆரோக்கிய துவாய்களை வழங்கும் இலவச விநியோகத்தின் மூலம், நிறுவனத்திற்குள்ளும் தனது நோக்கத்தை நடைமுறைப்படுத்த முடிவு செய்த முதலாவது பெரு நிறுவனம் எனும் பெயரை பெற்றுள்ளது. நிறுவனத்தின் பணியாளர்களிடையேயான இந்த விநியோக நடைமுறையானது, அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை ரீதியான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதை இயல்பாக்க உதவியது. கட்டுப்படியாகும் விலையில், உயர்தர மாதவிடாய் சுகாதார தயாரிப்புக்கான அணுகலை வழங்குவதற்கான பங்களிப்பை இத்தயாரிப்பு வழங்கிய அதே வேளையில், மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் பற்றிய மிக முக்கியமான கலந்துரையாடல்களில் நிறுவனத்தின் அனைத்து குழு உறுப்பினர்களும் ஈடுபடுவதற்கும் அது ஊக்குவித்தது.

மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் பற்றிய போதிய அறிவு இல்லாமை மற்றும் மாதவிடாய் தொடர்பான சமூகத்திலுள்ள களங்க ரீதியிலான பார்வை காரணமாக பெரும்பாலானோர் இவ்விடயங்களை வெளிப்படையாக பேசத் தயங்குகின்றனர். பாலின வேறுபாடின்றி, மாதவிடாய் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் குறித்து அனைவரும் வெளிப்படையாகப் பேச வேண்டும். மாதவிடாய் தொடர்பான கல்வியானது சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்பதுடன், இது மாதவிடாய் ஆரோக்கியத்தைச் சூழ்ந்துள்ள களங்கத்தை முடிவுக்குக் கொண்டுவரும் என Hemas Consumer Brands நம்புகிறது. இது சம்பந்தமான செய்தியை சமூகம் முழுவதும் எடுத்துச்சென்று, அதன் மூலம் இது தொடர்பான உரையாடலை இயல்பாக்குவது தொடர்பில் ஆண்கள் ஒரு பெரிய பாத்திரத்தை வகிக்க முடியும்.

நாடு தழுவிய இந்த விழிப்புணர்வு முயற்சியுடன் இலங்கைப் பெண்களுக்கு கட்டுப்படியான விலையில் ஆரோக்கிய துவாயின் தேவையை நிவர்த்திசெய்ய Fems AYA வை Fems அறிமுகப்படுத்தியது. Fems Aya ஆனது, பருத்தி உணர்வுடனான விங்ஸ் (wings) அமைப்பைக்கொண்ட, சர்வதேச தரத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட ஆரோக்கிய துவாயாகும். இது பெண்களுக்கு சௌகரியத்தை வழங்குவதுடன் அவர்கள் நம்பிக்கையுடனும் இருக்க உதவுகிறது. அதன் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் அனைத்து மூலப்பொருட்களும் உரிய பாதுகாப்புத் தரத்தை பூர்த்தி செய்வதுடன், இது பெண்களின் சௌகரியத்தை கருத்திற் கொண்டு மென்மையான பருத்தி உணர்வுகொண்ட தாளை கொண்டவாறு, உச்சபட்ச பாதுகாப்பிற்காக விங்ஸ் (wings) உடன் வருகிறது.

ஒவ்வொரு இலங்கைப் பெண்ணின் தேவைகளையும் புரிந்துகொண்டு, உச்ச சௌகரியம் மற்றும் பாதுகாப்பிற்கான வாக்குறுதியை வழங்கும் ஒரு வர்த்தக நாமம் Fems ஆகும். Fems நாடு முழுவதும் கிடைப்பதுடன், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களிலுள்ள அனைத்து நுகர்வோரும் அணுகக்கூடியதாக உள்ளது. இலங்கையின் முன்னணி சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்று எனும் வகையில், Fems ஆனது பல வருடங்களாக இலங்கைப் பெண்களின் இதயங்களை வென்ற தரக்குறியீடாக விளங்குவதோடு, பெண்கள் முன்னோக்கிச் செல்லும் வகையில், அவர்களுக்கு சிறந்த சௌகரியம், பாதுகாப்பு, தூய்மை ஆகியவற்றை வழங்குவதில் புகழ்பெற்று விளங்குகின்றது.

**Hemas Consumer Brands பற்றி**

வீடு மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு தயாரிப்புகளின் இலங்கையின் முன்னணி உற்பத்தியாளரான Hemas Consumer Brands, பல ஆண்டுகளாக வலுவான நோக்கம் கொண்ட தரக்குறியீடுகள்கொண்ட தயாரிப்புகள் மற்றும் முற்போக்கான நிலைபேறான தன்மையான நடைமுறைகள் மூலம், நுகர்வோர் இதயங்களை வென்றுள்ளது. Hemas Consumer Brands ஆனது உலகத் தரம் வாய்ந்த தயாரிப்புகளின் வரிசைகள் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு தீர்வுகளை வழங்கி வருகிறது. வளர்ச்சியை நோக்கமாகக்கொண்ட புத்தாக்கம் மிக்க குழுக்கள் மூலம் உள்ளூர் தேவைகளை அறிந்து அதன் மூலம் சந்தையில் முன்னணியான மற்றும் விருது வென்ற சிறந்த தயாரிப்புகளை உருவாக்குவது தொடர்பில் அது பாராட்டைப் பெற்றுள்ளது. அந்த வகையில், அர்த்தமுள்ள சலுகைகளை உருவாக்கி, நம்பகமான கூட்டாண்மைகளை வளர்த்து, மேலும் சூழலுக்கு உகந்த உலகத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டின் அனைத்து பாகங்களிலுமுள்ள சமூகங்களின் வாழ்க்கையை சென்றடைகிறது.

திகதி 07.03.2022
திங்கடகிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4699
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 64,308,763.20
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 2 0 9 5 3 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00

Mega POWER
கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1047
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,888,120.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 239,913,834.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: P
சுப்பர் இலக்கம்: 15
வெற்றி இலக்கங்கள்: 01 30 35 42

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 729
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,603,160.00
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 08 14 79 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 100,971,464.80

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 374 374
பெக்ஸ்: 0114 669 416

# வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளது தொடர் போராட்டத்தின் 5ஆம் ஆண்டு நிறைவில் மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவில்











(வன்னி செய்தியாளர்)

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டம் நேற்றுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் சர்வதேச மகளிர் தினமான நேற்று (08) மகளிர் தினத்தை துக்க தினமாக கடைப்பிடித்து முல்லைத்தீவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு புனித இராஜப்பர் ஆலய முன்றலில் ஆரம்பமான இந்தப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு நிறைவடைந்தது .

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஜெனீவாவில் தற்போது நடைபெற்றுவரும் தருணத்தில் வலிந்து காணாமலாக்கபட்டவர்களின் உறவுகளுக்கான நீதியை சர்வதேச சமூகம் விரைந்து வழங்க இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துமாறு கோரியும் நேற்று உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டுவரும் நிலையில் அதனை துக்க தினமாக பிரகடனம் செய்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், சமூகமட்ட பிரதிநிதிகள், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்டோர் கவனயீர்ப்புப் போராட்டத்தை வலுப்படுத்தினர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் "உலகெல்லாம் பெண்கள் உரிமை பேசும் இந்நாளில் தெருவில் கிடந்து அழ வைத்திருக்கிறது இந்த அரசு, எமது பிள்ளைகளை நீங்கள் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது ஒப்படைத்தோம், கால அவகாசம் வேண்டாம் முறையான நீதி விசாரணையே வேண்டும், ஐ.நாவின் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இணை அனுசரணை வழங்கும் நாடுகள் இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த ஆதரவு நல்க வேண்டும், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு மரணச்சான்றிதழ்தான் பதில் என்றால் கொலையாளி யார்? உங்கள் இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்?, கொடுப்பனவுகளை கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவே! பிள்ளைகளை தினம் தேடிக்கொண்டே நீதியின்றியே இறந்துகொண்டிருக்கின்றோம்" போன்ற வாசகங்களை தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழியிலான நீண்ட பதாகைகளை கையில் ஏந்தி கண்ணீருடன் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை இராணுவம், இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் சிவில் உடை தரித்த பொலிஸார் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# தமிழரசுக் கட்சி மகளிர் அணியினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வு







கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சி மகளிர் அணியின் ஏற்பாட்டில், 2022ஆம் ஆண்டுக்கான மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் (07) பசுமைப்பூங்காவில் சிறப்புற இடம்பெற்றது.

கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்திலிருந்து மேள, நாதஸ்வர வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக விருந்தினர்கள் பசுமைப்பூங்காவுக்கு அழைத்துவரப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் கட்சிக்கொடி ஏற்றப்பட்டதுடன், கடந்த காலத்தில் உயிர்நீத்த உறவுகளுக்காக பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, அஞ்சலிகளும் மேற்கொள்ளப்பட்டன. அதனையடுத்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டு ஏனைய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் இந்திய தூதரகப் பிரதிநிதி, தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளர் பத்மநாதன் சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரமூர்த்தி சரவணபவன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், த.குருகுலராஜா. சு.பசுபதிப்பிள்ளை ஆகியோருடன் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியினர், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தில் புத்தர் சிலை



(வவுனியா நிருபர்)

தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதியில் அமைந்துள்ள வவுனியா தெற்கு பிரதேச (சிங்கள பிரதேச செயலக) வளாகத்திலும் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் மற்றும் பௌத்த பிக்குகள் இணைந்து நேற்று முன்தினம் (07) குறித்த புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்தனர்.

வவுனியா தெற்கு பிரதேச செயலகமானது (சிங்கள பிரதேச செயலகம்) வவுனியா, மன்னார் வீதியில் காமினி வித்தியாலயத்துக்கு அண்மையிலுள்ள புகையிரதக் கடவை அருகில் அமைந்துள்ளது. குறித்த பகுதியானது தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதியாக உள்ளதுடன், குறித்த பிரதேச செயலகத்திலும் உதவிப் பிரதேச செயலாளர் உட்பட அதிகளவிலான உத்தியோகத்தர்கள் தமிழ், முஸ்லிம் மக்களாகவே உள்ள நிலையில் குறித்த பிரதேச செயலக வளாகத்தில் பிரமாண்டமாக பீடம் ஒன்று அமைக்கப்பட்டு புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

வடக்கில் இடம்பெற்றுவரும் அரசின் பௌத்தமயமாக்கல் திட்டங்களுக்கு பிரதேச செயலகங்களும் உடந்தையாக செயற்படுகின்றனவா என பொதுமக்கள் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.




**சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் நேற்று முன்தினம் (07) வேலணை மத்திய கல்லூரிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் பாடசாலையில் இடைவினைக் கழகமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.**

# யாழ். செயலகத்தில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்












(யாழ். நிருபர்)

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனைக் கண்காட்சியும் இடம்பெற்றது. அத்தோடு மகளிர் தின நிகழ்வில் பிரதேச செயலக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான கௌரவமும் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனப்பாகுபாடற்ற சமூகத்தை உருவாக்குவதை தேசியக் கொள்கையாக்க வேண்டியது அவசியம்

## 'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணி சபாநாயகரை சந்தித்து பேச்சு



ஒரே நாடு - ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்க ஆகியோரை நேற்று முன்தினம் (07) நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்தித்தது.

செயலணியின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்ந்த பின்னர், ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் எண்ணக்கரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாக செயலணியின் உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இன மற்றும் மத குழுக்களாக எந்தவொரு வகையிலும் எந்தவொரு இனத்தவரும் தனியாக நடத்தப்படக்கூடாது என்பதை தேசியக் கொள்கையாக சட்டமாக்குவதன் முக்கியத்துவம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கருத்தியலை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினரின் கருத்துகள் மற்றும் எண்ணங்களை கருத்திற்கொண்டு, அந்தக் கருத்தியலை ஆய்வுசெய்ததன் பின்னர், நாட்டில் அதனை அமுல்படுத்துவது தொடர்பான கருத்தியல் பத்திரத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்க ராஜகீய பண்டித கலகொட அத்தே ஞானசார தேரரின் தலைமையில் ஒரு செயலணி நியமிக்கப்பட்டது. சமீபத்தில் அதன் பதவிக்காலம் கடந்த 28ஆம் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

செயலணியின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டதைத் தொடர்ந்து, ஊடகங்களில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கேற்ப பல்வேறு தொழில் வல்லுநர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பல்வேறு மதக் குழுக்கள், பல்வேறு இனத்தினர், பல்கலைக்கழக சமூகத்தினர், சட்ட வல்லுநர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரால் தபால், மின்னஞ்சல் மூலமும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள செயலணியின் அலுவலகத்திற்கு வருகை தந்து, அவர்களின் கருத்துகளை வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் முன்வைத்தனர்.

மேலும், செயலணியின் உறுப்பினர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று, அப்பிரதேச பல்வேறு இனக் குழுவினர், மதத் தலைவர்கள் உள்ளிட்ட சாதாரண பொதுமக்களையும் சந்தித்து அவர்களின் கருத்துகளையும் கேட்டறிந்துகொண்டனர்.

தற்போது 06 மாகாணங்களை உள்ளடக்கிய வகையில், மக்களின் கருத்துகள் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதோடு, எஞ்சிய 03 மாகாணங்களில் உள்ள மக்களின் கருத்துகளும் பெறப்படும் எனவும் செயலணி தெரிவித்துள்ளது.

செயலணியின் தலைவர் ராஜகீய பண்டித்த கலகொட அத்தே ஞானசார தேரர், ஏனைய உறுப்பினர்களான பேராசிரியர் சாந்தி நந்தன விஜேசிங்க, சட்டத்தரணி சஞ்ஜய மாரம்பே, சிரேஷ்ட விரிவுரையாளர் சுமேத வீரவர்தன, எரந்த நவரத்ன, பாணி வேவல, ஐயம்பிள்ளை தயானந்தராஜா, யோகேஸ்வரி பற்குணராஜா, அஸீஸ் நிசார்தீன், கலீல் ரஹ்மான், வைத்தியர் சுஜீவ பண்டித்தரத்ன ஆகியோருடன் செயலாளர் செல்வி ஜீவந்தி சேனாநாயக்கவும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## 08.03.2022 நாணய மாற்று வீதம்

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 052 6372 | 06 0478 |
| கனேடியன் டொலர் | 063 6257 | 07 8 84 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 24 2527 | 25 6021 |
| யூரோ | 133 37 4 | 143 2675 |
| ஜப்பான் யென் | 0 83 1 | 1 70 |
| சிங்கப்பூர் டொலர் | 053 7775 | 058 78 5 |
| ஸ்ரேலிங் பவுன் | 183 504 | 2 1 8108 |
| சுவிஸ் பிராங்ங் | 130 8037 | 138 7861 |
| ஐ.அ.டொலர் | 114 1 02 | 118 8876 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 425 3 |
| குவைட் | குவைட் தினார் | 554 10 2 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 8 35 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 2 57 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7511 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 44 088 |

# சீரடி சாய் ராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் 18இல்

கொழும்பு 13, புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள சீரடி சாய் மந்திர், சீரடி சாய் ராஜ கோபுர மகா குமபாபிஷேகம் எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது.



சற்குரு சீரடி சாய் பாபாவின் அருளை பெற்றுக்கொள்ள ராஜ கோபுர மகா கும்பாபிஷேகத்தில் அடியார்கள் சகலரும் கலந்துகொள்ள வேண்டுமென சீரடி சாய் நிலையம் அழைப்பு விடுத்தள்ளது.

18ஆம் திகதி காலை 10.00 மணிமுதல் 10.41 மணிவரையான காலப்பகுதியில் சீரடி சாய் ராஜ கோபுர மகா குமபாபிஷேகம் இடம்பெறுள்ளதாகவும் சீரடி சாய் நிலையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் கணபதி ஓமம், கும்பாபிஷேக பூஜைகள் என்பன இடம்பெறவுள்ளதுடன் 17ஆம் திகதி சீரடி சாய் கலச பூஜை மற்றும் சீரடி தீப பூஜை என்பனவும் இடம்பெறவுள்ளன.

18ஆம் திகதி இடம்பெறவுள்ள சீரடி சாய் ராஜ கோபுர மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 19ஆம் திகதிமுதல் 27 ஆம் திகதிவரை 9 நாள் மண்டல பூஜைகளும் இடம்பெறவுள்ளன. மேலும் 48ஆவது நாளான மே ஐந்தாம் திகதி சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

# கெக்கிராவவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞரொருவர் பலி

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

யாழ்பாணம் - கண்டி ஏ 9 பிரதான வீதியின் கெக்கிராவ, எலகமுவ பகுதியில் நேற்று முன்தினம் (07) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நபரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த மேலும் ஒருவர் கெக்கிராவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று பிற்பகல் வேளையில் எலகமுவ பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 18 வயதுடய இபலோகம பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

தம்புள்ள பகுதியிலிருந்து கெக்கிராவ பகுதி நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகி தொலைபேசி கம்பத்தில் மோதியதில் இக் கோர விபத்து இடம்பெற்றுள்ளதுடன், மோட்டார்சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்ற இளைஞனே உயிரிழந்துள்ளார் என்பது மேலும் தெரிய வந்துள்ளது.

சடலம் கெக்கிராவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மோட்டார்சைக்கிள் ஓட்டுனரின் கவனயீனம் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை கெக்கிராவ பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



இன்ஸ்ட்டியூட் ஒவ் பொலிடிக்ஸ் (Institute Of Politics) நிறுவனத்தினால் வருடாந்தம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கும் விசேட விருது நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரிக்கு நேற்று முன்தினம் (07) வழங்கப்பட்டது.

# தத்துவம் தங்கராசு



**முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு நேரலை பேட்டியொன்றை வழங்கியதை நேரடியாக பார்த்தேன்...**

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எடுத்த தீர்மானத்தை யாருக்கும் தெரியாமல் இரகசியமாக வைத்திருந் தேன். குறைந்தபட்சம் எனது மனைவி யாருக்கும் தெரியவில்லை.. என்று அந்த நிகழ்வில் கூறி பெருமைப்பட்டுக் கொண்டார் மைத்ரி.**

**தினமும் தனது துணைவியார் தரும் வாழை இலை சாப்பாட்டை மட்டுமே சாப்பிடுவேன் என்று ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் பெருமையடித்தவரும் இதே மைத்ரியார்தான். வெளியில் சமைத்து கிடைக்கும் சாப்பாடுகளில் நம்பிக்கையில்லை என்ற காரணத்தினால்தான் அவர் வீட்டுச் சாப்பாட்டையே நம்பி இருந்ததாக அப்போது பரவலாக பேசப்பட்டதென்பது வேறு விடயம்.**

**சரி. இப்போது விடயத்திற்கு வருவோம். அத்தனை நம்பிக்கைக்குரிய அந்த துணைவியாருடன் கூட பகிராமல் அரசியல் முடிவை எடுத்ததாக மைத்ரி கூறுவது பெருமையல்ல. தனது துணைவியையே நம்பாமை அல்லது தனது துணைவியைவிட அரசியல்தான் முக்கியம் என்ற சிறுமையே அது.**

**சரி.. வேறு எதாவது காரணங்களுக்காகவாவது மனைவியாரிடம் சொல்லாமல் அவர் மறைத்திருக்கலாம். ஆனால், அந்த விடயத்தை மறைத்தேன் என்று பெருமையுடன் கூறுகிறாரே. அதுதான் சரியில்லை என்கிறேன்..**

# இலங்கை தூதரகத்தால் ஜம்இய்யத்துல் உலமா – ஹிந்துக்கு புனித குர்ஆனின் சிங்கள மொழிபெயர்ப்பு கையளிப்பு



இந்தியாவிலுள்ள அனைத்து முக்கிய மதங்களுடனும் உரையாடலை மேம்படுத்துவதற்கான தனது முயற்சிகளைத் தொடர்ந்து, புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் அண்மையில் புனித குர்ஆனின் சிங்கள மொழிபெயர்ப்பை ஜம்இய்யத் உலமா-ஹிந்த்க்கு (இந்திய முஸ்லிம் இறையியலாளர்கள் சபை) வழங்கியுள்ளது.

இலங்கையின் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவினால் வெளியிடப்பட்ட திருக்குர்ஆனின் சிங்கள மொழிபெயர்ப்பு, இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவினால் நேற்று பிற்பகல் ஜம்இய்யத்துல் உலமா - ஹிந்தின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி நியாஸ் அஹமட் பாரூக்கிடம் வழங்கப்பட்டது.

திருக்குர்ஆனின் பிரதி, வெளிப்படையான காட்சிபெட்டிக்குள் பொருத்தப்பட்டு, சபையின் 500 ஆண்டுகள் பழமையான பள்ளிவாசலில் அடுத்த வெள்ளிக்கிழமை வரை காட்சிப்படுத்தப்பட்டு, அதன்பின்னர் நிரந்தரக் கண்காட்சிக்காக அதன் அருங்காட்சியகத்திற்கு மாற்றப்படும்.

இந்நிகழ்வின்போது, இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் ஜம்இய்யத்துல் உலமா -ஹிந்த் செயலாளர் நாயகம் நியாஸ் அஹமட் ஃபாரூக்கி ஆகியோர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இஸ்லாமிய உறவுகளை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினர். ஜம்இய்யத் உலமா-,-ஹிந்தின் பல சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளும் இந்த விளக்கக்காட்சியில் கலந்துகொண்டனர்.

# இலவச கண் பரிசோதனை ஞாயிறன்று கொழும்பில்

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் 25ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டும் மறைந்த பிரதி பொலிஸ் மா அதிபர் கே.அரசரட்ணத்தின் ஞாபகார்த்தமாகவும் இலவச கண் பரிசோதனை எதிர்வரும் 13ஆம் திகதி கொழும்பு, கொட்டாஞ்சேனை கலைமகள் வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் காலை 8.30 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக உதவி மாநகர சபை மேயர் எம்.டி. ஹிக்பால், அவரது செயலாளர் எம். அமீர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இதற்கான ஒழுங்குகளை மன்ற பொதுச் செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி, தலைவர் நிலாம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# 12 அரசாங்க நிறுவனங்கள் மீதான கோப் குழுவின் விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) முதலாவது அறிக்கை அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத்தினால் நேற்று (08) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

முதலாவது கூட்டத்தொடரின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் அழைக்கப்பட்ட மற்றும் அதனூடாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 12 அரசாங்க நிறுவனங்கள் குறித்தே இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு, இலங்கை பெற்றோலிய களஞ்சிய மற்றும் விநியோகம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறையின் தற்போதைய நிலைமைகள் குறித்த விசேட கணக்காய்வு அறிக்கை, இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை, வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளில் வாழும் குடும்பங்களை மீள்குடியேற்றுவது குறித்த கணக்காய்வு அறிக்கை, இலங்கையில் பிளாஸ்ரிக் இறக்குமதி மற்றும் பாவனை பற்றிய சுற்றாடல் கணக்காய்வு அறிக்கை, இலங்கை கனியமணல் லிமிட்டெட், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு விஞ்ஞான கற்கை நிறுவனம், இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை உள்ளிட்டவை குறித்த விசாரணைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமையால் சமர்ப்பிக்கப்பட முடியாத இந்த அறிக்கையை இரண்டாவது கூட்டத்தொடரில் சமர்ப்பிப்பதற்கு கோப் குழு உறுப்பினர்கள் அனுமதி வழங்கியிருந்தனர்.

# அருட்திரு பங்காரு அடிகளாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் நாயகர் அருட்திரு பங்காரு அடிகளாரின் 82ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு களுத்துறை மாவட்டம், மாப்பலகந்த தோட்டத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆலயத் தலைவர், பாடசாலை ஆசிரியர்கள், தோட்டத் தலைவர், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆலய குருக்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

50இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# மனித உரிமைகள் பேரவையின் ஊடாடும் உரையாடலில் இலங்கைக்கு அமோக ஆதரவு!

## 31 நாடுகள் சார்பாக பேசியதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவிப்பு

இலங்கை தொடர்பான மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் எழுத்துபூர்வமான புதிய தகவல் தொடர்பான ஊடாடும் உரையாடலில் நல்லிணக்கத்திற்கான அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க முயற்சிகளுக்கு உலகளாவிய தெற்கின் பல நாடுகளிலிருந்து இலங்கைக்கு பெரும் ஆதரவு கிடைத்ததாகவும், புறநிலை மற்றும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் ஆகியன பலதரப்பு ஈடுபாட்டிற்கான முக்கிய அடிப்படையாக மீண்டும் வலியுறுத்தப்பட்டதாகவும் வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஊடாடும் உரையாடல் நேற்று முன்தினம் (07) இடம்பெற்றது.

ஊடாடும் உரையாடலில் உரையாற்றிய 45 நாடுகளில் 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக தமது கருத்துகளைப் பதிவுசெய்துள்ளன.

தெற்கு, தென்கிழக்கு மற்றும் மத்திய ஆசியா, ஆபிரிக்காவின் பல அரசுகளிடமிருந்து இலங்கைக்கான ஆதரவு வெளிப்படுத்தப்பட்டது. சவூதி அரேபியா, எகிப்து, பிலிப்பைன்ஸ், நேபாளம், கென்யா, எத்தியோப்பியா, மாலைதீவு, சீனா, கியூபா, ஜப்பான், சிரிய அரபுக் குடியரசு, வியட்நாம், கொரியா ஜனநாயக மக்கள் குடியரசு, வெனிசுவேலா, நைஜீரியா, பாகிஸ்தான், கம்போடியா, ரஷ்யக் கூட்டமைப்பு, லெபனான், உகண்டா, பெலாரஸ், சிம்பாப்வே, எரித்திரியா, தெற்கு சூடான், லாவோ ஜனநாயக மக்கள் குடியரசு, யேமன், ஈரான், நைஜர், கசகஸ்தான், பங்களாதேஷ் மற்றும் அசர்பைஜான் ஆகிய 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக பேசியதாக வெளிநாட்டு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

சட்டச் சீர்திருத்தங்கள் உட்பட தேசிய செயன்முறைகளின் மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் கொவிட்-19 தொடர்பான சவால்களைப் பொருட்படுத்தாமல் இந்த விடயத்தில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் ஆகியவற்றை உலகளாவிய தெற்கின் அரசுகள் பாராட்டின. தன்னார்வ தேசிய செயன்முறைகளை ஆதரிப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச சமூகம், பாரபட்சமற்ற தன்மை, தேர்ந்தெடுக்காத தன்மை மற்றும் அரசியல்மயமாக்காமை போன்ற அடிப்படைக் கொள்கைகளை நிலைநிறுத்தின.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் அண்மையில் இடம்பெற்ற ஊடாடும் உரையாடலின் ஆரம்பத்தில் உரையாற்றிய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மனித உரிமைகள் தொடர்பான தன்னார்வ சர்வதேச முயற்சிகளைத் தொடர்வதற்கும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உட்பட ஐக்கிய நாடுகள் சபையுடன் ஈடுபடுவதற்குமான இலங்கையின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்திய அதேவேளை, உயர்ஸ்தானிகரால் முன்வைக்கப்பட்ட புதிய தகவலில் காணப்படுகின்ற கடுமையான முரண்பாடுகள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில் குறிப்பிட்டார்.

# ஜப்பானிய ஓவியக் கண்காட்சி ஆரம்பம்





ஜப்பான் - இலங்கை இராஜதந்திர உறவுகளின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சிரேஷ்ட ஓவியரும் சிற்பியுமான கலாநிதி எச்.ஏ.கருணாரத்னவின் ZEN – THE ESSENCE OF JAPANESE BEAUTY ஓவியக் கண்காட்சி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் (07) திம்பிரிகஸ்யாய கெலரி ஃபோலைஃப் (Gallery FourLife) எனும் இடத்தில் திறந்துவைக்கப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த ஓவியக் கண்காட்சி நேற்று (08) முதல் மார்ச் 14ஆம் திகதி வரை முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 05 மணிவரை பொதுமக்களின் பார்வைக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தொண்ணூற்றுமூன்று வயதுடைய சிரேஷ்ட ஓவியரும் சிற்பியுமான கலாநிதி எச்.ஏ.கருணாரத்ன ஜப்பான் அரசாங்கத்தின் உயரிய விருதான The Order of the Rising Sun, Gold and Silver Rays விருதினை பெற்றவராவார்.

ஓவியக் கண்காட்சி திறந்துவைக்கப்பட்டதைத் தொடர்ந்து கலாநிதி எச்.ஏ.கருணாரத்னவினால் வரையப்பட்ட ஓவியம் உள்ளிட்ட நினைவுப்பரிசொன்று கலாநிதி எச்.ஏ.கருணாரத்னவினால் பிரதமருக்கு வழங்'கப்பட்டது.

ஓவியக் கண்காட்சியின் பொறுப்பாளராக சத்துரங்க பியகம பணியாற்றுகின்றார். ஓவியக் கண்காட்சி திறப்பு விழாவில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மியுகொஷி ஹிதெகி (MIZUKOSHI Hideaki), கலாநிதி எச்.ஏ.கருணாரத்னவின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கெலரி ஃபோலைஃப் முகாமைத்துவப் பணிப்பாளர் சத்துரங்க பியகம உள்ளிட்ட இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# விமானப்படையின் 71ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு விசேட சுற்றுச்சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டம்







இலங்கை விமானப்படையின் 71ஆவது வருட நிறைவை முன்னிட்டு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகள், மக்கள் அன்றாடம் நடமாடும் பொது இடங்கள் போன்றவற்றை சுத்தம் செய்யும் பணிகள் இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் வழிகாட்டலின்கீழ் 3 ஆயிரத்துக்கும் அதிகமான விமானப்படை அங்கத்தவர்களின் பங்கேற்பில் அண்மையில் இடம்பெற்றது.

டெங்கு பரவலை தடுத்து சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும்

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை விமானப்படை தரைவழி செயற்பாட்டு பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் ஜனக்க அமரசிங்க ஒருங்கமைத்து செயற்படுத்தியிருந்தார்.

இதன்போது கொழும்பு மத்திய பஸ் நிலையம், குணசிங்கபுர பஸ் நிலையம், பெஸ்தியன் மாவத்தை பஸ் நிலையம், பிரிவு 2 கோட்டை புகையிரத நிலையம், பிரிவு 3, மருதானை புகையிரத நிலையம், பொரளை பொது மயானம், பிரிவு 4 கங்காராம விகாரைக்கு அருகில் உள்ள பெய்ரா ஏரியின் சுற்றுப்புற பகுதி, கொழும்பு விமானப் படைத்தள மற்றும் புறநகர்ப் பகுதிகள், கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகள் என்பன விமானப்படை அங்கத்தவர்களால் துப்புரவுசெய்யப்பட்டன .

# மின்துண்டிப்பால் பல்கலை மாணவர்களுக்கு பாதிப்பு

(ஜூலிட் சமந்த)

மின்துண்டிப்பு காரணமாக தமது கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளதாக பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்ற முதலாம் வருட மாணவர்கள் தெரிவித்தார்கள்.

2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவியர்களில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்றுள்ள மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் முதலாம் வருட கல்வி நடவடிக்கைகளை ஒன்லைன் ஊடாக முன்னெடுக்க கல்வித்துறைசார் அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இருந்தபோதிலும் நாளாந்தம் இடம்பெறும் மின்துண்டிப்பு காரணமாக தமது கற்றல் நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியாக சிக்கல் ஏற்படுவதாக மாணவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். விரிவுரையாளர்கள் ஒன்லைன் முறையினூடான இந்த கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். இருந்தபோதிலும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் மின் விநியோகத்துக்காக பயன்படுத்தப்படும் மின் பிறப்பாக்கிகளுக்குத் தேவையான எரிபொருள் தட்டுப்பாட்டினால் அநேகமான கற்றல் நடவடிக்கைகளை இடையில் கைவிடும் நிலை உருவாகியுள்ளது.

அதேபோன்று வீடுகளிலிருந்து கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கும் மாணவர்கள் மின்துண்டிப்பு ஏற்படுவதால் விரிவுரையாளர்களால் நடத்தப்படும் விரிவுரைகளில் பங்குகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு





இளைஞர் நாடாளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக்கின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலைகளுக்கு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இளைஞர் நாடாளுமன்ற வெளிவிவகார மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதியமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமத் முப்தி ஆகியோரின் வேண்டுகோளிற்கிணங்க களுத்துறை மாவட்டத்திலுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு 24 கிரிக்கட் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வானது பாகிஸ்தான் உயர்ஸ்தானி ஜெனரல் உமர் பாரூக் புர்கி தலைமையில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும், விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இயக்குநர்கள் மற்றும் இளைஞர் நாடாளுமன்றத்தின் பிரதமர் உட்பட மேலும் பல வெளிவிவகாரம் தொடர்பான அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.




### தங்கச்சங்கிலிகள் அறுத்தெடுப்பு

**ராகம**

ராகம பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேரலந்த பிரதேசத்தில் தங்கச்சங்கிலிகளை அறுத்தெடுத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 04 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

ராகம பொலிஸ் பிரிவில் பெண்களின் கழுத்திலிருந்து தங்கச்சங்கிலிகளை அறுத்தெடுத்த நான்கு சம்பவங்களுடன் சந்தேகநபருக்கு தொடர்புள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு திருடப்பட்ட தங்கச் சங்கிலிகள் விற்பனைசெய்யப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் தங்கச்சங்கிலிகளை விற்பனை செய்ய உதவிய பெண்ணொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மீரிகம மற்றும் கொழும்பு 08 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரும் 41 வயதுடைய பெண்ணொருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பில் ராகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள்

**- கம்பஹா**

முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் கம்பஹா பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய கடந்த 06ஆம் திகதி, இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வர் கம்பஹா பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கனேமுல்ல, ராகம, உடுகம்பொல மற்றும் மாகவிட்ட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22 மற்றும் 33 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களினால் திருடப்பட்டிருந்த 09 முச்சக்கரவண்டிகள் மற்றும் இரு மோட்டார் சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (07) கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் 21ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கம்பஹா பொலிஸார் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### தங்கச்சங்கிலி, வீட்டை உடைத்து சொத்துகள் திருட்டு

**கல்கிஸை**

தங்கச்சங்கிலி திருட்டு மற்றும் வீட்டை உடைத்து சொத்துகளை திருடிய சம்பவங்கள் தொடர்பில் கல்கிஸை பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கல்கிஸை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் நேற்று முன்தினம் (07) கழுத்திலிருந்து தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரும் வீட்டை உடைத்து சொத்துகளை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை, இரத்மலானை மற்றும் கிருலப்பனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 35 மற்றும் 45 வயதுக்கு இடைப்பட்ட மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களினால் திருடப்பட்ட தங்க ஆபரண்ஙகள் சந்தேகநபர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

**காலி**

காலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலி குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 758 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்துேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு காலி துறைமுக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அஹங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**அத்துருகிரிய**

அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்புருகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் (07) அத்துருகிரிய பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 900 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மீகொட பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை அத்துருகிரிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**பேலியகொட**

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வனவாசல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (07) பேலியகொட பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்பேர்து 05 கிராம் 920 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பேலியகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**நுகேகொடை**

மாலபே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹோகந்தர பிரதேசத்தில் நேற்று முன்தினம் நுகேகொடை குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முனனெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 630 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவரும் 05 கிராம் 310 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளளுடன் சந்தேகநபரொருவரும் கைதுசெய்யப்பட்டு மாலபே பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஹோகந்தர பிரதேசத்தைச் சேர்ந்த 24 மற்றும் 51 வயதுடைய நபரொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மாலபே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹோகந்தர பிரதேசத்தில் நேற்று முன்தினம் நுகேகொட போதைப்பொருள் சுற்றிவளைப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட மேலுமொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு மாலபே பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மாலபே பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் கைது

**திரப்பனை**

திரப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேதிஸ்ரஓவ பிரதேசத்தில் திரப்பனை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரு துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேதிஸ்ரஓவ மற்றும் மரதன்கடவல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 35 மற்றும் 37 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை திரப்பனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**யக்கலமுல்ல**

யக்கலமுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவதகெட்டிய பிரதேசத்தில் யக்கலமுல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நவதகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். யக்கமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# திருமலையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளால் மகளிர் தினத்தில் நடைபவனி







(திருமலை நிருபர்)

சர்வதேச மகளிர் தினமான நேற்று (08) திருகோணமலையில் கையளிக்கப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளால் நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை சிவன் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமான குறித்த நடை பவனியானது, கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டதுடன், ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக அமைதியான முறையில் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த குறித்த சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா, கடந்த 05 வருட காலமாக தம்மால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு இன்னமும் விடிவு கிடைக்காத நிலையில் தாம் தமது பிள்ளைகளை வீதியில் இறங்கி தேடிவருவதாக தெரிவித்தார்.

உள்நாட்டு பொறிமுறையில் நம்பிக்கை அற்றவர்களாக இன்று வீதியில் இறங்கி போராடிக் கொண்டிருக்கும் பெண்களை இன்று சர்வதேச மகளிர் தினத்திலாவது சர்வதேசம் உற்றுப்பார்க்க வேண்டும், தமக்கு ஜனநாயக பொறிமுறையிலான நீதி ஒன்றே அவசியம், அதற்கு சர்வதேசம் முன் நின்று அதனை பெற்றுத்தர வேண்டும் என தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை முன்னிலைப்படுத்தி, கைதுசெய்யப்பட்ட தமது உறவுகளை இந்த அரசாங்கமானது, இன்னமும் விடுதலை செய்யவில்லை. அவர்களது முடிவு தெரியவரும்வரை தாம் இப்போது முன்னெடுத்துச் செல்லும் போராட்டத்தினை கைவிடப்போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

## போடியார் புலம்பல்!



*மின்சார மந்திரியாக பவுத்திராவ நியமிச்சிருக்கு எலுவா... இந்த பொடிச்சிதான் சுகாதார அமைச்சராக இருக்ககுள கொரோனா பரவியது. இப்ப மின்சாரக்கன்னியோ மின்சார கிளவியோ தெரியா. அவ மட்டும் வெளிச்சம்தான் எங்களுக்கு எப்பவும் இருட்டுத்தான். இந்திய தொலைக்காட்சி நாடகங்களில நடிகர்கள மாத்திர மாதித்தான் இப்ப அமைச்சரவை மாற்றம் நல்ல நாசமறுப்புத்தான்... இந்த குடும்ப ஆட்சில!*

# கல்முனை மாநகர சபை உறுப்பினராக மருதமுனை சமட் ஹமீட் நியமனம்

(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினராக மருதமுனையைச் சேர்ந்த சமட் ஹமீட் தேசிய காங்கிரஸினால் பெயரிடப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா முன்னிலையில் வைத்து நேற்று (08) தனது பதவிப்பிரமாணத்தை செய்துகொண்டார்.

கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற கல்முனை மாநகர சபைத் தேர்தலில், தேசிய காங்கிரஸின் குதிரை சின்னத்தில் களமிறக்கப்பட்ட ஸப்ராஸ் மன்சூர் கல்முனை மாநகர சபையில் தேசிய காங்கிரஸ் சார்பில் கடந்த மூன்றாண்டுகளாக உறுப்பினராக இருந்து தலைமையினால் பணிக்கப்பட்ட சுழற்சியடிப்படையில் அப்பதவியை வேறு ஒருவருக்கு வழங்கும் நோக்கில் இராஜினாமா செய்திருந்தார்.



அவ்விடத்தை நிரப்பும் நோக்கிலேயே தேசிய காங்கிரஸின் சார்பில் கடந்த கல்முனை மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு தேசிய காங்கிரஸ் வேட்பாளர்களில் இரண்டாவது அதிக வாக்குகளைப் பெற்ற தேசிய காங்கிரஸின் மருதமுனை இளைஞர் அமைப்பாளரும், அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் மருதமுனை இணைப்பாளருமான சமூக சேவகர் சமட் ஹமீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த சத்தியப்பிரமாண நிகழ்வில் தேசிய காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித்தலைவரும், வக்பு சபை உறுப்பினருமான டாக்டர் ஏ.உதுமாலெப்பை, பொருளாளர் வஸீர் எம்.ஜுனைட், கல்முனை அமைப்பாளர் ஆசிரியர் றிசாத் செரீப், அரசியல் உயர்பீட உறுப்பினர்கள், ஆலோசனை சபை உறுப்பினர்கள், மருதமுனை மத்தியக் குழுவினர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# கல்முனையில் மருந்தக உரிமையாளர்களுடன் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் சந்திப்பு




(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்முஹம்மட்றிபாஸ் தலைமையில் பிராந்திய மருந்தக உரிமையாளர் களுடனான கலந்துரையாடலொன்று நேற்று (08) இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், மருந்த உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

மருந்தக உரிமையாளர்களை அறிவூட்டும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதுடன், எதிர்காலத்தில் சுகாதார விதிமுறைகளை மீறும் மருந்தகங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்க உயிர்க்காப்பு பயிற்சிநெறி ஆரம்பம்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உயிர்க்காப்பு பயிற்சி நெறியினை வழங்கி வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை உயிர்க்காப்பு சங்கம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுப் பிரிவு என்பன இணைந்து நடத்தும் உயிர்க்காப்பு சான்றிதழ் பயிற்சிநெறி ஒன்றினை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கமைவாக, பயிற்சிநெறியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள இளைஞர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை (08) காணிப்பிரிவுக்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் வெபர் மைதான உள்ளக நீச்சல் தடாகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், விளையாட்டுத்துறை அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இத்திட்டம் நாடுபூராகவும் மாகாண மட்டத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்துக்கான பயிற்சியாளர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதனைத்தொடர்ந்து தெரிவுசெய்யப்படும் 30 பயிற்சியாளர்களுக்கான 09 நாள் கொண்ட பயிற்சிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், தேர்ச்சி பெறுவோர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச தரத்திலான உயிர்க்காப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் அதிகமாக காணப்படுவதினால் பயிற்சி நெறியினைப் பூர்த்திசெய்து அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்பவர்கள் இலகுவாக தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அக்கரைப்பற்றில் கனரக வாகனத்துடன் மோதிய முச்சக்கரவண்டி விபத்து





(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்றில் இருந்து ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு உணவு ஏற்றி வந்த முச்சக்கரவண்டி, கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று (08) மதியம் பாலமுனை பிரதான வீதியில் பாலமுனை வைத்தியசாலைக்கு முன்னால் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கரவண்டியை ஓட்டிவந்த சாரதி தெய்வாதீனமாக காயமின்றி உயிர்த்தப்பியுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ்ப்பேசும் மக்கள் ஆளும் உள்ளக சுயநிர்ணய உரிமையை சர்வதேசத்திடம் கோருகின்றனர்

## மட்டு. மாவட்ட முன்னாள் எம்.பி. சிறீநேசன் சுட்டிக்காட்டு

(வீரமுனை நிருபர்)

தம்மைத்தாமே ஆளும் உள்ளக சுயநிர்ணய உரிமையினை தமிழ்மக்கள் இந்தியாவிடமும் சர்வதேசத்திடமும் வாழ்வுரிமை, சுயகௌரவம் அடிப்படையில் கோருகின்றனர். தமிழ்ப்பேசும் மக்களை வாழவும் விடாமல் தம்மைத்தாமே ஆளவும் விடாமல் சிங்கள ஆட்சியாளர்கள் தடுப்பது நியாயமாகாது. பல்லின மக்கள் வாழும் நாடுகளை ஆள்கின்ற தலைவர்கள் சகல மக்களையும் அரவணைத்து ஆள்கின்ற ஆளுமைப் பக்குவத்தினைக் கொண்டிருக்க வேண்டும். மாறாக ஏனைய மக்களைப் புறந்தள்ளி இனம்சார் மக்களை அரவணைக்கும் ஆளும்போக்குக் காணப்பட்டால் ஓரினத்தின் தலைவர்களாக மட்டுமே கணிக்கப்படுவர் என மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிசெய்த சிங்களத் தலைவர்கள் அனைவரும் 74 சதவீத சிங்கள இனத்தவருக்கு சார்பான இன நாயகத்தையே பின்பற்றி ஆட்சி செய்துள்ளனர். இதனை ஜனநாயகம் என்று கூறுவதை விட சிங்கள இனநாயகம் என்றே கூறலாம்.

இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்க, மலையகத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமைகளைப் பறித்து கல்லோயா சிங்களக் குடியேற்றத்தினை திட்டமிட்டு தமிழர்களுக்கு எதிரானவராகத் தன்னைக் காட்டினார். பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் 1956இல் தனிச்சிங்களச் சட்டம், 1957இல் பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டமை, 1958இல் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புக் கலவரம் என்று அடுக்கடுக்காக இனவாத செயல்கள் நடைபெற்றன.

1965இல் ஆட்சிக்கு வந்த டட்ளி சேனாநாயக்கா இனப்பிரச்சினைக்கு தீர்வாக டட்லி- செல்வா ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து பின்னர் அதனைக் கைவிட்டார். 1970இல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ சிங்களம், பௌத்த மய அரசியல் யாப்பினை 1972 இல் கொணர்ந்தார். தமிழையும், தமிழர்களையும் முழுமையாகப் புறக்கணித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழ்ப்பேசும் மக்கள் சார்பாக சமர்ப்பித்த ஆறு அம்சக் கோரிக்கையினை நிராகரித்தார். இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர். டி. சில்வா தலைமையில், இந்த இனவாத மதவாத அரசியல் யாப்பு வரையப்பட்டது. இந்த இடதுசாரிகள் ஸ்ரீமாவின் அரசாங்கத்தில் இணைந்து காணப்பட்டனர். அந்த வகையில் இடதுசாரிகளும் பதவிக்காக இனவாதிகளிடம் சோரம் போயுள்ளனர். 1956இல் ஒரு மொழி என்றால் இருநாடு என்ற கொல்வின் ஒரு மொழியாகச் சிங்களத்தைக் கொணர்ந்து இரு நாடாவதற்கு வழிவகுத்தார். அதன் பின்னர் தனிநாட்டுக்கோரிக்கை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியால் 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டு, 1977 பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் மக்களாணை பெறப்பட்டது.

1972இல் தயாரிக்கப்பட்ட அடிப்படைவாத அரசியல்யாப்பு தனிநாட்டுக் கோரிக்கைக்கு முக்கிய காரணமாக இருந்தது. அதன் பின்னர் ஆட்சிப்பீடமேறிய ஆசியாவின் பெருநரியரான ஜே.ஆர்.ஜெயவர்தனா, தமிழர்களை மோசமாக ஒடுக்குவதற்காக 1979இல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைக் கொண்டுவந்தார். இவரது காலத்தில்தான் மோசமான கறுப்பு ஜூலைக் கலவரம் 1983இல் நடைபெற்றது. இதன்போது 3000 தமிழர்கள் சிங்களக் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டார்கள். அரச பாதுகாப்பில் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 52 தமிழ் அரசியல் கைதிகள், போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்தான் கண்டிப்பாக யாத்திரை மூலம் சிங்கள மக்களைத் தூண்டி பண்டா-செல்வா ஒப்பந்தம் கைவிடப்படுவதிலும் முக்கிய சூத்திரதாரியாக இருந்தார்.

மேலும் ஆர்.பிரேமதாச ஆட்சிக்கு வந்த பின்னர், இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தது. இதன் போது சட்டரீதியான படையாலும், சட்ட விரோதமான ஆயுததாரிகளாலும் அப்பாவித் தமிழர்கள் கொத்தணி கொத்தணியாக வடக்கு - கிழக்கில் கொல்லப்பட்டதுடன் கொளக்கொட்டியா எனும் சட்டவிரோத ஆயுததாரிகள் தமிழின அழிப்பில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

1994இல் சந்திரிகா அம்மையார் சமாதான தேவதையாக தமிழர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தார். அவர் காலத்தில் செம்மணிப்படுகொலை, ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை மூலமாகப் பல தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மேலும் 2005இல் மஹிந்த ஜனாதிபதியானார். இவரது ஆட்சிக்காலத்தில் கொடுமையான யுத்தம் மேற்கொள்ளப்பட்டது. மொத்தத்தில் காட்டாட்சி, காட்டுச்சட்டம் பிரயோகிக்கப்பட்டது. சிங்கள இனநாயகம் சீறிப்பாய்ந்தது. யுத்தத்தின் பின்னர் 13 பிளஸுக்கும் அப்பால் சென்று அரசியல் தீர்வு வழங்கப்போவதாகக் கூறி அப்போதைய ஐ.நா.செயலாளர் பான்கீ மூனிடம் உத்தரவாதம் அளித்தார். ஆனால் ஏமாற்றமே மிச்சம். எதுவும் நடக்கவில்லை.



அதன் பின்னர் 2015இல் ஆட்சிக்கு வந்த மைத்ரி - ரணில் கூட்டணி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாகக் கூறியது. ஆனால் அதுவும் மந்த கதியில் நடைபெற்று மைத்ரி - மஹிந்த கூட்டுச்சதியால் முற்றுப்பெற்றது.

தற்போது ஆட்சியிலுள்ள பொதுஜனப் பெரமுன மூலம் 2019இல் ஆட்சிப்பீடமேறிய கோத்தா, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சிங்கள பௌத்த அடிப்படைவாத செயற்பாடுகளை வெளிப்படையாகச் செய்து வருகின்றார்கள். தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய, சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதை அடிக்கடி கூறிக்கொண்டு அடிப்படைவாதப் போக்கில் செயலாற்றுகின்றார்.

அந்த வகையில், 74 ஆண்டுகளாக எந்தச் சிங்களத் தலைவராலும் தமிழ்ப்பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. தற்போதைய ஜனாதிபதி இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை. அபிவிருத்திப் பிரச்சினை மட்டுமே உள்ளதாகக் கூறுகின்றார். சமத்துவ உரிமையற்ற இரண்டாந்தரப் பிரஜைகளாக தமிழர்கள் கைகட்டி வாய்பொத்தி வாழ வேண்டும் என்பதே சிங்கள அடிப்படைவாத நிலைப்பாடாகும். இல்லையென்றால் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதே வக்கிர இனவாத சிந்தனையாகும்.

இதுவரை 15 இலட்சம் தமிழர்கள் நாட்டுக்கு வெளியே புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். சமத்துவ உரிமை இல்லாததாலும் இன ஒடுக்கு முறையாலுமே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள் என்பதை இன்னும் பேரினவாத ஆட்சியாளர்கள் ஏற்க மறுக்கிறார்கள். எனவே தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சினைகளை சிங்களத் தலைவர்கள் தீர்க்கமாட்டார்கள் என்பதே வரலாற்று உண்மையாகும். இதனால்தான் தமிழர்களை ஆளுந்தகுதியை சிங்களத் தலைகள் தாமாகவே இழந்துள்ளார்கள்.

எனவே, தம்மைத்தாமே ஆளும் உள்ளக சுயநிர்ணய உரிமையினை தமிழ்மக்கள் இந்தியாவிடமும் சர்வதேசத்திடமும் வாழ்வுரிமை, சுயகௌரவம் அடிப்படையில் கோருகின்றனர். தமிழ்ப்பேசும் மக்களை வாழவும் விடாமல் தம்மைத்தாமே ஆளவும் விடாமல் சிங்கள ஆட்சியாளர்கள் தடுப்பது நியாயமாகாது. 74ஆண்டுகளாக தமிழர்களை சமத்துவமாக ஆளத்தெரியாத பாரபட்ச அடிப்படைவாத சிங்கள பௌத்த தலைவர்களுக்கு, அதுவே வரலாற்றுப்பாடமாக அமைய முடியும். தமிழர்களை வாழவிடாத அடிப்படைவாதத் தலைவர்களுக்குரிய செய்தியாக தமிழர்கள் தம்மைத்தாமே ஆளவிட வேண்டிய வரலாற்றுத் திருப்பம் உருவாகியுள்ளது. பல்லின மக்களை ஆளத்தெரியாத தலைவர்களுக்கு இது பாடமாக அமையவேண்டும் என்றார்.

# கிழக்கு மாகாண அரச நிறுவனங்களில் மின் கட்டணத்தை 50 வீதமாக குறைக்க ஆளுநர் உத்தரவு



(கிண்ணியா நிருபர்)

மாகாண சபைகளின் கீழ் உள்ள நிறுவனங்களின் மின்சாரக் கட்டணத்தை கணிசமான அளவு குறைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் நேற்று முன்தினம் (07) மாலை அனைத்து மாகாண அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ அனைத்து மாகாண ஆளுநர்களுக்கும் இடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னரே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி அனைத்து மாகாண அரச நிறுவனங்களின் மின்சாரக் கட்டணத்தை குறைந்தபட்சம் 20% ஆகவும் அதிகபட்சமாக 50% ஆகவும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நிதியமைச்சர் தெரிவித்தார்.

அறிவுறுத்தல்களுக்கு அமைய, நேற்று முன்தினம் (07) முதல் மின் கட்டணத்தை குறைக்குமாறு ஆளுநர் மேலும் உத்தரவிட்டார்.

# கிண்ணியா துப்பாக்கிச்சூட்டில் இருவர் படுகாயம்; விமானப்படை சிப்பாய் உட்பட மூவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)







திருகோணமலை, கிண்ணியா – நடுஊற்று பகுதியில் நேற்று முன்தினம் (07) நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் 03 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் கிண்ணியா-சூரங்கல் பகுதியைச் சேர்ந்த பீர் முகம்மது முஜீப் (30வயது) மட்டக்களப்பு விமானப்படை முகாமில் கடமையாற்றி வருபவர் எனவும் இவர் கடந்த 03ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை விடுமுறையில் வீட்டுக்கு வந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன் கிண்ணியா-முனைச்சேனை பகுதியைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்து சபையில் சாரதியாக கடமையாற்றி வரும் நூர் முஹம்மது ரபீக் (34வயது) மற்றும் ஹமீது லெப்பை ஹசுறுல்லா (42வயது) ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட T56 ரக துப்பாக்கி மற்றும் அதற்கு பயன்படுத்தக்கூடிய 09 ரவைகளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

நடுஊற்று பகுதியிலுள்ள களப்புக்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், இவை கைப்பற்றப்பட்டதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த துப்பாக்கிச் சூட்டில் கிண்ணியா-குட்டி கராச்சி பகுதியை சேர்ந்த தாஜிது முகமது வசீம் (30வயது), சாகுல் ஹமீது முகம்மது ரமீஸ் (33வயது) ஆகிய இருவரும் காயமடைந்துள்ள நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது 48 மணிநேரங்கள் தடுத்து வைத்து விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இரு தரப்பினருக்கிடையிலான தகராறே துப்பாக்கிப் பிரயோகத்துக்கு காரணம் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட வாழைச்சேனை ஊடகர் கோகிலதாசனுக்குப் பிணை

(வாழைச்சேனை நிருபர்)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, கடந்த 16 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு - கிண்ணையடி வாழைச்சேனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் மு.கோகிலதாசன் வயது (38) நேற்று முன்தினம் (07) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எச்.எம்.எம்.பசில் முன்னிலையில் இவரது வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இவர் தனது சொந்த பெயர் பொறித்த முகப்புத்தகத்தில் அரசினால் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் (கார்த்திகை-27) அடங்கிய புகைப்படங்களை பதிவிட்டார் என்பதன் அடிப்படையில் இவர் 28.11.2020 ஆம் திகதி வாழைச்சேனை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இவர் கடந்த ஒருவருடமும் 04 மாதங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அத்துடன் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு சென்று காலை 09 மணிமுதல் 12 மணிக்குள் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் (07) சட்டத்தரணிகளான எம்.எச்.எம்.றம்சீன், ஹாலிப் றிபான் ஆகியோர் இவ்வழக்கில் ஆஜராகியிருந்தனர். மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் சார்பாக வழக்குகளில் ஆஜராகிவந்த சட்டத்தரணி தங்கமுத்து ஜெயசிங்கம் தவிர்க்கமுடியாத காரணங்களால் ஆஜராகியிருக்கவில்லை.

மு.கோகிலதாசன் சார்பில் கொழும்பில் உள்ள மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் சமீபத்தில் நிறுவப்பட்ட ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் முன்னால் மனு சமர்ப்பித்து விடுதலையைக் கோரியது. இம்மனுவை பரிசீலித்ததன் பின்னர் விடுதலை செய்வதற்கு அல்லது பிணையில் விடுவிப்பதற்கு தீர்மானித்திருந்தது.



சந்தேகநபர் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களம், ஆலோசனைக்குழு முன்னிலையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரத்தினவேல் மற்றும் ரனித்தா ஞானராசா கோயோர் ஆகியோர் ஆஜராகினர். மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் சமீபத்தில் நிறுவப்பட்ட ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக்குழுவின் முன்னால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 100க்கும் மேற்பட்டவர்கள் தொடர்பான மனுக்களை சமர்ப்பித்தன் விளைவாக இதுவரை 26 பேர் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் விளைவாக சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களத்துக்கும் பொருத்தமான மன்றுகளுக்கும் ஏற்ற பணிப்புரைகளை விடுத்திருந்தது. அதனடிப்படையில் நேற்று முன்தினம் இவ்வழக்கு நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அளிக்கப்பட்ட அறிவுரைக்கமைய மு.கோகுலதாசனை பிணையில் விடுவித்தார். குறித்த வழக்கின் விசாரணை எதிர்வரும் 03.06.2022 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் மு.கோகிலதாசன் இணையதளம் மற்றும் சமூக வலைத்தளங்களில் செய்திகளை அறிக்கையிட்டு வந்தவர். இதேவேளை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் பல தடவைகள் விசாரணைகளுக்குட்பட்டுமிருந்தார். அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் 2008இல் கைதுசெய்யப்பட்டு, மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். கடந்த 2018இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கோறளைப்பற்று பிரதேச சபையில் கிண்ணையடி வட்டாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளராக களமிறங்கியிருந்தார்.

அரசியல் பழிவாங்கல் காரணமாக இவரது கைது இடம்பெற்றுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். ஆரம்பத்தில் இவருடைய வழக்கில் சட்டத்தரணிகளான சஞ்சய வில்சன் ஜெயசேகர, சுவஸ்திகா பல்வேறு வகைகளில் சட்ட உதவிகளை வழங்கியிருந்தபோதும், பின்னர் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் ஊடாக விடுதலைக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, மு.கோகிலதாசன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். ஊடகவியலாளர் மு.கோகிலதாசனின் விடுதலைக்காக, ஊடகவியலாளர் அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கம் போன்ற பல்வேறு அமைப்புகள் குரல் கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(றாசிக் நபாயிஸ், சர்ஜூன் லாபீர்)

'நாடும் தேசமும் உலகமும் அவளே' நிலையான எதிர்காலத்துக்காக பால்நிலை சமத்துவம் பேணல் எனும் பேசுபொருளான மகுட வாசகத்தினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்நிலையில் கல்முனை பிரதேச செயலகத்திலும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.பாத்திமா சிபாயாவின் ஒருங்கிணைப்பில் நேற்று (08) பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.






கல்முனை பிரதேச பெண்களின் ஆக்க நிறைந்த வேலைப்பாடுகள் கொண்ட பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டதுடன், கலை கலாசார நிகழ்வும் இடம்பெற்றது. இதன்போது இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஆக்கங்கள் அடங்கிய விசேட முனை மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. கல்முனை பிரதேசத்தில் சிறப்பாக செயற்பட்ட பெண்கள் சிலர் நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட தாவரவியல் பேராசிரியரும் தர மதிப்பீட்டுக்கான மையத்தின் பணிப்பாளருமான எம்.ஜ.எஸ்.சபீனா, நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்சான், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலீஹ், கிராம நிர்வாக உத்தியோகத்தர் யூ.எல்.பதியூத்தீன், மருதமுனை சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ.எல்.எம்.நஜீப், கேப்சோ நிறுவனப் பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட், மருதமுனை பறக்கத் டெக்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் அல்-ஹாஜ் எம்.ஜ.ஏ.பரீட், கிராமிய மகளிர் சங்க உறுப்பினர்கள் மற்றும் மகளிர் கலை இலக்கிய வட்ட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மகளிர் தினத்தை முன்னிட்டு கல்முனை பொலிஸ் நிலையத்தினால் உணவுப்பொருட்கள் கையளிப்பு

(கல்முனை நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கல்முனை பொலிஸ் நிலையத்தினால் உலருணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள பெண் தலைமைத்துவம் தாங்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் நேற்று (08) கல்முனை பொலிஸ் நிலையத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வு கல்முனை பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட் ஒருங்கிணைப்பில், கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் தலைமையில் இடம்பெற்றது.





இதன்போது உலருணவுப் பொருட்களை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர், சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட் உட்பட பொலிஸார் இணைந்து உலருணவுப் பொருட்களை மேற்குறித்த பெண் தலைமைத்துவத்துக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கிவைத்தனர்.

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியை தரமுயர்த்தி உத்தியோகபூர்வமாக மாணவர்களிடம் கையளிப்பு

(மாளிகைக்காடு நிருபர்)





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைக்கு அமைவாக இலங்கைக் கல்வியின் உண்மையான சுதந்திரத்துக்காக தேசிய பாடசாலைகள் எண்ணிக்கையை 1000 வரையில் அதிகரிக்கும் தேசிய நிகழ்வும், சர்வதேச மகளிர் தினமும் - 2022 நிகழ்வின் ஓர் அங்கமாக கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

தேசிய பாடசாலையாக கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியை மாணவிகளுக்கு உரித்தாக்கும் நிகழ்வில் சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் பாடசாலை அதிபர் யூ.எல்.எம்.அமீன் தலைமையில் நடைபெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடு முழுவதும் நடைபெற்றுவரும் இந்நிகழ்வின் ஓர் அங்கமாக கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் மேலும் கல்வி வெளியீட்டு திணைக்கள மேலதிக ஆணையாளர் நாயகம் இசட். தாஜுதீன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜீ.திஸ்ஸநாயக, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் என்.புள்ளநாயகம், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம்.ஸாஹிர், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரி வீ.எம். ஸம்ஸம், முன்னாள் அதிபரும் சாய்ந்தமருது கலாசார அதிகார சபை பிரதித்தலைவருமான ஏ.எச்.அப்துல் வஸீர், கல்முனை வலய பாடசாலைகளின் அதிபர்கள், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி பிரதி அதிபர் ஆர்.எம்.அஸ்மி காரியப்பர், நிர்வாகம், மாணவர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.









சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதேச செயலகமும் மக்கள் வங்கியும் இணைந்து ஏற்பாடுசெய்த, பெண் முயற்சியாளர்களின் கைத்தொழில் பொருட்களை காட்சிப்படுத்தல், விற்பனை செய்தல் என்பன மூதூர் மக்கள் வங்கிக் கிளைக்கு முன்னால் நேற்று (08) இடம்பெற்றது. (மூதூர் நிருபர்)

# மூதூர் கங்குவேலியில் இளைஞரின் தாக்குதலில் முன்னாள் போராளி உயிரிழப்பு

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்குவேலி பகுதியில் கையடக்கத் தொலைபேசியை திருடியதாக இளைஞர்களினால் தாக்குதலுக்குள்ளான முன்னாள் போராளி நேற்று முன்தினம் (07) உயிரிழந்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியில் வசித்துவந்த ஒரு பிள்ளையின் தந்தையான சிவபாலன் சத்தியபவான் (44 வயது) என்ற முன்னாள் போராளியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

இந்நபர் வவுனியா பிரதேசத்தில் திருமணமாகி குடும்பத் தகராறில் தனது சித்தியுடன் கங்குவேலி பகுதியில் வசித்து வருகின்ற நிலையில், மதுவுக்கு அடிமையாகி மாலைநேரங்களில் வழமையாக மது அருந்தி வந்துள்ளார். இந்நிலையில் இளைஞர் ஒருவருடைய கையடக்கத் தொலைபேசியை திருடி அந்த கையடக்கத் தொலைபேசியை விற்பனைசெய்து மது அருந்தியுள்ளதாக குறித்த இளைஞருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து குறித்த இளைஞர் சம்பவ இடத்துக்குச் சென்று முன்னாள் போராளியான அந்நபரை தாக்கியுள்ளார்.

இந்நிலையில், குறித்த நபர் அழுது கொண்டு வந்து தனது சித்தியிடம் தன்னை இருவர் தாக்கியதாகவும் தனக்கு மயக்கம் வருவதாகவும் தலைப்பகுதியில் விறைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறியதை யடுத்து, சித்தி தலைக்கு ஒடிக்குளோன் போட்டு தலையை தேய்த்துள்ளார்.

அதன்பின்னர் குறித்த நபர் உறங்கியதாகவும், இதனையடுத்து நேற்று முன்தினம் மாலை சென்று பார்த்தபோது மயக்க நிலையில் இருந்துள்ளார். பின்னர் உடனடியாக 1990 அவசர அம்பியூலன்ஸை அழைத்து குறித்த நபரை மூதூர் தள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த நிலையில், நேற்று முன்தினம் அவர் உயிரிழந்ததாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மூதூர் தள வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சட்ட வைத்திய நிபுணரின் சோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மரணம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு காந்தி பூங்காவில் விலைவாசியை கண்டித்து கேஸ் சிலிண்டருடன் பெண்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கனகராசா சரவணன்)



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலைவாசியால் குடும்ப வன்முறை அதிகரித்துள்ளது. எனவே, பெண்கள் வாழ்வதா, சாவதா என அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும் - எனக் கோரி மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் (07) காந்தி பூங்காவில் கேஸ் சிலிண்டருடன் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றத்தால் பல பெண்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்தமுடியாத சூழ்நிலை காணப்படுவதுடன், கடந்த கால யுத்தத்தினாலும் பல பிரச்சினையாலும் பல அனர்த்தங்களுக்கு தமிழ் இனம் முகங்கொடுத்துள்ளது.

இன்று நாட்டில் அதிகரித்துவரும் விலைவாசி யினால் கூலிவேலைக்கு சென்றுவரும் கணவன், நான்கு ஐந்து பிள்ளைகளை வைத்துக்கொண்டு எவ்வாறு குடும்பத்தை நடத்துவது? அதிகரித்துவரும் இந்த விலைவாசியால் குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இதனால் ஆண்கள் வேறு வேறு தவறான பாதையில் செல்கின்றதால் குடும்பத்தில் பிள்ளைகள் -தாய்க்குமிடையிலான அன்பு இல்லாமல் போய் கலாசார சீர்கேடு உருவெடுத்துள்ளது.

ஆகவே, இந்த நாட்டில் விலைவாசி அதிகரிப்பால் தமிழ், சிங்கள சமூகம் மத்தியில் வேறுபாடு இல்லாமல், மீண்டும் பெண்கள் விறகு தேடும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், அடுத்தடுத்த மாதங்களில் பெண்கள் தற்கொலை செய்ய முயற்சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த நிலையில் உலக மகளிர் தினத்தை பெண்கள் கொண்டாட முடியாத நிலையிலுள்ளோம். எனவே இந்த நாட்டில் பெண்கள் சாவதா, வாழ்வதா என அரசு முடிவெடுக்க வேண்டும். விலைவாசியை கண்டித்து விலையை ஏற்றி வன்முறையை தூண்டாதே, அரசே பெண்களின் கண்ணீருக்கு பதில் சொல், மீண்டும் விறகு தேடி பெண்கள் என சுலோகங்களை ஏந்தியவாறு கேஸ் சிலிண்டருடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# நாட்டு மக்களை இருட்டில் தவிக்கவிட்டு வேடிக்கை பார்க்கும் இனவாத ஆட்சியாளர்கள்!

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் தெரிவிப்பு

(கல்லடி நிருபர்)



நாட்டு மக்களை இருட்டில் தவிக்கவிட்டு, இனவாத ஆட்சி தொடர்கிறது - என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகச் செயலாளரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளருமான பா.அரியநேத்திரன் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இலங்கையில் மின்தடை ஏழு மணித்தியாலங்களாக நீடிக்கப்பட்டமை தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தற்போதைய ஆட்சியைப் பார்த்தால் பரிதாபமாகவே உள்ளது. நாட்டு மக்களுக்கு என்ன நடக்கின்றது என்பதை ஆட்சியாளர்கள் உணரவில்லை. இதற்கு நல்ல உதாரணம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு என ஊடகங்களில் வரும் செய்திகள் பொய் எனக் கூறியுள்ளார். இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது, நாட்டு மக்களுக்கு என்ன நடக்கிறது என்பது ஆட்சியாளர்களுக்குத் தெரியவில்லை.

இப்போது எரிபொருள் பற்றாக்குறை. இதனால் மின்துண்டிப்பு தொடராக உள்ளது. தற்போது புதிதாக எரிபொருள் அமைச்சராக பவித்திரா வன்னியாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், அமைச்சர்களை மாற்றுவதால் மட்டும் நாட்டுக்கு வெளிச்சம் வரும் என நினைப்பது மூடத்தனம்.

உலகமெலாம் ஓடி ஓடி கடன் வாங்க முடியாத தொரு நிலையில் நாடும் மக்களும் தத்தளித்துக் கொண்டுள்ளனர். ஒரு பக்கம் பஞ்சம், பட்டினி என மக்கள் மூன்றுவேளை உணவு உட்கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர்.

இன்னொரு பக்கம் ஆட்சியாளர்களுக்குள்ளேயே அமைச்சர்களில் கூட ஒற்றுமையில்லை. உண்மைகளை வெளியில் சொன்னால் அவர்களை பதவி விலக்கும் இராணுவ நடவடிக்கை அரசாங்கத்தில் உள்ளது.

அதையும் விட, தற்போது ஜெனீவாவில் மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் இலங்கை தொடர்பாக அதிருப்தியான கருத்துகளை வெளியிட்டுள்ளார். ஆனால், வழமையாகவே பொய் கூறி, பிழைப்பு நடத்தும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பொய் மூடைகளுடன் ஜெனீவாவில் இறங்கியுள்ளார். அந்தப் பொய்கள் கடந்த 13 வருடங்களாக கூறிவரும் பொய்கள் என்பதை சர்வதேச சமூகம் இப்போது உணர்ந்துள்ளது.

இந்த வருடம் முடிவதற்குள் இன்னும் பல நெருக்கடிகளுக்கு இன்றைய குடும்ப ஆட்சியாளர்கள் முகங்கொடுக்கும் நிலை ஏற்படுவதை யாராலும் தடுத்துநிறுத்த முடியாது - எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அட்டாளைச்சேனையில் ஆசிரிய பயிலுனர்கள் கட்டுறு பயிற்சிக்காக கடமைகளை பொறுப்பேற்பு

(நற்பிட்டிமுனை நிருபர்)

அட்டாளைச்சேனை பயிலுனர் ஆசிரியர்கள் 07ஆம் திகதிமுதல் கட்டுறு பயிற்சிக்கு வழங்கப்பட்ட கடிதப்பிரகாரம் தத்தமது பாடசாலைகளில் கடமைகளை கையேற்றுள்ளதோடு, நியமனக்கடிதம் பீடாதிபதி கே.புண்ணியமூர்த்தியினால் ஒப்பமிட்டே அனுப்பப்பட்டுள்ளது.

07.03.2022 தொடக்கம் கட்டுறு பயிற்சியை தொடரவுள்ள பயிலுநர் ஆசிரியர்கள் 31.12.2022 வரை நியமிக்கப்பட்ட பாடசாலைகளில் சேவையாற்ற வேண்டுமெனவும் பீடாதிபதி க.புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

குறிப்பிட்ட பாடசாலையின் பாடவிதானம், இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென தெரிவித்துள்ள பீடாதிபதி, நிர்வாக விடயங்களுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

பயிற்சிக்காலத்தில் 7 நாட்கள் மாத்திரம் விடுமுறை வழங்கப்படுமெனவும் மாதக் கொடுப்பனவு வழங்கப்படும்போது அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் வழங்கப்படவேண்டுமென்பதையும் தெரிவித்துள்ளார்.

# நடமாடும் கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை காரைதீவில் முன்னெடுப்பு



(மாளிகைக்காடு நிருபர்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு பிரதேசத்தில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் நேற்று முன்தினம் (07) முதல் கொவிட்-19 தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வீட்டிலிருந்து வரமுடியாதவர்களுக்கு இரண்டாம், மூன்றாம் கட்ட கொவிட்-19 தடுப்பூசி வழங்கும் நிகழ்வில், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், நுளம்பு கள தடுப்பு பிரிவினர்கள், பல்நோக்கு செயலணி பயிலுனர்கள் வீடு வீடாகச் சென்று அவர்களுக்கான கொவிட்-19 தடுப்பூசிகளை வழங்கி வருகின்றனர்.



# தென்கிழக்குப் பல்கலைக்கு முன்னால் தீப்பந்தம் ஏந்தி மாணவர்கள் போராட்டம்!



(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் இரவு (07) பல்கலைக்கழகத்தின் முன்னால் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தீப்பந்தம் மற்றும் சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தை தனியார் மயப்படுத்தல் மற்றும் புதிய மாணவர் அனுமதி போன்ற விடயங்களை முன்வைத்தும், பல்கலைக்கழகத்தை திறக்குமாறும் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குகொள்வதற்காக பஸ்களில் வந்திறங்கிய பல்கலைக்கழக மாணவர்கள், இரவுநேரம் என்றும் பாராது பங்கெடுத்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அக்கரைப்பற்று பாடசாலைக்கு புகைப்பட பிரதி இயந்திரம் அன்பளிப்பு



(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் பாடவிதான அபிவிருத்தி மற்றும் பரீட்சைப் பிரிவிற்காக பெறுமதிமிக்க புகைப்பட பிரதி எடுக்கும் இயந்திரம் கல்லூரியின் அதிபரின் வேண்டுகோளுக்கமைவாக தொழிலதிபர் ஒருவரினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் கல்லூரி வளாகத்தில் நேற்று (08) இடம்பெற்ற நிகழ்வின் போது பிரபல தொழிலதிபரும், ஏ.எஸ்.ஆர்.எம் உரிமையாளருமான எம்.எம்.முஸாதிக் புகைப்பட பிரதி பண்ணும் இயந்திரத்தினை கையளித்தார்.

இதன்போது பிரதி அதிபர்களான எம்.இக்பால், எஸ்.எம்.எம்.ஜாபீர், பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர் பொறியியலாளர் என்.ரி.எம்.சிறாஜுதீன் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் ஒரு நாள் ஊடகச் செயலமர்வு



(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் வழிகாட்டலில் ஒருநாள் ஊடகச் செயலமர்வொன்று திருகோணமலையில் இடம்பெற்றது.

திருகோணமலை மல்லிகா விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேக்ஸ் தமிழ் ஊடகச் வலையமைப்பின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டு இந்த இலவச ஒருநாள் ஊடகச் செயலமர்வு இடம்பெற்றது.

இவ்வூடகச் செயலமர்வில் வளவாளராக சர்வதேச தேசிய விருது வென்ற தொலைக்காட்சி தயாரிப்பாளரும், தொகுப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ஜே.பிஸ்பிரின் முஹம்மத் கலந்துகொண்டார்.

குறித்த செயலமர்வில் 30இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியதுடன் இவ்வூடக செயலமர்வில் செய்தி என்றால் என்ன?, செய்தி தயாரித்தல், செய்தி வாசித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டதுடன், அதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

மேலும் இந்த ஒரு நாள் இலவச ஊடக செயலமர்வில் கலந்துகொண்டு செய்தி வாசித்தல் மற்றும் செய்தி தயாரித்தல் போன்ற துறைகளில் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்திய நபர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பங்குபற்றியவர்களுக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் மேக்ஸ் தமிழ் ஊடக வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.எப்.மஹீஷா, வலையமைப்பின் உயரதிகாரிகள், பிராந்திய ஊடகவியலாளர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் வடமலை ராஜ்குமார், சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனி உத்தர மகோற்சவம்

(காரைதீவு நிருபர் )

வரலாற்றுப் பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனி உத்தர மகோற்சவம் நேற்று முன்தினம் மாலை வாஸ்து சாந்தியுடன் ஆரம்பமாகியுள்ளது.

9ஆம் திகதியாகிய இன்று தொடக்கம் தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழா நடைபெறுவதுடன் தினமும் காலை 10.00 மணிக்கு கும்ப பூஜையும் 12.00 மணிக்கு விசேட பூஜையும் மாலை 6.00 மணிக்கு இரவு பூஜையுடன், நற்சிந்தனையும் வசந்த மண்டபப் பூஜையினைத் தொடர்ந்து, அம்பாள் உள்வீதி வெளி வீதி உலாவருதல் இடம்பெறும்.

13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்திலிருந்து பாற்குட பவனியும் 16 ஆம் திகதி அம்பாள், விநாயகர், முருகப் பெருமான் சகிதம் முத்துச் சப்பரத்தில் தேரோடும் வீதி வழியாக பவனி வருதலும் இடம்பெற்று 18 ஆம் திகதி காலை நடைபெறும் சமுத்திரத் தீர்த்தோற்சவத்துடனும் 19ஆம் திகதி மாலை நடைபெறும் பைரவர் பூஜையுடன் உற்சவம் இனிதே நிறைவுபெறவுள்ளது.



# உலக செய்திகள்

# 14 நாட்களாக உக்ரைன் மீது ரஷ்யா உக்கிரத் தாக்குதல்

## உயிர் பிழைக்க பதுங்கு குழிகளில் மக்கள் திண்டாட்டம்

## பல்வேறு நகரங்களில் உணவு - குடிநீர் - மருந்து இன்றியும் தப்பிச் செல்ல வழியின்றியும் அப்பாவிகள் தவிப்பு

## ''நான் பின்வாங்க மாட்டேன்'' - ஸெலென்ஸ்கி சூளுரை

## சர்வதேச நீதிமன்ற விசாரணையை புறக்கணித்தது ரஷ்யா

## மசகு எண்ணெய் விலை 300 டொலர் வரை உயரும் - ரஷ்யா எச்சரிக்கை

உக்ரைன் - ரஷ்யாவுக்கிடையேயான மோதல் இன்று 14 நாட்களை எட்டியுள்ள நிலையில், ரஷ்யப் படைகள் தங்களின் தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன.

உக்ரைனுக்கு எதிராக கடந்த 24ஆம் திகதி போர்த்தொடுத்த ரஷ்யா, மும்முனைத் தாக்குதல் நடத்தி உக்ரைனின் பல நகரங்களை கைப்பற்றியுள்ளது.

உக்ரைனில் 14ஆவது நாளான இன்று தாக்குதலை தொடரும் ரஷ்யா, தலைநகர் கீவ் மற்றும் கார்க்கிவ், மரியுபோல், சுமி ஆகிய நாகரங்களை முற்றுகையிட்டுள்ளது. போரில் பொதுமக்கள் உயிரிழப்பதை தடுக்க அவர்களை பாதுகாப்பாக ரஷ்யா அல்லது பெலாரஸுக்கு வெளியேற்றும் திட்டத்தை முன்மொழிந்த ரஷ்யா, அங்கெல்லாம் தாக்குதலை - தற்காலிகமாக போர்நிறுத்தத்தை அறிவித்துள்ளது. ஆனால், இதனை ஏற்க உக்ரைன் மறுத்துவிட்டது.

போர் நிறுத்தம் அறிவித்துள்ள இடங்களைத் தவிர, மற்ற இடங்களில் ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. சைடோமர் நகரிலுள்ள எண்ணெய்க் கிடங்கு மீது ரஷ்யப் படைகள் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. எண்ணெய்க் கிடங்கு பற்றியெரிந்த காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கக்கோவ் பகுதியில் ரஷ்யப் படைகளை எதிர்த்து உக்ரைன் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது ரஷ்யப் படைகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். தலைநகர் கீவை ஒட்டியுள்ள இர்பின் நகரில் ரஷ்யப் படைகள் தொடர்ந்து 2ஆவது நாளாக உக்கிரத் தாக்குதலை நடத்தின. இர்பின் நகரில் அனைத்து வீடுகளும் குண்டுவீச்சில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தப் போரானது இனப்படுகொலை என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

போர் தொடங்கிய நாள்முதல் இதுவரை பொதுமக்கள் 406 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 801 பேர் காயமடைந்துள்ளதாகவும் ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது. 17 இலட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாக அண்டை நாடுகளுக்கு அடைக்கலம் புகுந்துவிட்டனர் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

**கார்கீவ் நகர் மீது குண்டு மழை**

ரஷ்யத் தாக்குதலில் காயமடைந்த உக்ரைனியர்களால் கார்கீவ் நகர மருத்துவமனை நிரம்பி வழிந்தது.

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரான கார்கீவ் மீது ரஷ்ய விமானங்கள் குண்டு மழை பொழிந்ததால் ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன.





சுமி நகர குண்டுவீச்சில் படுகாயங்களுக்குள்ளான குழந்தை

அங்கு சிகிச்சை பெறுபவர்கள், ரஷ்யத் தாக்குதலிலிருந்து தப்பிக்க, மருத்துவமனையின் அடித்தளத்தில் தற்காலிகமாக அறை அமைத்து தஞ்சமடைந்துள்ளனர்.

**சுமி நகரில் குண்டுவீச்சு தாக்குதல்**

இந்நிலையில், உக்ரைனின் சுமி நகர குடியிருப்புப் பகுதிகளில் ரஷ்யப் படைகள் குண்டுவீசி தாக்குதல் நடத்தியதால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

சுமி நகரின் மீது ரஷ்யப் படைகள் நேற்றுமுன்தினம் இரவு குடியிருப்புப் பகுதிகளில் நடத்தப்பட்ட குண்டுவீச்சு தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உட்பட 21 பேர் உயிரிழந்ததை மீட்புக் குழுவினர் கண்டறிந்துள்ளனர்.

கீவ்வில், செர்னிவ், கார்கீவ், மரியும்போல் ஆகிய நகரங்களில் ரஷ்யா அறிவித்த போர் நிறுத்தத்திற்கு சில மணி நேரங்களுக்கு அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

**கீவ்வில் குண்டு தாக்குதல்; 13 பேர் உயிரிழப்பு**

கீவ் நகரில் ரஷ்ய இராணுவம் குண்டுவீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இப்பகுதியில் சுமார் 30 பேர் பேக்கரி பகுதியில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் 13 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இடிபாடுகளில் சிக்கிய 5 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அவசர சேவை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**''நான் ஓடி ஒளியவில்லை''**

''நாங்கள் நாட்டில்தான் உள்ளோம், இராணுவம் எங்களுடன் உள்ளது. எங்கும் தப்பிச் செல்லவில்லை. நான் பின்வாங்க மாட்டேன்'' - இவ்வாறு உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.



உக்ரைனிலிருந்து தான் தப்பிச் சென்றுவிட்டதாக வெளியான தகவல்களுக்கு அந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கி மீண்டும் மறுப்புத் தெரிவித்துள்ள நிலையில், இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில்,

''இது எனது நகரம். ஒவ்வொரு உக்ரைன் குடிமகனும் ரஷ்யாவுக்கு எதிராக போராடி வருகின்றார். ரஷ்ய வீரர்களின் துப்பாக்கிச்சூட்டை தைரியமாக எதிர்கொண்டு வருகிறோம், போரில் வெற்றி பெறும்வரை உக்ரைனைவிட்டு வெளியேற மாட்டேன். யாரைக் கண்டும் எனக்கு அச்சம் இல்லை'' - என்றார்.

அப்பாவி பொதுமக்கள் உயிரிழப்பதை தடுக்க - அவர்களை பாதுகாப்பாக ரஷ்யா அல்லது பெலாரஸுக்கு வெளியேற்றும் திட்டத்தை முன்மொழிந்த ரஷ்யா, அங்கெல்லாம் தாக்குதலை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. ஆனால், இதனை ஏற்க உக்ரைன் மறுத்துவிட்டது.

**அடைக்கலம் கொடுக்க தயாராகவுள்ளதாக ரஷ்யா அறிவிப்பு**

உக்ரைன் மக்களுக்கு மனிதாபிமான நடவடிக்கையாக ரஷ்யா மற்றும் பெலாரஸில் அடைக்கலம் கொடுக்க தயாராகவுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

பேக்கரி உள்ளிட்டவைகளின் மீது கூட ரஷ்ய விமானப் படைகள் குண்டுமழை பொழிவதாகவும், இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு வருவதாகவும் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரியுபோல், கார்கிவ், இர்பின் உள்ளிட்ட நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் உணவு, குடிநீரில்லாமல் தவித்து வருவதாகவும், ரஷ்யப் படைகள் உடனடியாக உக்ரைனை விட்டு வெளியேற வேண்டுமெனவும் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் மீது தாக்குதல் நடத்துவதை மறுத்துள்ள ரஷ்ய பாதுகாப்புத்துறை, ரஷ்யா மற்றும் உலக நாடுகளை ஏமாற்றும் உக்ரைனின் திட்டம் இந்த முறை பலிக்காது என்று தெரிவித்தது.

**ரஷ்யாவின் மனிதாபிமான வழித்தடத்தை நிராகரித்தது உக்ரைன்**

ரஷ்யா உருவாக்கிய மனிதாபிமான வழித்தடத்தை உக்ரைன் நிராகரித்துள்ளது. கீவ், கார்கிவ் மற்றும் தெற்கு துறைமுக நகரமான மரியுபோல் உள்ளிட்ட 6 நகரங்களின் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், பொதுமக்கள் வெளியேறுவதற்கு மனிதாபிமான வழித்தடத்தை உருவாக்கித் தருவதாக ரஷ்யா அறிவித்திருந்தது. இந்த வழித்தடத்தில் இரு பாதைகள் மட்டுமே உக்ரைனில் முடிவடைகின்றன.

ஏனைய பாதைகளில் பொதுமக்கள் ரஷ்யாவுக்கு மட்டுமே தப்பிச் செல்லமுடியும் என்பதால் ரஷ்யாவின் யோசனையை ஏற்க முடியாது எனத் தெரிவித்து உக்ரைன் ரஷ்யாவின் அறிவிப்பை நிராகரித்துள்ளது.

**சுட்டு வீழ்த்தப்பட்ட ரஷ்ய தளபதி**

ரஷ்யாவின் இரண்டாவது இராணுவத் தளபதியை வீழ்த்தியுள்ளதாக உக்ரைன் அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் மூத்த இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விட்லே கெராசிமோவ் கார்க்கிவ் நகர் அருகில் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்டுள்ளார் என உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க...

# உக்ரைன் - ரஷ்யா 4ஆம் கட்ட சமாதானப் பேச்சு நாளை



உக்ரைன் - ரஷ்யா இடையேயான நான்காம் கட்ட பேச்சுவார்த்தை துருக்கியில் நாளை நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை இன்று 14ஆவது நாளை எட்டிய நிலையில், தலைநகர் கீவ்வை நோக்கி ரஷ்யப் படைகள் தொடர்ந்து முன்னேறி வருகிறன.

நேற்றுமுன்தினம் போலந்தில் நடைபெற்ற மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தையில் இரு நாடுகள் இடையே சுமூக உடன்பாடு எட்டப்படாத நிலையில், நான்காம் கட்ட பேச்சுவார்த்தை நாளை 10ஆம் திகதி அண்டைநாடான துருக்கியில் நடைபெறும் என உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

**தோல்வியடைந்த 3ஆம் கட்டப் பேச்சு**

ரஷ்யா - உக்ரைன் நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற, 3ஆம் கட்ட போர் நிறுத்தம் குறித்த சமாதான பேச்சுவார்த்தை எந்த முடிவும் எட்டப்படாமலேயே முடிவடைந்தது.

2ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், போலந்து எல்லை அருகே ஏற்கனவே பேச்சுவார்த்தை நடைபெற்ற இடத்திலேயே மீண்டும் சந்திப்பு நடைபெற்றது.

கிரிமியாவை ரஷ்யாவின் பகுதி என்றும் Donetsk மற்றும் Luhansk பகுதிகளை தன்னாட்சி பெற்ற பகுதிகள் என அறிவித்து உக்ரைன் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவருவது உள்ளிட்ட நிபந்தனைகளை ரஷ்யப் பிரதிநிதிகள் முன்வைத்தனர். எனினும், இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியிலேயே முடிவடைந்துள்ளது.

**போரை நிறுத்தவேண்டுமென்றால் கிரிமியாவை ரஷ்யப் பகுதி என்று உக்ரைன் அறிவிக்க வேண்டும்**

இதற்கிடையே "உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை நிறுத்தவேண்டுமென்றால் கிரிமியாவை ரஷ்யப் பகுதி என்றும் Donetsk மற்றும் Lugansk பகுதிகளை தன்னாட்சி பெற்ற பகுதிகள் எனவும் உக்ரைன் அறிவிக்க வேண்டும்" என கிரிம்ளின்(ரஷ்ய ஜனாதிபதி மாளிகை) செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

தலைநகர் கீவ்வை நோக்கி ரஷ்யப் படைகள் முன்னேறிச் செல்லும் அதேவேளை, போர் நிறுத்தம் குறித்து உக்ரைனுடன் பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யா தயாராக இருப்பதாக செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

உக்ரைனுக்கு போரின் தீவிரத்தன்மை தெரிந்தும், நொடியில் போரை நிறுத்த முடியும் எனக் கூறிவருவதாக டிமிட்ரி தெரிவித்தார். மேலும் ரஷ்யாவின் நிபந்தனைகளுக்கு ஏற்றபடி உக்ரைன் அரசியலைமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தால் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயார் - என்றார்.

---

*14ஆம் பக்கத் தொடர்ச்சி...*





உக்ரைன்- ரஷ்யா இடையிலான போர் தீவிரமடைந்துள்ள நிலையில் "எந்த நிலையிலும் பின்வாங்க மாட்டோம்" என்று உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் படையெடுப்பை குறித்து விசாரிக்க ஐக்கிய நாடுகள் நீதிமன்றம் ரஷ்யாவை விசாரணைக்கு அழைத்த நிலையில், அதனை ரஷ்யா புறக்கணித்து தொடர்ந்து போரில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் இராணுவம் ரஷ்யாவின் முக்கிய தளபதி ஒருவரை வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது

**சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை**

தங்கள் நாட்டிலிருந்து ரஷ்யப் படைகளை வெளியேற்றக்கோரி உக்ரைன் தாக்கல் செய்த மனு தொடர்பாக ஐ.நா. சர்வதேச நீதிமன்றம் விசாரணையை தொடங்கியுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரில் இருதரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், வெளிநாட்டினரும் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில், ரஷ்யப் படைகளை வெளியேற உத்தரவிடக்கோரியும், போர் நிறுத்தத்தை அறிவிக்கக்கோரியும் நெதர்லாந்தின் ஹேக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் உக்ரைன் கடந்த வாரம் மனு தாக்கல் செய்தது.

இந்த மனு மீதான விசாரணை தொடங்கியபோது, நாகரிகமான நாடுகளைப்போல் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வோம் என்றும் ஆயுதங்களை கைவிட வேண்டும் என்றும் ரஷ்யாவை உக்ரைன் வலியுறுத்தியது.

புட்டின் உண்மைக்கு மாறான கருத்துகளை தெரிவிப்பதாகவும், சர்வதேச சட்டங்களை ரஷ்யா அவமதித்ததாகவும் உக்ரைன் தரப்பு தெரிவித்தது. சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணையில் பங்கேற்கப்போவதில்லை என ரஷ்யா ஏற்கனவே அறிவித்த நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சர்வதேச விசாரணையை புறக்கணித்துள்ளது.

இந்த விவகாரத்தில் சில நாட்களில் சர்வதேச நீதிமன்றம் முடிவு எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து ஆம்ஸ்டர்டோம் பல்கலைக்கழக பேராசிரியர் டெரி கில் தெரிவிக்கையில்,

தாக்குதலை நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டாலும், அதன்படி ரஷ்யா நடந்துகொள்ள வாய்ப்பில்லை. சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவை ஒரு நாடு செயற்படுத்தாவிட்டால், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நடவடிக்கையை நீதிபதிகள் கோர முடியும் - என்றார்.

**மசகு எண்ணெய் விலை 300 டொலரை எட்டும்**

ரஷ்யாவிடமிருந்து பெறும் மசகு எண்ணெய்க்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தால் ஒரு பீப்பாய் எண்ணெய் 300 டொலர் வரை விலை உயரும் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

ரஷ்ய மசகு எண்ணெய் இறக்குமதிக்கு ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தால், சர்வதேச சந்தையில் அதன் தாக்கம் பேரழிவை ஏற்படுத்தும் என துணைப் பிரதமர் அலெக்சாண்டர் நோவக் தெரிவித்தார்.

ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 300 டொலருக்கும் மேலாக விலை உயரும் என்ற அலெக்சாண்டர் நோவக், அதனால் ஐரோப்பிய சந்தையில் ஏற்படும் தாக்கம் ஒரு வருடத்திற்கு இருக்கும் என்றும் அதை ஐரோப்பிய நாடுகளால் ஈடுகட்ட முடியது எனவும் தெரிவித்தார்.

**நட்புறவு இல்லாத நாடுகளின் பட்டியலுக்கு அங்கீகாரமளித்தது ரஷ்யா**

உக்ரைன் மீது படையெடுத்ததால் பொருளாதாரத் தடைகள் விதித்த அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நட்புறவில்லாத நாடுகளின் பட்டியலுக்கு புட்டின் அரசு அங்கீகாரமளித்துள்ளது.

கனடா, ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகள், ஸ்விட்சர்லாந்து, நோர்வே, நியூசிலாந்து , சிங்கப்பூர், தாய்வான், ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

ஐ.நா. வாக்கெடுப்பில் நடுநிலை வகித்த இந்தியா இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை. இந்த நட்பில்லாத நாடுகளுடன் வர்த்தக உறவுகளை நிறுத்திக்கொள்ள ரஷ்யா திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

**சீனாவின் மூலோபாய கூட்டாளி ரஷ்யா**

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை கண்டிக்க தொடர்ந்து மறுத்துவரும் சீனா, ரஷ்யாவை தங்களது மூலோபாய கூட்டாளி என தெரிவித்துள்ளது.

சீன நாடாளுமன்றக் கூட்டத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி, உலகின் மிக முக்கியமான இரு தரப்பு உறவுகளில் ரஷ்யா, சீனாவின் உறவும் ஒன்று என்றார்.

சர்வதேச நாடுகளில் எவ்வளவு ஆபத்தான நிகழ்வுகள் நேர்ந்தாலும், தங்களுக்கு இடையிலான மூலோபாய கவனத்தைத் தக்கவைத்து, சீனா ரஷ்யாவின் கூட்டாண்மை வளர்ச்சியை மேம்படுத்துவோம் என வாங் யி கூறினார்.

அமெரிக்கா உட்பட மேலைநாடுகளின் பொருளாதாரத் தடைகளை தாண்டியும் ரஷ்யாவுக்கு பல்வேறு உதவிகளை சீனா செய்து வருகிறது.

**தற்காலிக போர்நிறுத்தம்**

இந்நிலையில், மக்கள் வெளியேற்றம் மற்றும் அவர்களுக்கான உதவிகள் தொடர்பாக நேற்று தலைநகர் கீவ், செர்னிவ், சுமி, கார்க்கிவ், மரியூபோல் ஆகிய 5 நகரங்களில் தற்காலிக போர்நிறுத்தம் செய்வதாக ரஷ்யா அறிவித்திருந்தது.

அதேசமயம் மற்ற நகரங்களில் ஏவுகணைகள் மூலம் குடியிருப்புப் பகுதிகள் மீது கடும் தாக்குதல் நடத்தப்படுகிறது.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா, பயங்கர ஆயுதங்களைக்கொண்டு நாட்டையே சர்வநாசமாக்கி வருகிறது. இன்று 14 நாட்களாக நடந்த போரில் பல இடங்களில் தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுவதால், பதுங்கு குழிகளில் மக்கள் உயிர் பிழைக்க போராடி வருகின்றனர். பல்வேறு நகரங்களில் உணவு, குடிநீர், மருந்து இல்லாமலும் தப்பிச் செல்லவும் முடியாமலும் மக்கள் தவிக்கின்றனர்.

இதற்கிடையே, மனிதாபிமான அடிப்படையில் பொதுமக்களை வெளியேற்ற மரியுபோல், வோல்னோவாக ஆகிய 2 நகரங்களில் நேற்று முன்தினம் தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

ஆனால், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி ரஷ்ய இராணுவம் வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தியது. இதில், நகரை விட்டு வெளியேற முயன்ற மக்களில் சிலர் நடுரோட்டில் பலியாயினர். பலர் காயமடைந்தனர். இதனால் சில மணிநேரங்களில் போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்வியடைந்து, மக்கள் மீண்டும் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்தனர்.

இந்நிலையில், 12ஆவது நாளாக நேற்றுமுன்தினம் ரஷ்ய இராணுவம் பயங்கரத் தாக்குதலை தொடர்ந்தது. குறிப்பாக, மைகோலைவ் பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும், குடியிருப்புகளில் ஏற்பட்ட தீயை அணைக்கும் முயற்சிகள் நடந்துவருவதாகவும் உக்ரைன் இராணுவம் தெரிவித்தது. அதேசமயம், தலைநகர் கீவ், மரியுபோல், கார்கிவ், சுமி ஆகிய 4 நகரங்களில் பொதுமக்களை வெளியேற்ற வசதியாக தற்காலிக போர் நிறுத்தத்தை ரஷ்யா அறிவித்தது. போர் நிறுத்தத்தின்போது, ரஷ்யா வான்வெளி உள்ளிட்ட எந்தத் தாக்குதலையும் நடத்தாது என உறுதியளித்தது.

ரஷ்ய ஜனாதிபதி புட்டினிடம் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் தொலைபேசி மூலம் பேசினார். அவர் விடுத்த கோரிக்கையை ஏற்று புட்டின் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சுமார் 2 இலட்சம் பேரை போர் நடக்கும் பகுதியிலிருந்து அப்புறப்படுத்த சர்வதேச செஞ்சிலுவை சங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்கிடையே, பெலாரசில் ரஷ்யா, உக்ரைன் சிறப்புக் குழுவினரின் 3ஆம் கட்ட போர் நிறுத்த பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் நடந்தது.

ஒருபுறம் போர் நிறுத்தம் பேச்சுவார்த்தை நடந்தாலும் மற்ற பிற நகரங்களில் ரஷ்ய இராணுவம் தொடர்ந்து குடியிருப்புகள், கட்டடங்களை குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல் நடத்திவருகிறது. போர் நிறுத்த அறிவிப்பால் கார்கிவ் நகரில் வீதிகளில் வந்த பொதுமக்கள் தங்கள் இடிந்துபோன குடியிருப்புகளை கண்டு கதறி அழுதனர். குடியிருப்புகளை ஒட்டுமொத்தமாக தகர்த்து உக்ரைனை மனதளவில் ரஷ்யா பலவீனப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. நேற்றுமுன்தின நிலைவரப்படி உக்ரைனிலிருந்து 17 இலட்சம் பேர் வெளியேறி, அண்டை நாடுகளில் அகதிகமாக தஞ்சமடைந்துள்ளனதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.




---

## 2ஆம் உலகப் போருக்கு பின் முதன்முறையாக மறைவிடத்திற்கு கொண்டுசெல்லப்பட்ட இயேசு சிலை



இரண்டாம் உலகப் போருக்கு பின் முதன்முறையாக உக்ரைனின் வீவ் நகரிலிருந்து இயேசு சிலையை மறைவிடத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த 1939ஆம் ஆண்டுமுதல் 1945ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் 2ஆம் உலகப் போர் நடந்தது. இந்தப் போரின்போது, உக்ரைனின் வீவ் நகரிலுள்ள ஆர்மீனியன் சேர்ச் ஒன்றில் இருந்த இயேசு கிறிஸ்துவின் சிலை, குண்டுவீச்சு உள்ளிட்ட தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் வகையில் ஆலயத்திலிருந்து நீக்கப்பட்டு மறைவிடத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

இந்நிலையில், தற்போது உக்ரைன் மீது ரஷ்யா உக்கிரத் தாக்குதல் மேற்கொண்டுவருகிறது. உக்ரைனும் தனியாளாக அதனை எதிர்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 2ஆம் உலகப் போருக்குப் பின் முதன்முறையாக உக்ரைனின் வீவ் நகரிலிருந்து இயேசு சிலையை மறைவிடத்திற்கு கொண்டுசென்றுள்ளனர். இதனை கிழக்கு ஐரோப்பிய ஊடக அமைப்பு நெக்ஸ்டா இன்று தெரிவித்துள்ளது.

---

## குடியிருப்புக் கட்டடத்தில் வீழ்ந்த 500 கிலோ ரஷ்ய வெடிகுண்டு



"இந்த பயங்கரமான 500 கிலோ ரஷ்ய வெடிகுண்டு செர்னிஹிவ் நகரிலுள்ள குடியிருப்புக் கட்டடத்தில் வீழ்ந்து வெடிக்கவில்லை.

பல அப்பாவி ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் ரஷ்ய காட்டுமிராண்டிகளிடமிருந்து எங்கள் மக்களைப் பாதுகாக்க எங்களுக்கு உதவுங்கள்! வானத்தை மூட எங்களுக்கு உதவுங்கள். எங்களுக்கு போர் விமானங்களை வழங்குங்கள்" - இவ்வாறு உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

---

## உக்ரைனிலிருந்து தனியாக 1,000 கி.மீ. பயணித்து ஸ்லோவாகியாவில் தஞ்சமடைந்த 11 வயதுச் சிறுவன்



உக்ரைனிலிருந்து 11 வயதுச் சிறுவன் தனியாக 1,000 கிலோமீற்றர் பயணித்து அண்டை நாடான ஸ்லோவாகியாவை அடைந்துள்ளார்.

ரஷ்யா நடத்திவரும் தீவிர தாக்குதலால் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டைநாடுகளான போலாந்து, ஸ்லொவாகியா, மோல்டோவா, ஹங்கேரி, பெலாரஸ் ஆகிய நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்து வருகின்றனர்.

இந்நிலையில், உக்ரைனிலிருந்து பெற்றோர் இல்லாமல் தனியாக 11 வயதுச் சிறுவன் 1,000 கிலோமீற்றர் கடந்து ஸ்லோவாகியாவுக்குள் நுழைந்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

உக்ரைனின் மிகப்பெரிய அணுமின் நிலையம் அமைந்துள்ள ஷப்ரிஹிஹியா நகரை ரஷ்யப் படைகள் கைப்பற்றியது. அந்தப் பகுதியில் அந்த 11 வயதுச் சிறுவன் தனது தாய் யூலியா வலோடிமிரிவ்னா பெசிகா மற்றும் குடும்பத்துடன் வசித்துவந்துள்ளார்.


ரஷ்யப் படைகள் நெருங்கி வருவதால் சிறுவனின் தாய் யூலியா தனது உறவினரை விட்டு வர முடியாது என்பதால் தனது மகனை மட்டும் அனுப்பிவைத்துள்ளார். தனது மகனின் கையில் தொலைபேசி இலக்கத்தை எழுதி, எல்லையை கடப்பதற்கான கடவுச்சீட்டையும் (பாஸ்போட்) மகனிடம் கொடுத்து ரயிலில் அனுப்பிவைத்துள்ளார்.

இதனையடுத்து, அந்தச் சிறுவன் ரயிலில் பயணித்தும், நடந்தும் பல்வேறு நபர்களின் உதவியுடனும் சுமார் 1,000 கிலோமீற்றர் தூரம் தனியாக பயணித்து நேற்றுமுன்தினம் ஸ்லொவாகியாவுக்குள் நுழைந்துள்ளார். ஸ்லொவாகியாவுக்குள் நுழைந்த அந்தச் சிறுவனை அந்நாட்டு அதிகாரிகள் வரவேற்றனர். மேலும், தனது மகனை வரவேற்ற ஸ்லொவாகியா அதிகாரிகளுக்கு சிறுவனின் தாய் யூலியா நன்றி தெரிவித்துள்ளார்.

---

## போர் எதிரொலியால் முறைப்படி திருமணம் செய்துகொண்ட இராணுவ தம்பதியர்





உக்ரைன் பிராந்திய பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றும் கீவ் நகரைச் சேர்ந்த லெசியா இவாஷென்கோ மற்றும் வலேரி ஃபிலிமோனோவ் ஆகிய இருவரும் சேர்ந்து வாழ்ந்துவந்த நிலையில், அதுவரையில் திருமணம் செய்துகொள்ளும் திட்டமே இல்லாமல் இருந்து வந்துள்ளனர்.

இந்நிலையில், போருக்கு மத்தியில் திருமணம் செய்து கொள்ள திடீர் முடிவெடுத்து கீவ் நகரின் நுழைவுப்பகுதியில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில் சக இராணுவ வீரர்களுக்கு மத்தியில் அவர்கள் திருமணம் செய்துகொண்டனர்.

வழக்கமான திருமண ஆடைகளை அணிந்துகொள்ளாமல் இராணுவ உடையிலேயே இருவரும் திருமணம் செய்துகொண்டனர். இவர்களது திருமணத்தில் கீவ் நகர மேயர் விட்டலி கிளிட்ஸ்கோ பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.

உக்ரைன் இராணுவத்தில் பணியாற்றிவரும் தம்பதியர்கள் 20 ஆண்டுகளாக திருமணம் செய்துகொள்ளாமலேயே சேர்ந்து வாழ்ந்துவந்த நிலையில் போர் எதிரொலியால் திடீரென திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்து, கீவ் நகருக்குள் நுழையும் பகுதியில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

# 24 வருடங்களின் பின்னர் பாக். மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் சமநிலையில் நிறைவு

சுற்றுலா அவுஸ்திரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்கு வந்தது.

24 வருடங்களின் பின்னர் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸி. கிரிக்கெட் அணியானது தலா 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் மற்றும் ஒருநாள், ஒரே போட்டி கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுகிறது. அந்தவகையில் முதல் தொடரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ராவல்பிண்டியில் ஆரம்பமாகி நேற்று நிறைவுக்கு வந்தது.

போட்டியில் நாணய சுழற்சியில்



வென்ற பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 476 ஓட்டங்களை பெற்ற நிலையில் இன்னிங்ஸை இடைநிறுத்தியது. அஸார் அலி 185 ஓட்டங்களை குவிக்க, இமாம்-உல்-ஹக் 157 ஓட்டங்களை குவித்தார். பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி 459 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. உஸ்மான் கவாஜா 97 ஓட்டங்களையும், மார்னஸ் லபுஷேன் 90 ஓட்டங்களையும், ஸ்ரீவ் ஸ்மித் 78 ஓட்டங்களையும் பெற்றனர்.

17 ஓட்டங்கள் முன்னிலையில் நேற்று 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்று இறுதிநாள் ஆட்டம் நிறைவடைந்த நிலையில் விக்கெட் இழப்பின்றி 252 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இதன் மூலம் போட்டி சமநிலையடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக இமாம்-உல்-ஹக் தெரிவானார். இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கராச்சியில் ஆரம்பமாகிறது.

# தன் சாதனையை முறியடித்த அஸ்வினுக்கு கபில் தேவ் வாழ்த்து



சுற்றுலா இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய சுழற்பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் 6 விக்கெட்டுகள் கைப்பற்றினார். இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் கபில் தேவின் 434 விக்கெட் என்ற சாதனையை அஸ்வின் முறியடித்தார்.

இதனால் அஸ்வினுக்கு அனைத்து தரப்பினரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். அஸ்வின் 85 போட்டிகளில் 436 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இந்நிலையில், தனது சாதனையை முறியடித்த அஸ்வினுக்கு கபில் தேவ் பாராட்டு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது,

இந்திய அணியில் சமீபகாலமாக அஸ்வினுக்கு சரியான முறையில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இருப்பினும் அவர் மிகப்பெரிய சாதனை படைத்துள்ளார். அவருக்கு தொடர்ந்து அணியில் இடம்கொடுத்திருந்தால் எப்போதோ 434 விக்கெட்டுகள் என்ற இலக்கைக் கடந்திருப்பார். அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் பல ஆண்டுகளாக என்னிடம் இருந்த 2ஆவது இடத்தை அஸ்வின் பிடித்தது மகிழ்ச்சியாக உள்ளது.

அஸ்வின் வியக்கத்தக்க வீரர். சிறந்த புத்தசாலித்தனமான பந்துவீச்சாளர். அடுத்து அவர் 500 விக்கெட் என்ற இலக்கை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். இதனை அடைய முயற்சிசெய்து கட்டாயம் சாதிப்பார் என உறுதியாக நம்புகிறேன். ஒருவேளை அதையும் தாண்டி அஸ்வின் அசத்தலாம் என குறிப்பிட்டுள்ளார்.

# மீண்டும் சம்பியனான லெய்லா

மெக்சிக்கோவில் நடைபெற்ற மான்டெரே ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், கனடா வீராங்கனை லெய்லா பெர்னாண்டஸ் மீண்டும் சம்பியன் பட்டத்தை கைப்பற்றி கிண்ணத்தை தக்கவைத்துக்கொண்டார்.

இறுதிப் போட்டியில் 20 வயதுடைய கொலம்பியாவின் கமிலா ஓசாரியோவுடன் மோதிய நடப்பு சம்பியனான 19 வயதுடைய லெய்லா பெர்னாண்டஸ் 6-7 (5-7), 6-4, 7-6 (7-3) என்ற செட் கணக்கில் 2 மணி 52 நிமிடம் போராடி வென்றார். மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில் அவர் 5 முறை கமிலாவிடமிருந்து சம்பியன்ஷிப் பொயின்ட்டை பறித்தது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டும் இத்தொடரில் லெய்லா பட்டம் வென்றிருந்தார்.



விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள கவாஸ்கரின் இரங்கல்

சுழற்பந்துவீச்சு ஜாம்பவான் ஷேன் வோர்ன் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திடீர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். அவரது மறைவுக்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அந்தவகையில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் தனது இரங்கலை தெரிவித்தார்.

இந்நிலையில், அவரது இரங்கல் சர்ச்சையை எழுப்பும் வகையில் அமைந்துள்ளது.

கவாஸ்கர் தெரிவித்துள்ளதாவது, வோர்னின் மரண செய்தியை அறிந்து அதிர்ச்சியடைந்தேன். கிரிக்கெட் விளையாட்டுக்காக அவரது பங்களிப்பை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் அவரை தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர் என சொல்லிவிட முடியாது. என்னைக் கேட்டால் அவரைவிட இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோர்தான் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள். இந்தியாவுக்கு எதிராக வோர்ன் விக்கெட் வீழ்த்திய சிறந்த சாதனைகளும் இல்லை. அவரது வாழ்க்கை முறைதான் அவரது உயிரிழப்புக்குக் காரணம் என கருதுகிறேன் - என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

குறித்த கவாஸ்கரின் கருத்துக்கு சமூக வலைத்தளத்தில் கண்டனம் தெரிவிக்கும் வகையில் பதிவுகள் இடப்பட்டு வருகின்றன.

# பங்கபந்து தொடருக்கான இலங்கை தேசிய அணியில் நிந்தவூரைச் சேர்ந்த இருவர்



(மாளிகைக்காடு நிருபர்)

2022 சர்வதேச பங்கபந்து தொடரில் பங்கேற்கும் இலங்கை தேசிய கபடி அணியில் நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழக இரு வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பங்கபந்து கபடி தொடரில் பங்கேற்கும் இலங்கை தேசிய கபடி அணிக்கான தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு டொரிங்டன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் மதீனா விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரர்களான அஸ்லம் சஜா மற்றும் முஹம்மட் ஷபிஹான் ஆகிய இருவரும் இலங்கை அணிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இப்போட்டி பங்களாதேஷின் டாக்கா நகரில் எதிர்வரும் 16ஆம் திகதிமுதல் 22ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. இத்தொடரில் பங்களாதேஷ், இங்கிலாந்து, கென்யா, நேபாளம், ஈராக் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இயற்கை மரணமடைந்த வோர்ன் – பிரேத அறிக்கை வெளியானது

அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் ஷேன் வோர்னின் பிரேத பரிசோதனை அறிக்கை வெளியானதில் வோர்னின் மரணம் இயற்கையான காரணங்களால் நிகழ்ந்ததென உறுதியானது.

இது தொடர்பாக தாய்லாந்து பொலிஸ் செய்தித் தொடர்பாளர் கிசானா பதானாசரோன் என்பவர் கூறும்போது, மரணம் இயற்கையாகவே நிகழ்ந்துள்ளது எனவும் வோர்னுக்கு ஆஸ்துமா மற்றும் இதயப் பிரச்சினைகள் இருந்ததை ஏற்கனவே அவரின் குடும்பத்தினர் உறுதிப்படுத்தியிருந்தனர் எனவும் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை முடிந்துள்ள நிலையில், இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் வோர்னின் இறுதிச் சடங்குகள் நடக்க வாய்ப்புள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்நிலையில், ஷேன் வோர்ன் மரணமடைந்த பிறகு அவரின் உடலை அம்பியூலன்ஸில் ஏற்றிச்செல்லும்போது பாதுகாப்பு விதிமீறல் நடந்ததாக ஃபொக்ஸ் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

அவரின் உடல் அம்பியூலன்ஸில் ஏற்றும்போது ஜேர்மன் பெண் ஒருவர் அம்பியூலன்ஸில் நுழைந்து, அங்கு தனியாக சில நிமிடங்கள்



இருந்ததாகவும், அந்தப் பெண் பூக்கள் கொண்டுவந்து வோர்னின் உடலுக்கு அஞ்சலி செலுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பாதுகாப்பு மீறல் குறித்து தாய்லாந்து பொலிஸ் விசாரணை நடத்தியதில், அந்த ஜேர்மன் பெண்ணுக்கு ஷேன் வோர்னை தனிப்பட்ட முறையில் தெரியும் என்பது தெரியவந்ததாகவும் அந்தத் தகவல் விபரிக்கிறது.

# பரபரப்பை ஏற்படுத்திய ரஷ்ய ஜிம்னாஸ்டிக் வீரரின் செயற்பாடு : விசாரணைகள் ஆரம்பம்




ரஷ்ய ஜிம்னாஸ்டிக் வீரரான இவான் குலியாக், ரஷ்ய இராணுவம் பயன்படுத்தும் ஞு என்ற அடையாளத்தை தமது ஆடையில் பொறித்திருந்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்டாரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஜிம்னாஸ்டிக் போட்டி மேடையில் உக்ரைனிய வீரர் அருகில் இருந்த சந்தர்ப்பத்தில், அவர் குறித்த சின்னத்தை வெளிப்படுத்தியிருந்ததாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. உக்ரைன் மீதான ஆக்ரமிப்பு நடவடிக்கைகளை ரஷ்யா முன்னெடுத்துள்ள நிலையில், அவரது செயற்பாடு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஜிம்னாஸ்டிக்ஸ் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் அவருக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாக இந்த வார இறுதி வரை மட்டுமே ரஷ்ய மற்றும் பெலாரஸ் வீரர்களுக்கு போட்டியில் பங்கேற்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என சர்வதேச ஜிம்னாஸ்டிக்ஸ் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

# உக்ரைன் வீராங்கனையை வீழ்த்தி சம்பியனான ஷுவாய்



பிரான்ஸில் நடைபெற்ற லியான் ஓபன் மகளிர் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில், சீன வீராங்கனை ஸாங் ஷுவாய் கிண்ணத்தை முத்தமிட்டார். இறுதிப்போட்டியில் உக்ரைனின் 21 வயதான டயானா யாஸ்ட்ரெம்ஸ்காவுடன் மோதிய 33 வயதான ஸாங் ஷுவாய், 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றியை வசப்படுத்தினார். இப்போட்டி ஒரு மணி 46 நிமிடத்துக்கு நீடித்தது. ஒற்றையர் பிரிவில் ஷுவாய் கைப்பற்றும் 3வது சம்பியன் பட்டம் இதுவாக அமைந்தது.

# சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் பல மாற்றங்கள்

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான முழுநேர அணித்தலைவராக கிரைக் எர்வின் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, டெஸ்ட் அணியின் தலைவராக ஷேன் வில்லியம்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் அனைத்து வகையான போட்டிகளுக்குமான உப தலைவராக ரெஜிஸ் செகப்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

அணியின் தலைவர்களில் இவ்வாறான மாற்றங்களை மேற்கொண்டதுடன், துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக லான்ஸ் குலூஸ்னர் மீண்டும் இணைக்கப் பட்டுள்ளார். இவர் ஏற்கனவே கடந்த 2016 தொடக்கம் 2018ஆம் ஆண்டுகளில் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக செயற்பட்டிருந்ததுடன், ஆப்கானிஸ்தான் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டார்.



இதேவேளை, சிம்பாப்வே அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக இருந்த ஸ்டுவர்ட் மட்ஷிகெனேரி தற்போது உதவி பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7